24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 107 | மாசி 30ஆம் நாள் | வியாழக்கிழமை | 14 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

# வடக்கு ஆளுநரால் ஐ.நாவில் ஏதும் செய்வதற்கு முடியாது

## அதுவொன்றும் தபால் நிலையம் அல்ல என்று மகிந்த சமரசிங்க சாட்டையடி



கொழும்பு, மார்ச் 14

ஐ.நா. செல்லும் வடக்கு ஆளுநர், வடக்கு மக்களின் மனுக்களை அங்கு முன்வைக்கவுள்ளார் என்று வெளிவரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை. அவரால் அங்கு அவ்வாறு செயற்பட இயலாது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க. >> 19

ஐ.நா.ம.உ. சபையில்

## இலங்கை சார்பு விளக்கத்துக்கு ஐவர் கொண்ட குழு நியமனம்!

கொழும்பு, மார்ச் 14

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை சார்பில் கலந்துகொண்டு விளக்கமளிப்பதற்காக 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோருக்கும் இடையில் நடை >> 19

## வீதி விபத்தில் பெண் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஒட்டுசுட்டானில் வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பப் பெண் சிகிச்சை பயனின்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். ஒட்டுசுட்டான் கணேசபுரத்தைச் சேர்ந்த சிவராசா - தியாகினி (வயது - 43) என்பவரே அவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் தனது கணவருடன் கடந்த 10ஆம் திகதி >> 19

## பொதுமக்களால் வடக்கு ஆளுநரிடம் ஜெனீவாவில் முன்வைக்கவேண்டிய கோரிக்கைகள் நேற்றுக் கையளிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஜெனீவாவில் முன்வைக்க வேண்டும் என்று தாம் கருதும் கோரிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடத்தில் பொதுமக்கள் நேற்றுக் கையளித்தனர். >> 03



## பன்னாட்டு குற்றவியல் நீதிமன்ற விசாரணையே நீதிக்கான வழி!

ஐ.நா. சபையில் வலியுறுத்தினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

ஜெனீவா, மார்ச் 14

இலங்கையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைத்தல் அல்லது பன் >> 19

## சிங்கங்களின் மத்தியில் ஒட்டகத்திடம் தலைமை

அரசதலைவருக்கு எதிராக பொன்சேகா கடும் தாக்கு

கொழும்பு, மார்ச் 14

ஒட்டகப் படைக்கு, சிங்கம் தலைமைத்துவம் வழங்கினால் போரில் ஒட்டகப்படை வெற்றிபெ >> 19

## கச்சதீவு அந்தோனியார் திருவிழா ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கச்சதீவு புனித அந்தோனியார் >> 19

## பால்மாவுக்கு விலைச்சூத்திரம்; அனுமதித்தது அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 14

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்குப் பொருத்தமான விலையைக் காணும் நோக்கில் நியமிக்கப்பட்ட குழுவால் விலை சூத்திரமொன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பன்னாட்டுச் >> 19

## ராஜீவ் கொலை குற்றவாளிகள் அனைவரையும் மன்னித்தோம்

*சென்னையில் வைத்துத் தெரிவித்தார் ராகுல்* >> 19

## பல்கலைக் கழக மாணவரின் போராட்டத்துக்கு ஆதரவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஊடாக பன்னாட்டுக் குற்றவியல் விசாரணை கோரும் பல்கலைக் >> 19

ஐ.தே.க. உறுப்பினர்கள் 'கப்சிப்'

## அரசதலைவர் அமைச்சுக்கான நிதியொதுக்கீடு நிறைவேற்றம்

கொழும்பு, மார்ச் 14

அரச தலைவர் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்பை எதிர்க்கப் போவதாக ஐ.தே.க. பின்வ >> 19

## இலங்கைப் படுகொலைகளுக்கும் காங்கிரஸுக்கும் தொடர்பில்லை

கண்டுபிடித்தார் ராகுல் காந்தி

சென்னை, மார்ச் 14

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் தமிழக மக்களுக்கு எம்மீது எவ்வித கோபமும் கிடையாது. இதற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் தொடர்பு உள்ளது என்று மக்கள் கருதவில்லை. அவ்வாறு தொடர்புகள் ஏதும் இல்லை என்று தெரிவித்தார் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி.

சென்னையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழக மக்கள் மீது காங்கிரஸ் கட்சி மிகுந்த அன்பு கொண்டிருக்கிறது. தமிழகம் உட்பட பல மாநில கலாசாரங்கள் பாஜக அரசால் சீரழிக்கப்பட்டுள்ளன. நாக்பூரை தலைமையிடமாகக் கொண்டு மத்திய அரசு இயங்க முடியாது. தமிழ >> 03

Member of
David Pieris
Group of Companies

எசட்லைன்

• குத்தகை
• கடன்வசதிகள்
• பக்டரின்
0114 700 100

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## சிம்மராசி அன்பர்களே!

*தலைமைப் பண்பால் சிறந்த சிம்ம ராசி அன்பர்களே! உங்களுக்கு இந்த ராகுகேதுப் பெயர்ச்சி, 13.2.2019 முதல் 31.8.2020 வரையிலும் எண்ணற்ற மாற்றங்களை அருளப்போகிறது.*




**ராகு பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்களின் ராசிக்குப் பன்னிரண்டில் அமர்ந்து காரியத்தடைகள், மன உளைச்சல், சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியாமை... என அடுக்கடுக்காகப் பல சிக்கல்களையும் நெருக்கடிகளையும் கொடுத்து வந்த ராகு, இப்போது ராசிக்கு இலாப வீட்டுக்கு வருகிறார்.

ஆகவே, புத்துணர்ச்சியும் புதிய முயற்சிகளில் வெற்றியையும் தருவார். இனி, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். சவாலான காரியங்களையும் சாதாரணமாகச் செய்து முடிப்பீர்கள். சேமிக்கும் அளவுக்குப் பணவரவு அதிகரிக்கும்.

குடும்பத்தில் அமைதி, சந்தோஷம் இருக்கும். உங்கள் வார்த்தைக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள். எதிரும் புதிருமாக சண்டை போட்டுக்கொண்டிருந்த கணவன், மனைவி உறவு இனி நகமும் சதையுமாக மாறும். வீண் செலவுகளைக் குறைத்து அத்தியாவசிய செலவுகளை மட்டும் செய்வீர்கள். வாரிசு இல்லாத தம்பதியருக்கு வாரிசு உண்டாகும். கடனையெல்லாம் அடைத்து முடிப்பீர்கள். பிள்ளைகள், கெட்ட நண்பர்களிடமிருந்து விலகுவார்கள். உயர்கல்வியில் வெற்றி பெறுவார்கள். மகனின் தனித்திறமைகளைக் கண்டுபிடித்து உற்சாகப்படுத்துவீர்கள். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும்.

குலதெய்வ வழிபாட்டை நிறைவேற்ற குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வருவீர்கள். பல காரணங்களால் இதுவரையிலும் தடைப்பட்டிருந்த வேலைகளை இனி முழு மூச்சுடன் செய்து முடிப்பீர்கள். வேற்று மதத்தினர், மொழியினரால் ஆதாயம் உண்டு.

அயல்நாட்டுப் பயணங்கள் வந்தால், அவற்றால் ஆதாயமும் உண்டு. சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்தும் உங்களுக்குச் சாதகமாக முடியும். வீட்டுக்குத் தேவையானப் பொருள்களை வாங்குவீர்கள். பெற்றோருடனும் உடன் பிறந்தவர்களுடனும் இருந்து வந்த கருத்துமோதல்கள், மனக் கசப்புகள் ஆகியவை நீங்கும் உறவுகள் இனிக்கும்.

கன்னிப்பெண்களுக்கு, இதுவரை இருந்து வந்த அலட்சியப்போக்குகள் மாறும். தோஷங்கள் மற்றும் தடைகள் நீங்கி கல்யாணம் நடக்கும். சகல விஷயங்களிலும் பெற்றோரின் ஆதரவு உண்டு. தடைப்பட்ட கல்வியை முடிப்பீர்கள்.

அரசியல்வாதிகள் இழந்த பதவியைப் பெறு வார்கள். அடிக்கடி தொந்தரவு தந்த வாகனத்தை மாற்றிவிட்டு புதிய வாகனத்தில் வலம் வருவீர்கள். அண்டை அயலாருடன் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி, அவர்களுடனான உறவு சுமுகமாகும்.

வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளைச் சமாளிக்க முடியாமல் தடுமாறினீர்களே! அந்த அவலநிலை மாறும். இனி, போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் அளவுக்குப் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். புது முகவர்கள் எடுப்பீர்கள். அனுபவம் மிகுந்த நல்ல வேலையாள்கள் வருவார்கள். கூட்டுத்தொழிலில் விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் இருந்துவந்த மோதல் போக்குகள் விலகும். வெகுநாள் களாக எதிர்பார்த்திருந்த சம்பள உயர்வு இப்போது கிடைக்கும். சக ஊழியர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் எல்லாம் மாறும். உங்களின் திறமைகள் வெளிப்படும். கணினித் துறையினருக்கு வேலைச்சுமை குறையும். அதிக சம்பளத்துடன் கூடிய புது வேலை கிடைக்கும். கலைத்துறையினர்களுக்கு வேற்று மொழி வாய்ப்புகளும் தேடி வரும். சம்பள மிகுதி கைக்கு வரும்.



**கேது பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்களின் ராசிக்கு ஆறாம் வீட்டில் அமர்ந்து ஓரளவு பண வரவையும், வி.ஐ.பிகளின் நட்பையும், கொஞ்சம் அலைச்சல், அழுத்தத்தையும் கொடுத்து வந்த கேது பகவான், இப்போது உங்கள் ராசிக்குப் பூர்வ புண்ணிய வீடான ஐந்தாம் வீட்டுக்கு வந்து அமர்கிறார்.

ஆகவே, பிள்ளைகளால் உங்கள் புகழ் கூடும். ஆனால் அவர்களால் வீண் அலைச்சலும், செலவும் உண்டு. அவர்களின் நட்புச் சூழலைக் கண்காணிப்பது நல்லது. கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி உணவு உட்கொள்வது நல்லது. அதேபோல், தொலைதூரப் பயணங்களையும் தவிர்க்கவும். உங்களில் சிலர், சொந்தமாக ஒரு வீட்டை வாங்குவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். மகான்கள் தரிசனமும் ஆசியும் கிடைக்கும். வீண் வதந்தி, பழிச்சொல்களிலிருந்து விடுபடுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும்.

ஆனால் தாய்வழி உறவினர்களுடன் மோதல் வரும். அவர்களுடன் வீண்விவாதங்களில் ஈடுபடவேண்டாம். இந்த ராசியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள் எந்த விஷயத்தின் பொருட்டு, உணர்ச்சி வசப்படாமல் சாதாரண மாக இருங்கள்.

வியாபாரத்தில் பற்றுவரவு உயரும். வேலையாள்களைக் கனிவுடன் நடத்துவீர்கள். அவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில்ரீதியாக பிரபலங்களின் நட்பு கிட்டும்.

கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களிடையே நிலவிவந்த பனிப்போர் நீங்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் இனி உங்களைத் தேடி வரும்.

மொத்தத்தில் இந்த ராகுகேதுப் பெயர்ச்சி, சில குழப்பங்களை அளித்தாலும், திடீர் யோகத்தை அளிப்பதாகவும் அமையும். அனுதினமும் துர்கைக்கு விளக்கேற்றி வழிபட்டு வாருங்கள். துன்பங்களும் தடைகளும் நீங்கி மகிழ்ச்சி பெருகும்.

*(தொடரும்)*






### வீடுகளுக்கு வாஸ்து அடிப்படையில்

# எந்த வர்ணங்கள் தீட்ட வேண்டும்?

மிகப்பழமையான ஒரு கலையாக வாஸ்து சாஸ்திரம் இருக்கிறது. நெடுங்காலமாகவே கட்டடங்களை கட்டும் போது பயன்படுத்தப்பட்ட இந்த வாஸ்து சாஸ்திர கலை அண்மைய வருடங்களில் மக்கள் அனைவரும் விரும்பி தங்களுக்கான வீடு உள்ளிட்ட பிற கட்டடங்களை கட்டும் போது பயன்படுத்துகின்றனர். இதில் வாஸ்து சாஸ்திரத்தின் அடிப்படையில் வீடுகளுக்கு எத்தகைய வர்ணங்கள் தீட்டுவது நன்மையளிக்கும் என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம். வீட்டுக்கு வரும் விருந்தினரை மனம் வருத்தப்படாதவாறு உபசரிப்பது நமது நாட்டின் பண்பாடு ஆகும். வீட்டுக்கு வந்து தங்கும் விருந்தனரின் அறையில் அவர்களின் மனதுக்கு இதம் தரும் வெளிர் நிற வண்ணங்களான மஞ்சள், பச்சை, நீலம், ஆரஞ்சு அல்லது லாவெண்டர் நிற வண்ணங்களை அந்த அறைகளுக்கு அடிக்க வேண்டும். வீட்டின் வரவேற்பு அறையில் வாஸ்துப்படி மஞ்சள், நீலம், பச்சை, பழுப்பு நிறம் போன்ற வண்ணங்களை தீட்டுவதால் வீட்டின் அழகை பிறரின் கண்களுக்கு மெருகேற்றி காட்டுவதோடு. அந்த அறையில் இருப்பவர்களின் மனதுக்கு இதம் தருவதாக அமைகிறது. சமையலறையில் வாஸ்துப்படி அழகான நிறங்களான வெள்ளை, மஞ்சள், ஒரேஞ், ரோஸ் பிங்க், சொக்லெட் மற்றும் சிவப்பு நிற வர்ணங்களை அடிப்பது சிறந்தது. உணவு உண்ணும் அறைக்கு வாஸ்துப் படி வர்ணம் அடிக்க விரும்புபவர்கள் வெளிர் நிறங்களைத் தான் அடிக்க வேண்டும். அதிலும் பிங்க், பச்சை மற்றும் நீலம் போன்ற வர்ணங்களை தீட்டுவதால் புத்துணர்வை தரும். சமையல், டைனிங் அறைகளுக்கு கருப்பு அல்லது கருப்பு மற்றும் வெள்ளை கலந்த நிறங்களை அடிக்காமல் தவிர்ப்பது நல்லது. நமது உடலை சுத்தப்படுத்திக்கொள்ள உதவும் குளியலறைக்கு வாஸ்துப்படி வர்ணம் அடிக்க விரும்பு பவர்கள் எப்போதும் புத்துணர்வு தரும் நிறங்களான வெள்ளை, வெளிர் நீலம் மற்றும் வெளிர் பச்சை போன்ற நிறங்களை தீட்டுவதால் குளியலறை உங்கள் உடல் மற்றும் மனதுக்கு உற்சாகத்தை தரும். குளியலறைக்கு கருப்பு அல்லது அடர் சிவப்பு நிறம் போன்றவற்றை தீட்டுவதை தவிர்க்க வேண்டும். எல்லோர் வீடுகளிலும் இருக்க வேண்டிய ஒரு அறை படுக்கை அறை. படுக்கை அறை தான் நாம் நாமாக இருக்கக்கூடிய ஓர் இடம். படுக்கை அறையில் மனதுக்கு அமைதியை கொடுக்கும் வெளிர் நிற வர்ணங்களை தீட்டுவது நல்லது. அதிலும் வாஸ்துப்படி படுக்கை அறைக்கு பிங்க், வெளிர் நீலம் மற்றும் வெளிர் பச்சை வர்ணங்களை அடிப்பது நல்லது. மேலும் குழந்தைகள் படுத்துறங்கும் படுக்கை அறைக்கு பச்சை நிறம் தீட்டுவது மிகவும் சிறந்தது.



**இம்முறை புத்தாண்டை முழுமையாக கொண்டாடி அபான்ஸ் பரம்பரை இல்லத்திற்கு வாருங்கள்!**



இலங்கையர்கள் பொதுவாக தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களை பரம்பரை இல்லத்தில் அல்லது தாய் வீட்டில் மகிழ்ச்சியோடும். ஒற்றுமையோடும் ஒன்றிணைந்து கொண்டாடுவது வழக்கம். அதுபோல் இம்முறை புத்தாண்டில் உங்கள் இல்லத்தை புதுமையாக்கவும். புதுப்பித்துக் கொள்ளவும். உறவினர்களுக்கான புத்தாண்டு பரிசுகளை வாரிவழங்கவும் உலகத்தரமான உற்பத்திகளை சலுகை விலைகளில் பெற்றிட இன்றே அபான்ஸ் பரம்பரை இல்லத்திற்கு வாருங்கள்.

இந்த பண்டிகைக் காலத்தில் அபான்ஸ் வழங்கும் உலகின் தலைசிறந்த இலத்திரனியல் மற்றும் வீட்டுப் பாவனை தளபாடங்களுக்கு 50% வரையான பிரம்மாண்ட தள்ளுபடி. உங்கள் இல்லத்திற்கு தேவையான மற்றும் உங்கள் சமையலறை பணிகளை சுலபமாக்கிடும் குக்கர் மற்றும் மைக்ரோவேவ் உள்ளிட்ட சமையலறைக்குத் தேவையான மின் உற்பத்திப் பொருள்கள். துரித குளிரூட்டலுடன் மின்சாரத்தை சேமிக்கும் குளிரூட்டிகள். பிரம்மாண்ட திரைகளைக் கொண்ட தொலைக் காட்சிகள். செவிகளை இனிமையாக்கும் ஓடியோக்கள் மற்றும் ஹோம் தியெட்டர்கள். மின்நுகர்வை குறைத்து மிகச் சிறந்த குளிர்ச்சியை தரும் இன்வெர்டர் வளிச்சிராக்கிகள். முழு உலகையும் உங்கள் உள்ளங்கையில் தந்திடும் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளும். மடிக்கணனிகளுடன் மேலும் பல உற்பத்திகளை இம்முறை புத்தாண்டு சலுகைகளாக பெற்றுக்கொள்ள முடியும்.

உங்களுக்குத் தேவையான சகல உற்பத்திகளையும் உங்கள் பணப்பைக்கு எந்த பாரமும் இல்லாமல் வட்டியில்லா இலகு தவணை கொடுப்பனவு முறையில் நாடளாவிய அபான்ஸ் கிளைகளில் உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் அடிப்படையில் HSBC, NDB, HNB, Nations Trust Bank, Amex, Commercial Bank உள்ளிட்ட முன்னணி வங்கிக் கடனட்டைகளில் 60 மாதங்கள் வரை வட்டியில்லா தவணை முறைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலும். உங்களிடமுள்ள பழைய உற்பத்திகளை புத்தம் புதிய உற்பத்திக்கு மாற்றிடக் கூடிய வசதி உள்ளதோடு. தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகளுக்கு பெறுமதியான பரிசுகள். வழங்கப் படுவதோடு. ஒருசில உற்பத்திகளுக்கு இலவச நீடித்த உத்தரவாதமும் வழங்கப்படும்.

அபான்ஸ் பரம்பரை இல்லத்தில் புத்தாண்டு சலுகைகளைப் பெற்றிட நீங்களும் இன்றே உங்கள் அருகில் உள்ள அபான்ஸ் காட்சியறைக்கு வாருங்கள். (C/32432)



**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்:3160 திகதி:2019.03.13 புதன்கிழமை

ஊதா

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 31 38 50 60 U — போனஸ் இலக்கம்: 57 — அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 34,326,230/-



**உத்தியோகபூர்வ முடிவுகள்**

අභිවෘද්ධි වාසනාව — அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் ▸ 229

சீட்டிழுப்பு திகதி ▸ 13.03.2019 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
| --- | --- | --- |
| S | 43 50 52 | 02 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி: ரூ. 14, 316, 044/=

2019.03.16 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk



**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 13.03.2019 | 2476 | பச்சை |

துலாம்

வெற்றி இலக்கங்கள்: 05 20 33 37

வியாழக் கிழமை வெற்றிப் பொதி: ரூ. 30, 20, 148/=

ரூ.5000 பணப்பரிசுகள்

வென்ற விசேட இலக்கம்: 35096

14.03.2019 திகதி வியாழக் கிழமை மண்ணிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 553

வர்ணம் : பச்சை

சீட்டிழுப்பு திகதி: 2019.03.13

இன்றைய ஜக்பொட் பரிசு: ரூ. 51,631,125/-

வெற்றி இலக்கங்கள்: 10 11 30 43 — ஆங்கில எழுத்து: J

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



# Lia Mehendi art's
**Professional bridal mehendi courses**



**யாழ் மண்ணில் முதன்முறையாக பிரபல Mehendi Artist ஆல் நடத்தப்படும் மெஹந்தி பயிற்சி வகுப்புக்கள்**

சுயதொழிலை விரும்பும். பகுதிநேர வேலைவாய்ப்பை நாடும் வெளிநாடு செல்ல இருக்கும் அனைத்துப் பெண்களுக்குமான ஓர் அரியசந்தர்ப்பம். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பயிற்சி முடிவில் வழங்கப்படும்.

**Duration 1month**
- handing mehendi corns
- drawing & filling basic designs
- drawing simple mehendi designs/ Arabic designs
- create bridal designs
- master techniques

Avenue - Amman road, Thirunelvely east, Jaffna. (077227 0821)

Time - Weekdays 18.03.2019 - 10am
Weekend 16.03.2019 - 11am

*Mehendi Artist - Lia ( master diploma in indian bridal mehendi) ( 5 years experienced )*

முன் பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்: **077 227 0821**

* மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்

Face Book: Lia Artistry - Jaffna



# சுதா மருத்துவமனை
கருத்தரிப்பு & மகளிர் நல மையம்

## குழந்தைப் பேறு இன்மையால் கவலைப்படுபவரா நீங்கள் ?

குழந்தைக்கான உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்

இந்தியாவின் சுதா மருத்துவமனையின் செயற்கை கருவூட்டல் தொடர்பான 30 வருட அனுபவம் கொண்ட வெற்றி வாய்ப்பை அதிகமாக தரும் தலைமை மருத்துவர். குழந்தை இன்மை சிகிச்சை நிபுணர் வைத்திய நிபுணர் பெண் வைத்தியர் யாழ்ப்பாணம் வருகிறார்

## இம்மாதம் 15ஆம் 16ஆம் 17ம் திகதிகளில்




யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் MEDI CARE 2019இல் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை

சுதா மருத்துவமனை கூடத்தில் வைத்தியரை சந்தித்து இலவச ஆலோசனையை பெறலாம்

Rukbins Hospital (Pvt) Ltd மருத்துவமனையில் (நெல்லியடி) மாலை 5 மணி முதல் 10 மணிவரை இலவசமாக முன்பதிவு செய்து, வைத்தியரை சந்திக்கலாம் தொடர்புகளுக்கு

076 739 3911 / 071 2915157 www.sudhahospitals.com


# வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

**குரும்பசிட்டி பொதுச்சந்தை கடைகளினை 01.04.2019 தொடக்கம் 31.12.2019 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2019**

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 14.03.2019 (வியாழக்கிழமை) தொடக்கம் 27.03.2019 (புதன்கிழமை) ந.ப 12.00 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 27.03.2019 (புதன்கிழமை) பிற்பகல் 01.00 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி : 27.03.2019 புதன்கிழமை பி.ப 3.00 மணி

| இல | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
| --- | --- | --- | --- | --- | --- |
| மயிலிட்டி உப அலுவலகம் | | | | | |
| 01 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,000.00 | 90,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 02 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 90,000.00 | 10,000.00 | 1,000.00 |

குறிப்பு : மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் அல்லது 0212241130 என்ற தொலைபேசியினூடாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.
தலைவர்
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்கு பிரதேச சபை

(IN 9633)
(14.17)

## ஜெனீவாவில்...


ஆளுநரின் பொதுமக்கள் தினம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தப் பொதுமக்கள் சந்திப்பித்தின் போது ஜெனீவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்க வேண்டும் என்று கருதும் தமது கோரிக்கைகளை பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் எழுத்துமூலம் நேரடியாக இதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் கையளித்தனர். மேலும் வடகிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்,உறவினர்கள் சார்பாக சங்கத்தின் பிரதிநிதிகளும் ஆளுநரைச் சந்தித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் சமர்ப்பிக்கவேண்டிய தமது கோரிக்கைகளை இந்தப் பொதுமக்கள் சந்திப்பின் போது கையளித்தனர். (ம-7)

## இலங்கைப்...

கம் சீனாவுடன் போட்டி போடும் அளவிற்கு உற்பத்தி துறையில் திறமை காண்பித்துள்ளது. தமிழகத்தை இந்தியாவின் உற்பத்தித் துறை மையமாக காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததும் மாற்றிக் காட்டுவோம் என்று ராகுல் காந்தி மேலும்

# அரசைத் தோற்கடிக்க வந்தவர்களுக்கு மூன்றில் ஒரு பெரும்பான்மை இல்லை!

## தலைமை அமைச்சர் ரணில் நாடாளுமன்றில் நேற்றுக் கிண்டல்



கொழும்பு, மார்ச் 14

அரசைத் தோற்கடிக்க வந்தவர்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்குகூட இல்லை. 71 பேரை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக்கூட வகிக்க முடியாத நிலையே இருக்கின்றது என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்தமை தொடர்பாகவும் கேட்கின்றார்கள். கடந்த முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கும் கூட்டமைப்பினர் வாக்களித்திருந்தனர். வரவு- செலவுத் திட்டத்துக்கு எதிராக 76 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. மக்கள் விடுதலை முன்னணியின் வாக்குகள் இல்லாமல் பார்த்தால் 71 வாக்குகளே இவர்களிடம் இருக்கின்றன. மூன்றில் ஒன்றுகூட கிடையாது. இப்போது கூச்சலிட்டுப் பயனில்லை. கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் இருந்ததில் அரைவாசி கூட நேற்று (நேற்று முன்தினம்) சபையில் இருக்கவில்லை.

மக்கள் வழங்கிய ஆணைக்கமையவே செயற்பட வேண்டும். மேலும் இன்று உயர் நீதிமன்றம் சுயாதீனமானது என்பதனை காட்டி இருக்கின்றது. கடந்த 10 வருடத்தில் நீதிமன்றம் சுயாதீனம் இல்லாமல் இருந்தது.

நாடாளுமன்றத்தில் 225 பேர் இருக்கின்றனர். ஆனால் 71 பேர் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர். 71 பேரை வைத்துக் கொண்டு அரசை மாத்திரமல்ல இவர்களுக்கு எதிர்க்கட்சி பதவியையும் பெற்றுக்கொள்ள முடியாது.

அரசமைப்புப் பேரவை, சுயாதீன ஆணைக்குழுக்கள் இருப்பதனாலேயே எம்மால் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியுமாக இருக்கின்றது. இப்போது மக்களின் விருப்பம் எங்கே இருக்கின்றது எனக் கேட்கின்றனர். மக்கள் எங்களுடனேயே இருக்கின்றனர். பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றோம். அதன் பெறுபேறுகள் தற்போது கிடைத்து வருகின்றன - என்றார். (ம)

---

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் ந. மகேஸ்வரன் அவர்களின் தாயார்

**நடராஜா மகேஸ்வரி**

12.03.2019 அன்று காலமானார். இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
**ஆசிரியர் வட்டம்.**

---

### 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

**சுகுணதாஸ் டெல்வின் டெறிற்ரா**

பிறப்பு 17.09.1972 இறப்பு 14.03.2017

ஈராண்டுகள் ஓடிவிட்டன
உம் நினைவுகளைச் சுமந்தபடி
ஆயிரம் உறவுகள் சூழ இருந்தும்
உம் இடத்தை யாராலும் நிரப்ப முடியவில்லை

அன்பு வைத்த நீர் இன்று எம்மோடு இல்லை
எம் மெல்லிய புன்னகைக்குப் பின்னால்
புதைந்து கிடக்கும் மனதின் வலிகளை
உம்மையன்றி யார் அறிவார் அன்னையே.....

**18/1, ஆசீர்வாதம் லேன்,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

---

### கண்ணீர் அஞ்சலி



மலர்வு 03 . 11 . 1937

உதிர்வு 12 . 03 . 2019

கச்சார்வெளி பளையை வசிப்பிடமாகக் கொண்ட
பளை வர்த்தகர் சங்க முன்னாள் தலைவரும்
அம்பாள் கபே உரிமையாளரும் சமூகத் தொண்டனுமாகிய

**நாராயணபிள்ளை பூபாலசிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்த தகவல் கேட்டு பெரும்
துயரடைகின்றோம்.

நன்மக்களைப் பெற்றெடுத்து
நல்லதே நினைத்து நற்செயல்புரிந்து
கல்விக்கும் நோய்பிணி தீர்ப்புக்கும்
சீரிய பணிசெய்த பண்பாளர்
எல்லாப் பிள்ளைகளையும் தம்பணி தொடர
வழிப்படுத்தி விழிமூடினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் குடும்பத்தினர் தேறிடவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**பளை மத்திய கல்லூரி, பளை**

---

### மரண அறிவித்தல்

**பேதுருப்பிள்ளை லூயிஸ்குயின்ரன் பேவிதாஸ் (ராசு)**



மாதகலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுருப்பிளளை லூயிஸ்குயின்ரன் பேவிதாஸ் (ராசு) 12.03.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை - மேரி எலன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யோன்மலாய் - லில்லி தம்பதியரின் அன்பு மருமகனும், சலமோன் ஆரோக்கியநாதர் (பப்பா) - ஜெயமேரி (திரவியம்) தம்பதியரின் அன்பு பெறா மகனும், யெசிந்தாவின் அன்புக் கணவரும், சுதாகரன், சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோமையார் கோயில் வீதி,**
**மாதகல்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**021790 1659**

---

### மரண அறிவித்தல்

**செல்லப்பா சதானந்தன் (J.P)**

**(ஓய்வுநிலை அதிபர், முன்னாள் கடைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்க உபதலைவர், முன்னாள் மத்தியஸ்தர் சபை உறுப்பினர், கரவெட்டி.)**



தோற்றம் 23.07.1940 மறைவு 13.03.2019

அல்வாய் செல்ல இல்லத்தை பிறப்பிடமாகவும், ஆனந்தபவனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சதானந்தன் (J.P., ஓய்வுநிலை அதிபர்) நேற்று (13.03.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கமுத்து தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராசா - தங்கம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற வள்ளிநாயகியின் (இராசகுமாரி) அன்புக் கணவரும், செல்வானந்தன் (அதிபர், யாழ்/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), சர்வானந்தன் (முகாமையாளர், மக்கள் வங்கி - வல்வெட்டித்துறை), தேவகி (ஆசிரியர், யா/அல்வாய்ஸ்ரீலங்காவித்தியாசாலை), கருணானந்தன் (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, அட்டாளச்சேனை), றஞ்சிதா (கிராம அலுவலர், அராலி வடக்கு) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபாலச்சந்திரன் (உரிமையாளர்,ராம்சில்க்)றிச்சேட்(ஆசிரியர்,யாழ்ப்பாணக்கல்லூரி,வட்டுக்கோட்டை), மாலாவதி (ஆசிரியர் யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி), சுஜாதா (ஆசிரியர், யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பாலினி (சுற்றாடல் உத்தியோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, யாழ்ப்பாணம்), திருமதி சந்திரோதயம் யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும்ராஜானந்தன்(தேசியகல்வியியற்கல்லூரி,யாழ்ப்பாணம்),ஞானானந்தன், மைத்ரேஜி, சாகித்தியானந், ஆதித்தியானந், சுருதிகா, சங்கரானந், ரக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லப்பாக்கியத்தின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், விஜயரத்தினம் மற்றும் ஜெயரத்தினம், அரியரத்தினம், திருமதி இரத்தினகுமாரி ஜெயவீரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் திருமதி இந்திரா அசோக்காந், திருமதி ரம்யா சுபேந்திரா (ஆசிரியை, யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை), திருமதி கிருஷிகா அச்சுதன் (லண்டன்) ஆகியோரின் பெரியதந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.00 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 652 9036, 077 302 1910,**
**077 200 4307**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தொழில்நுட்ப பீடம் - அறிவியல் நகர், கிளிநொச்சி.**

**2017/2018 கல்வியாண்டு புதுமுக மாணவர்களுக்கான**
**கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட 2017/2018 கல்வியாண்டு புதுமுக (முதலாம் வருட) மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 18.03.2019 திங்கட்கிழமை மீளவும் ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகிறோம். விடுதி வசதிகள் 17.03.2019 இல் இருந்து வழங்கப்படும்.

**பதிவாளர்**

(C 9634/15/17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 02 . 1964

மறைவு 23 . 02 . 2018



### அமரர் அப்பாப்பிள்ளை சுந்தரம்

ஆண்டொன்று கழிந்தது அப்பா - இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம் - பிள்ளைகள்

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கி
ஆண்டொன்று சென்றாலும்
என்னைவிட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும் - மனைவி

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்..

விசுவெட்டி
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி காளி கோவில் அருகாமையில் அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 412 9275**

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சி நெல்லியடி ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன், கம்பி வேலை செய்பவர், சட்டறிங் வேலை செய்பவர்கள், கூலியாள்கள் உடன் தேவை.

**076 826 4859, 077 712 0945**

## வீடு வாடகைக்கு

ஆடியபாத வீதியில் (மருத்துவ பீடத்திற்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில்) வீடு வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். அரச உத்தியோகத்தர் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**077 728 3692**

## தேவை

யாழில் இயங்கும் பிரபல்யமான விருந்தினர் விடுதிக்கு யாழ் உணவு தயாரிப்பதற்கு பெண் தேவை. வாகன சாரதி தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு:

**077 221 5167**

உதயன்
விளம்பரத்தொடர்புகளுக்கு
021 493 1111
advt@uthayan.com

## 45ஆம் நினைவு நாள் அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 29.01.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது அன்புத் தெய்வம்

### அமரர் கந்தசாமி ஸ்ரீகாந்தன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.03.2019), வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
நாலுகால் மடம் (லட்சுமி வெதுப்பகம்)

குடும்பத்தினர்.
077 218 9718

(CS 23964)(14,17)

## மரண அறிவித்தல்

### ஜோசப் அன்ரன் லியோ அன்ரசன்



யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட லியோ அன்ரசன் 09.03.2019 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் அன்ரன் (பொலிஸ் சார்ஜன்) - புளோரன்ஸ் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விக்னேஸ்வரன் - இராக்கினியம்மா தம்பதிகளின் மருமகனும் உதயராணி யின் அன்புக் கணவரும் லியோ ஆனல்ட் (B.Tech), லியோனி தீப்தி (BPT), லியோ அன்ரனி (8th Std.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லியோ குயின்ரன் (கனடா), லியோ பிரின்ஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் உமாராணி (இத்தாலி), பாஸ்கரன் (இத்தாலி), புனிதராணி (நீர்கொழும்பு), தர்மி (கனடா), ஆன்சி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சுரேஸ்குமார் (இத்தாலி), பேட்ரம் சிசில் (நீர்கொழும்பு), செரின் (இத்தாலி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் மெல்வின், ஆஞ்சலோ, சயோன், கெவின் ஆகியோரின் பெரியப்பாவும் ப்ரைசன், பபிஸனா, ஸ்ரெபான் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (14.03.2019) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு இந்தியாவில் வளசரவாக்கம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நல்லாயன் வீதி, சில்லாலை. (CS 23995/15/17) வி.இராக்கினியம்மா.

## மரண அறிவித்தல்

உதிப்பு 01 . 07 . 1978



உதிர்வு 12 . 03 . 2019

### நாகரத்தினம் மயூரன் (காந்தன்)

கரம்பகம் மிருசுவிலைச் சேர்ந்த நாகரத்தினம் மயூரன் ( காந்தன் ) நேற்றுமுன்தினம் (12.03.2019 )செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. கந்தப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியினர் மற்றும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியினர் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் தனபாலசிங்கம் - புஸ்பராணி தம்பதியினரின் அன்பு மருமகனும் சுயேந்தினியின் அன்புக் கணவரும் ருஷானா ஜஸ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான உஷாநந்தினி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவமாலினி (கரம்பகம்), சுதாகரன் (அவுஸ்திரேலியா), சுதர்சன் (முன்னாள் உறுப்பினர் சாவகச்சேரி நகரசபை ), சுகுமார் ( சாவகச்சேரி நகரசபை ), தர்சினி , தீபனா .சுபாஷினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற விசாகரத்தினம் மற்றும் வசந்தா தம்பதியினரின் பெறாமகனும் ரேமன், குபனி, நிருஷ் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2019) பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

கரம்பகம்,
மிருசுவில். (IN 9631)(14,17)

தகவல்:
த.சுதர்சன் (மைத்துனர்)

**077 772 9453**

## நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

### சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம்

**ஓய்வுபெற்றநிர்வாகஉத்தியோகத்தர்**
**(தெல்லிப்பழைஆதாரவைத்தியசாலை)**



எங்கள் அன்புத் தெய்வம் 2019.02.12 செவ்வாய்க்கிழமை மீளாத்துயில் கொண்டதறிந்து அக்கணத்தில் ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டிய உறவுகள். அமரருக்கு அஞ்சலி செலுத்தியும் இறுதி யாத்திரையில் பங்குகொண்டும் தங்கள் அன்பை வெளிப்படுத்திய அன்புள்ளங்கள். பதாகைகள். மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செய்த அன்பர்கள்.தொலைபேசி.மின்னஞ்சல். முகநூல் ஊடாகத் துயர் பகிர்ந்து கொண்ட அன்புக்குரியவர்கள். தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தொண்டர்கள். நாம் தவித்திருந்த வேளை தோள் கொடுத்து ஆறுதல் கூறிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள்.

எங்கள் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 16.03.2019 சனிக்கிழமை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானஅன்னபூரணி மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அப்பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

பன்னாலை,
தெல்லிப்பழை. (CS 21383)(11,17)

குடும்பத்தினர்.
தொ.பே. 0217200427

## மரண அறிவித்தல்கள்

தோற்றம்
03 . 11 . 1937



மறைவு
12 . 03 . 2019

# நாராயணபிள்ளை பூபாலசிங்கம்

பளை கச்சார் வெளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை பூபாலசிங்கம் 12.03.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னலெச்சுமியின் அன்புக் கணவரும், பவளஇரத்தினம், பவளராசா (இத்தாலி), பவளசோதி, பவளேந்திரன் (பிரான்ஸ்), பவளானந்தன் (பிரான்ஸ்), பவளதாசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பவளகாந்தன் மற்றும் பவளரூபன் (பிரான்ஸ்), பவளகுமரன் (பிரான்ஸ்), பவளேஸ்வரன், பவளாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானசுந்தரம், சுப்பிரமணியம், சிவநாதன், சிவபாலன், லச்சுமிபிள்ளை, காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைகுந்தவாசன் (ஓய்வுபெற்ற CTB சாலை பரிசோதகர்), வைகுந்தநாதன் (வர்த்தக சங்க தலைவர் - பளை), ஜெகதாஸ், றூபவதனி, கல்பனா, சந்திரபிரபா, கமலாதேவி, நயனி, அருந்தினி, வித்தியா ஆகியோரின் அன்பு மாமனும், காயத்திரி (நெடுங்கேணி பிரதேசசபை), கார்த்தீபா (ஆசிரியை - புன்னை நீராவி), கஸ்தூரி (கிராம சேவையாளர் - பச்சிலைப்பள்ளி), காண்டீபன் (பிள்ளையார் விலாஸ்), கஜேந்திரன் (பொறியியலாளர்), கலையரசி (மொறட்டுவ பல்கலைக்கழகம்), றூபிகா (பிரான்ஸ்), டயானி (லண்டன்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), யாழினி, கோகுலகுமார் (அம்பாள் சொப்), தமிழினி பிரான்சை சேர்ந்தவர்களான றஜிதா, மலர்விழி, பிரசாந், கயல்விழி, அகழ்விழி, பபிதா, பிரணவன், பிற்தா, றொஷான், அனுஸ்கா, அனுயன், அங்குரன், அக்ஷயா, அர்சயன் பளை மத்திய கல்லூரி மாணவர்களான - கௌதமன், கௌதமி, கௌசிகா, டிறிபேக் கல்லூரி மாணவர்களான - சிந்துயன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், லண்டனைச் சேர்ந்தவர்களான - கிர்த்திசன், அஸ்மிதா, அஸ்வீனா, பிரான்ஸ்சை சேர்ந்தவர்களான - காசினி, சுரபி, அகன், பிறநீசன், பிரணாவ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மலையான் காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சார் வெளி, பாளை.** **தகவல்: குடும்பத்தினர்** (cs 23659)

**077 255 5861**

பிறப்பு
04 . 06 . 1946



மறைவு
12 . 03 . 2019

# திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்

நவாலி களையோடை அம்மன் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் 12.03.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் - இலக்ஸ்மி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருகமகளும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நிர்மலாதேவி, புவனேஸ்வரி, மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரட்ணம், தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மனோகரி (லண்டன்), ஈஸ்வரி, டலாகன் (கரன்), சுமதி, சுபாஸ்கரி (லண்டன்), சுபத்திரை ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தேவரஞ்சித் (லண்டன்) மற்றும் இளங்கோவன், அருட்செல்வன், ராஜ் (லண்டன்), வினோஷா ஆகியோரின் அன்பு மாமியும், சௌமியா (லண்டன்), தேவஜன் (லண்டன்), கேதீஸ்வரன் (சுவிஸ்), விதுஷன், லீஷான், ஸஸ்மிதா (லண்டன்), லித்தீசன் (லண்டன்) ஆகியோரின் பேர்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆரியம் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கண்ணகை அம்மன் வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்** (cs 23660)

**077 791 7710**

## வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில்
## கோப்பாய்
## விசேட பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி ஆலயம் நிர்வாகம் சம்பந்தமான சில முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்பட வேண்டியுள்ளதால் **07.03.2019** இல் இடம் பெற்ற பரிபாலன சபைக்கூட்டத்தில் விசேட பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டுவதெனத் தீர மானிக்கப்பட்டுள்ளது.

எனவே சகல அங்கத்தவர்களையும் இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**காலம் : 24.03.2019 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 3.00 மணி**
**இடம் : ஆலய கல்யாண மண்டபம்**

**மா. கருணைநாதன்**
**உபதலைவர்.**

(cs.23978) (13.17)

**சோ. விஸ்வலிங்கம்**
**செயலாளர்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

| இல. | ஆதன பெயர் | ஆதனம் அமைந்துள்ள இடம் | ஆதன உரிமையாளர் | ஆதனத்தின் அளவு |
|---|---|---|---|---|
| 1. | கள்ளியோடை | கோப்பாய் தெற்கு, கோப்பாய் (முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்திற்கு அருகாமையில்) | திரு. வைரமுத்து சந்திரகுமாரன் | நிலப்பரப்பு 8 குளி 17.37 |

மேற்படி ஆதனம் ஆதன உரிமையாளரால் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளதாக எம்மிடம் அறியத்தந்ததன்படி இவ்வாதனத்தை பல்கலைக் கழகம் தனது கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. அதனால் இவ்வாதனம் தொடர்பில் அக்கறை. உரித்து உள்ள எவரும் இருப்பின் 21.03.2019 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

(in.9628) (13.17)

## மரண அறிவித்தல்



# திருமதி இராஜேஸ்வரி (சின்னமணி) திருஞானசம்பந்தர்

நீர்வேலி வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி திருஞானசம்பந்தர் 13.03.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கமணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர்(பொன்னு)இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பாமினி, குமுதினி, தயாஜினி (ஜேர்மனி), தேவதர்சன் (பிரான்ஸ்), சுதர்சன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தெய்வராஜா, மகேந்திரம், இராசேந்திரம், புவனேஸ்வரி(ஜேர்மனி), இலட்சுமிதேவி (பிரான்ஸ்), இரவீந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பஞ்சாட்சரம்(பாரின்), சதீஸ்குமார், சுபாஸ்கரன்(ஜேர்மனி), ஆருண்யா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெரூஷா, ஜெமீமாஜோதி, சஞ்ஜீவா, தரணிகா, மாகீஸ், ராகீஸ், மரிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராஜேஸ்வரி, மணிமேகலை, நவமலர், காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் கிருஷ்ணவேணி, சந்திரலிங்கம், குணமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2019) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குறுக்கு வீதி,**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

(CS 23983)(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# ES Printers
## Rubber Stamp
**450/=**

021 492 7471, 021 492 7472
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com

சென்னை, பாண்டிச்சேரி, ஆந்திரா & பங்களாதேஷ் ஆகிய இடங்களில் பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கி கொண்டு இதுவரை 23,000 திற்கும் மேற்பட்ட குழந்தையில்லா தம்பதியர்களுக்கு அதிநவீன சிகிச்சையின் மூலம் குழந்தைப்பேறு அளித்துள்ள

உலகப் புகழ்பெற்ற

CFC
CHENNAI FERTILITY CENTER

## சென்னை குழந்தை பேறின்மை சிகிச்சை மையம்

medicare

## யாழ்ப்பாணத்தில் இலவச மருத்துவ ஆலோசனை (Medical Expo)



Date : 15, 16 & 17 March 2019
Time : 10am to 7pm
Place : VEERASINGAM HALL, JAFFNA, SRILANKA
Stall No.: A32, A33, A34

Dr. VM.THOMAS, Ph.D., FSAB.,
Embryology Tycoon & ICSI Maestro,
Chennai Fertility Center - Chairman.

**சிகிச்சை முறைகள் :**

- குழந்தையில்லா தம்பதியரின் முழுமையான பரிசோதனைகளும், ஆலோசனைகளும்.
- IUI / IVF / ICSI / IMSI சிகிச்சைகள்.
- TESA / TESE / MESA / PESA சிகிச்சைகள்.
- சினைப்பையில் உள்ள நீர்கட்டிகளை அகற்றுதல்.
- கருக்குழாய் அடைப்புகளை கண்டறிதல்.
- எண்டோ மெட்ரியோசிஸ் பிரச்சனையை சரி செய்தல்.
- கருப்பையில் உள்ள கட்டி & குறுக்குச் சுவர் (Septum) அகற்றி சரி செய்தல்.
- 4-D ஸ்கேன் மூலம் கருப்பை, சினைப்பைகளின் தோற்றம், செயற்பாடு, இரத்த ஓட்டம் அறிதல்.
- உயிரணுக்கள் பரிசோதனை.
- விந்துக்குழாயில் அடைப்பு நீக்கும் அறுவை சிகிச்சை, விந்தணு சுத்திகரிப்பு (Sperm Process).
- ஹார்மோன் குறைபாடுகளை கண்டறிதல் அதற்கான சிகிச்சை முறைகள்.

முகாமில் கலந்து கொள்பவர்களுக்கு மட்டும் IVF / ICSI சிகிச்சைகளுக்கு சிறப்பு கட்டணச் சலுகை அளிக்கப்படும்

ஸ்ரீ லங்கா 071 927 6170
+91 98 41165197

WORLD RECORD 23000+ IVF/ICSI BABIES SUCCESSFULLY DELIVERED WORLDWIDE

முகாமின் சிறப்பம்சங்கள் :

குழந்தையில்லா தம்பதியர்களுக்கு இலவச ஆலோசனை மற்றும் லேப்ரோஸ்கோப்பி, ஹிஸ்ட்ரோஸ்கோப்பி சிகிச்சைகளுக்கு சிறப்பு கட்டணச் சலுகை

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி உங்கள் வாழ்வில் வளம் பெற வாருங்கள்

## CHENNAI FERTILITY CENTER

New No. 79 / Old No. 129, Nelson Manickam Road, Aminjikarai; Chennai - 600 029
**+91 90252 50000, +91 44 64582299**

Website : www.chennaifertilitycenter.com
Email : chennifertilitycenter@yahoo.com / thomasivf@gmail.com

### வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர், கச்சேரி, நல்லூர், திருநெல்வேலி பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு-0710938967

### வாகனம் விற்பனைக்கு

Mahendra bolero, 29500Km ஓடிய வாகனம் விற்பனைக்குண்டு.
077 852 8100
(CS 239869) (14.17)

### பெயர் மாற்றம்

கரிக்கோட்டுக்குளம் பூநகரியில் வதியும் யூஜின் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை டோமினிக் யூட்சியின் என மாற்றுவதோடு இப்பெயரை சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

டோமினிக் யூட்சியின்.
(CS 23759) (14.17)

### பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் 2 வருடம் வீட்டில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 565 9888/ 077 737 6622

Shifa Hospitals
Since 1971

மருத்துவ சேவையில் **48** ஆண்டுகள்

## யாழ்ப்பாணத்தில் (Jaffna) நடைபெறும் மாபெரும் மருத்துவ கண்காட்சியில்...

தென் தமிழகத்தில் 48 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த
திருநெல்வேலி

## ஷிபா மருத்துவமனை

பங்கேற்பு

**கீழ்கண்ட சிறப்பு சிகிச்சைகள் சலுகை கட்டணத்தில் செய்யப்படுகின்றன**

- ANGIOPLASTY (ஆஞ்சியோபிளாஸ்டி)
- OPEN HEART SURGERY (பைபாஸ் அறுவை சிகிச்சை)
- CANCER SURGERIES (புற்றுநோய் அறுவை சிகிச்சைகள்)
  (BREAST, BLADDER, UTERUS, CERVIX, SKIN, STOMACH, MOUTH, PROSTATE)
  (மார்பகம், நீர்ப்பை, கர்ப்பப்பை, கர்ப்பப்பை வாய், தோல், வயிறு, வாய், ப்ராஸ்டேட்)
- HIP & KNEE REPLACEMENT (இடுப்பு & மூட்டு மாற்று அறுவை சிகிச்சை)
- BRAIN AND SPINE SURGERIES (மூளை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைகள்)
- GENERAL & LAPAROSCOPIC SURGERY (பொது மற்றும் நுண்துளை அறுவை சிகிச்சை)
- KIDNEY TRANSPLANT (சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை)
- KIDNEY STONE (ESWL) (சிறுநீரக கல் உடைப்பு சிகிச்சை)
- PROSTATE ENLARGEMENT (ப்ராஸ்டேட் அறுவை சிகிச்சை) (TURP)
- DIALYSIS (டயாலிசிஸ்)
- VARICOSE VEIN - RFA (கால் நரம்பு சுருட்டு லேசர் சிகிச்சை)

முன்பதிவுக்கு
07 655 67178 | +91 98849 58707 | +91 94431 52816

நாள் 15 வெள்ளி 16 சனி 17 ஞாயிறு மார்ச் 2019 10 AM to 7 PM
STALL No A17
இடம் : வீரசிங்கம் ஹால், யாழ்பாணம்.

info@shifahospitals.com www.shifahospitals.com

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## ரிவர் பிரான்ட்
துத்தநாக அலுமினியக் கூரை

துத்தநாக அலுமினிய நிறமுள்ள மற்றும் நிறமற்ற கூரைகள்/கூரைத்தகடுகள்
கவசாக்கி ஸ்ரீல் - ஜப்பான்
வர்த்தக நாமத்தின் கீழ் தயாரிக்கப்பட்டவை








என். வைத்திலிங்கம் குழுமம்
1922 தொடக்கம் நம்பிக்கை வென்றது

இல.70, கே.சிறில் சீ. பெரேரா மாவத்தை, கொழும்பு 13, தொலை: 011-2433 143/011-2 327 669
ஹொட்லைன்: 011-4323100, பெக்ஸ்: 011-2435649 ஈமெயில்: sales@nvclgroup.com

கிளைகள்
கொழும்பு: 448-450, பழைய சோனகர் வீதி, கொழும்பு 12, தொலை: 2-327 488/4-344 144
யாழ்ப்பாணம் - ஏகவிநியோகஸ்தர், தரண் டிரேடர்ஸ்,
130, 132, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணம், அலைபேசி - 021 222 2664
இரத்மலானை: தொலை: 4-380 859/2-605 092
வவுனியா: தொலை: 024-492 5809 பெக்ஸ்: 024-222 6548
நாடெங்கிலும் உள்ள அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

www.nvclgroup.com

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மீண்டும் ஒரு திருத்தம் வேண்டவே வேண்டாம்

இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அடித்தளமாக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட புதிய அரசமைப்பு சாத்தியமில்லை என்றாகிவிட்ட நிலையில், அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் திருத்தம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பிலான நகர்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே ஒரு தடவை அரசதலைவர், தலைமை அமைச்சர், கூட்டமைப்புத் தலைவர் உள்ளிட்டவர்கள் கூடிப் பேசியுள்ளனர். அதில் மகிந்த தரப்பினர் மற்றும் ஜே.வி.பியினர் கலந்து கொள்ளவில்லை. இந்த நிலையில் அடுத்த வாரம் இந்தக் குழு மீண்டும் கூடிப் பேசவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த கூட்டத்தின்போது ஒரு குழு நியமிக்கப்பட்டது. புதிய அரசமைப்புத் தொடர்பான முன்வரைவில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களில் எல்லாத் தரப்புகளாலும் இணங்கப்பட்டவற்றைப் பட்டியலிட்டு வழங்குவதே இந்தக் குழுவின் பணி. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஏப்ரகாம் சுமந்திரன், அமைச்சர் ராஜித சேனாரத்ன, சரத் அமுனுகம, டிலான் பெரேரா ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழு அறிக்கை ஒன்றை முன்வைத்து அதனை அரசதலைவரும் ஏற்றுக்கொண்டால் நடக்கக்கூடியது என்னவென்றால் மீண்டும் ஓர் அரசமைப்புத் திருத்தம் வருவதுதான். அதிலும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் போன்ற கட்சிகளிடையே முரண்பட்ட கருத்துக்கள் நிலவும் விடயங்கள் தவிர்க்கப்பட்டு ஏனையவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய ஓர் அரசமைப்புத் திருத்தம் வரக்கூடும். அத்தகையதொரு திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைக் கொண்டே நிறைவேற்றிவிட முடியும். தற்போதைய ஆட்சிக்கே அந்தச் சாதாரண பெரும்பான்மை உண்டு என்றபோதும், அரசதலைவர் தலைமையிலான சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்வது இன்னும் பலம் என்று கருதப்படுவதால் அவரோடும் பேச்சு நடத்தப்படுகின்றது. அத்தகையதொரு நிலை வந்தால் ஜே.வி.பியும் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்தும் என்பதை இரு தரப்புக்களுக்கும் இடையே கடந்த திங்களன்று நடந்த சந்திப்புப் பிரதிபலித்திருக்கிறது.

அரச தலைவர் தலைமையிலான சுதந்திரக் கட்சியையும் இணைத்துக்கொண்டு மேற்கொள்ளக்கூடிய இத்தகையதொரு முயற்சியில் மகிந்த அணியினர் நேரடியாக இறங்காவிட்டாலும், அதனை முழுமையாக எதிர்த்தாலும் அவர்களின் கணிசமான செல்வாக்கு இருக்கும் என்பதையும் புறந்தள்ளிவிட முடியாது. இத்தனை இக்கட்டுக்கு மத்தியில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஒரு திருத்தம் வருமாக இருந்தால் அது உப்புச்சப்பில்லாத ஒன்றாக வருவதற்கான வாய்ப்புகளே அதிகளவில் இருக்கின்றன.

ஏற்கனவே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக எந்தப் பயனையும் தமிழ் பேசும் மக்கள் அடையாதபோது, ,அத்தகைய மற்றொரு அரசமைப்புத் திருத்தத்தால் எந்தப் பயனும் கிட்டாது என உறுதியாக நம்பலாம்.

இதனைக்கூறியதும், வருவதற்கு முன்னரே தவறாக எதிர்வு கூறி ஊடகங்கள் எல்லாவற்றையும் குழப்புகின்றன என்று சீறிக்கொண்டு வருவார்கள் சில அரசியல்வாதிகள். ஆனால், இப்படிச் சொல்லிச் சொல்லி அவர்களால் கடந்த 4 ஆண்டுகளில் சாதிக்க முடிந்தது எதுவும் இல்லை அதிகாரப் பகிர்வு விடயத்தில். எனவே அவர்கள் மீண்டும் அப்படிக் குரல் எழுப்புவதைக் கண்டுகொள்ளவேண்டியதில்லை.

அதேநேரத்தில் ஒப்புக்குச்சப்பாணியாக ஒரு அரசமைப்புத் திருத்தத்தை தமிழர்கள் மீது திணிப்பதற்கு இடமளிக்கப்படக்கூடாது.

இலங்கையின் அடிப்படைக் கட்டமைப்பு பல்லின, பல சமூக, பல மத உரிமைகளை மதிக்கக்கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட்ட ஒரு புதிய அரசமைப்பு மட்டுமே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படையாக முடியும் என்பதில் தமிழ் இனம் உறுதியாக நிற்க வேண்டும். அது வல்லாத எந்தவொரு சாமாளிப்பையும் எதிர்ப்பதற்கும் தூக்கி எறிவதற்கும் மீண்டும் ஒரு தடவை தமிழர்கள் தயாராக வேண்டியிருக்கிறது.

# எழுவர் விடுதலையை அரசியலாக்காதீர்!

இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில், 28 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்துவரும் பேரறிவாளன் உள்துநிற்கும் கருத்துகளில் எழுவர் விடுதலையும் ஒன்று. எனினும், தமிழக ஆளுநர் தனது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, கருணை மனுவின் மீது முடிவெடுக்காததன் காரணமாகவே அது தமிபடுத்த எழுவர் விடுதலை குறித்த பிரச்சினையை ஒரு கோரிக்கையாக முன்வைக்கின்றன. இந்தப்பிரச்சினையை தேர்தல் அரசியலுக்குள் கொண்டு வருவதும் அதை முன்வைத்துத் தேர்தலைச் சந்திப்பதும் எழுவர்


முருகன்


சாந்தன்


பேரறிவாளன்


நளினி


ரவிச்சந்திரன்


ராபர்ட் பயஸ்


ஜெயகுமார்

ளிட்ட எழுவரையும் கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்ற மனு கடந்த ஆறு மாதங்களாகத் தமிழக ஆளுநரின் பரிசீலனையில் இருந்துவரும் நிலையில், இது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எழுவர் விடுதலை குறித்து முடிவெடுக்க தமிழக ஆளுநருக்கு முழு அதிகாரம் இருப்பதாக இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தபிறகும்கூட இன்றுவரை அந்த மனு பரிசீலிக்கப்படவில்லை. இந்நிலையில், கருணை அடிப்படையில் அணுகப்பட வேண்டிய இந்தப் பிரச்சினையை, சில அரசியல் கட்சிகள் தேர்தல் அரசியலாக்கி வருவது மேலும் வருத்தம் தருகிறது.

பத்து அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையிலேயே அதிமுக - பாஜக கூட்டணியில் இணைகிறோம் என்று அறிவித்தது பாமக. இந்தியத் தலைமை அமைச்சரும், தமிழக முதல்வரும் பங்கேற்ற தேர்தல் பரப்புரை மேடையிலேயே எழுவர் விடுதலை குறித்த தங்களது கோரிக்கையையும் முன்வைத்துப் பேசினார் அந்தக் கட்சி நிறுவனர் ராமதாஸ். தமிழகத்தில் காங்கிரஸ், பாஜக உள்ளிட்ட சில கட்சிகளைத் தவிர பெரும்பாலான கட்சிகள் எழுவர் விடுதலையை வலியுறுத்திவருகின்றன. சொல்லப்போனால், காங்கிரஸ் கூட்டணியிலிருக்கும் திமுக, விசிக கட்சிகள் அதற்காகத் தீவிரக் குரல் கொடுத்துவருகின்றன.

அதிமுக அரசு, தமிழக அமைச்சரவையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி தமிழக ஆளுநருக்கு விடுதலை செய்ய பரிந்துரை செய்தது. அதிமுக தலைமையிலான தமிழக அரசும், எதிர்க்கட்சியான திமுகவும் ஒத்





ஒன்றையொன்று கடுமையாக விமர்சித்துக்கொண்ட அரசியல் கட்சிகள், இன்றைக்குத் தங்களுக்கிடையே தேர்தல் கூட்டணி அமைந்திருப்பதை நியாயப்படுத்த எழுவர் விடுதலை குறித்த பிரச்சினையை ஒரு கோரிக்கையாக முன்வைக்கின்றன. இந்தப் பிரச்சினையை தேர்தல் அரசியலுக்குள் கொண்டுவருவதும் அதை முன்வைத்துத் தேர்தலைச் சந்திப்பதும் எழுவர் விடுதலைக்கு ஆதரவாக எழும் குரல்களை வாக்குகளாக மாற்றிக் கொள்ளும் படுமோசமான அரசியல் உத்தி.

ழக அரசியல் களத்தின் சர்ச்சைக்குரிய பிரச்சினையாகத் தொடர்கிறது.

ஒன்றையொன்று கடுமையாக விமர்சித்துக்கொண்ட அரசியல் கட்சிகள், இன்றைக்குத் தங்களுக்கிடையே தேர்தல் கூட்டணி அமைந்திருப்பதை நியாயப்விடுதலைக்கு ஆதரவாக எழும் குரல்களை வாக்குகளாக மாற்றிக்கொள்ளும் படுமோசமான அரசியல் உத்தி. தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு குரல் கொடுக்கும் இந்த விடயத்தில் தேர்தல் அரசியல் உள்நுழையக் கூடாது.

கருணை மனு மீது ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானம், அரசியல் கட்சிகளின் கோரிக்கைகள் என்று எல்லா தரப்பிலிருந்தும் கோரப்படுகிறது. இந்நிலையில், தமிழக ஆளுநர் எதன் பொருட்டு தனது அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தள்ளிப்போட வேண்டும்? அரசமைப்புச் சட்டத்தின் கீழ், ஆளுநர் முடிவெடுப்பதற்கான கால அளவு எதுவும் வரையறுக்கப்படவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் கீழ் பொறுப்பிலிருப்பவர்களே அந்தச் சட்டத்தின் விடுபடல்களைச் சரிசெய்து முன்னுதாரணங்களை ஏற்படுத்த வேண்டும். தமிழக ஆளுநர் எழுவர் விடுதலை கோரிக்கையை கருணையோடு அணுக வேண்டும்!


நன்றி - தஹிந்து

# கச்சதீவு திருவிழா ஏற்பாடுகள் ஆரம்பம்

*யாழ்ப்பாணம், மார்ச்.14*

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. திருவிழாவுக்கு வரும் அடியார்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கையில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.





ஆலய பங்குத்தந்தை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், நெடுந்தீவு பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றுடன் பல்வேறு அரச நிறுவனங்களும் இணைந்து இலங்கை கடற்படையினரின் பங்களிப்புடன் ஏற்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வருடம் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் மற்றும் இந்தியாவில் இருந்தும் 10 ஆயிரம் பேர் வரை பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## ரப் கணினி பயன்படுத்த விரைவில் நடவடிக்கை

*முதல்வர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாண மாநகர சபையில் ஒவ்வொரு உறுப்பினரும் 'ரப்' கணனி பயன் படுத்தும் அளவுக்கு நவீன தொழில் நுட்ப முறைகளைக் கையாள்வதற்குரிய நடவடிக்கைகள் எதிர் காலத்தில் எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபை அறிக்கை நாளுக்கு நாள் அதிக பக்கங்களைக் கொண்டதாக அமைகிறது. குரல் பதிவு செய்து அதனைத் தட்டச்சு செய்வதில் பல சவால்களைப் பணியாளர்கள் எதிர் கொள்கின்றனர். அதனால் மின்னஞ்சல் மூலமாக அறிக்கைகளை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பிரதி எடுப்பதற்கு வசதிகள் எல்லா உறுப்பினர்களுக்கும் இல்லை என்று சபையில் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே சபை உறுப்பினர்கள் நவீன தொழில் நுட்ப வசதிகளை உள்ளடக்கிய ரப் கணினி போன்றவற்றை வழங்கி அதற்கான தொகையை மாதாந்தம் அறவிட முடியும். இதன் மூலம் அறிக்கைகள், வேறு விடயங்களையும் பரிமாறிக் கொள்ள முடியும். இதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் -என்றார். (த-7)

## மேலதிக மருத்துவ வசதிகள் வேண்டும்

*மக்கள் கோரிக்கை*

தென்மராட்சி, மார்ச் 14

வரணி பிரதேச மருத்துவமனைக்கும் ஏனைய மருத்துவமனைகளுக்கு கிடைக்கும் மருத்துவ வசதிகள் போன்று கிடைக்கவேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தென்மராட்சி வடக்குப் பிரதேசத்தில் உள்ள 11 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வரணி பிரதேச மருத்துவமனையை நம்பி உள்ளனர்.

தற்போது குறித்த மருத்துவமனையில் 3 மருத்துவ அதிகாரிகளும் ஒரு ஒப்பந்த அடிப்படையிலான பதிவு செய்யப்பட்ட மருத்துவருமாக நால்வர் கடமையாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஏனைய மருத்துவமனைகளில் வழங்கப்படும் இரவு- பகல் மருத்துவ சேவை, விடுதி வசதி, ஆய்வு கூட வசதி, கிளினிக் வசதி,போன்றவை கிடைக்க வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மருத்துவமனை அபிவிருத்திச் சங்க உறுப்பினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, வரணிப் பிரதேச மக்களுக்கு சாவகச்சேரி மற்றும் மந்திகை மருத்துவமனைகள் சம அளவு தூரத்தில் உள்ளன.

இரு மருத்துவமனை நிர்வாகங்களிடமும் கேட்டபோது மருத்துவமனை நோயாளர்களுக்கு வழங்கப்படும் மேலதிக சிகிச்சை வசதிகளான ஆய்வுகூட பரிசோதனைகள் செய்து தருவதாக தெரிவித்தனர் எனக் கூறினார். (ஐ-9)

## தொழில் தேடும் இளையோரை பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாண மாவட்டச் செயலக தொழில் நிலையம் பிரதேச செயலகங்களுடன் இணைந்து தொழில் நாடும் இளையோருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து தொழில் தேடுபவர்களுக்குமான பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பதிவுகள் மேற்க் கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தொழில் நாடுவோர் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 3 மணிவரை யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ந.வேதநாயகன் அறிவித்துள்ளார். (க)

## நகரில் பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கு வழக்கு

*மாநகர முதல்வர் தெரிவிப்பு*

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள், வர்த்தகநிலையங்கள், நிறுவனங்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் என்பனவற்றை அவற்றுக்குரியவர்கள் பதிவு செய்வதற்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனல்ட் தெரிவித்தார்.

மாநகர சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் சபை மண்டபத்தில் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் 85 தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன. இவற்றில் 3 தனியார் கல்வி நிலையங்கள் மட்டுமே சபையில் பதிவு செய்யப்பட்டு இயங்குகின்றன. ஏனையவை சட்டவிரோதமானதாகவே கருத்தில் கொள்ளப்படும். இதே போன்று இன்னும் நூற்றுக் கணக்கான வர்த்தக நிலையங்கள் பதிவுகள் இன்றி இயங்குகின்றன. பல வீடுகளும், தங்கு விடுதிகளாக இயங்குகின்றன. உணவகங்கள்கூட பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றன.

பதிவு செய்யப்படாதவை அனைத்தையும் பதிவுசெய்வதற்கு இறுதிச் சந்தர்ப்பமாக இந்த மார்ச் மாதம் வழங்கப்படுகின்றது. ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து தயவு தாட்சண்யம், பாகுபாடு இன்றி சட்டம் தன் கடமையைச் செய்யும்.

அதன் பின்னர் நாம் அதில் தலையீடு செய்ய முடியாது. ஆகவே மாநகர சபை எல்லைக்குள் உள்ள இப்படியான நிறுவனங்களை பதிவுசெய்துகொள்ளுமாறு கோரியுள்ளார். (த-7)

## நல்லூரில் அருங்காட்சியகம் அமைக்கப் பொருள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

நல்லூர் பிரதேச சபையில் புராதன சின்னங்களை காட்சிப் படுத்த வுள்ளதால் புராதன சின்னங்கள் மற்றும் பொருள்களை எமது சபைக்கு வழங்குமாறு சபையின் தவிசாளர் தா.தியாகமூர்த்தி தெரிவித்தார். நல்லூர் பிரதேச சபையில் அருங்காட்சியம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளோம். அதற்காக பொது மக்களிடம் இருந்து புராதன சின்னங்கள், பொருள்களை கோருகிறோம். காட்சிப்படுத்த விரும்பு பவர்கள் விவரங்களுடன் சபைக்கு நேரடியாக சமூகமளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இது தொடர்பான விவ ரங்களை பிரதேச சபையில் பெற்றுக்கொள்ள முடியும் -என்றார். (ஐ-8)

## சந்தை வரி அறவீடு அதிகரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 14

சாவகச்சேரி நகரசபை ஜனவரி மாதம் தொடக்கம் பொதுச் சந்தையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் பயனாக சந்தை வரி அறவீடு அதிகரித்துள்ளதென சபையினர் தெரிவித்தனர்.

இதன் மூலம் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 8 ஆயிரம் ரூபாவரை சந்தை வரி அறவீடு அதிகரித்துள்ளதாக தெரிவித்தனர்.

சந்தைக் கடைகளில் வரிவசூலிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தியமை மற்றும் உள்ளக பரிசோதனைகள் போன்றவற்றினால் அறவீடுகள் அதிகரித்துள்ளதெனவும் தெரிவித்தனர். (ஐ-9)

## குழந்தைகள் போல நடந்து கொள்ளாதீர்

*சபை உறுப்பினர்களுக்கு முதல்வர் அறிவுரை*



யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்கள் தமது மாண்பைப் பாதுகாக்க வேண்டும். பாடசாலைப் பிள்ளைகளை போல, குழந்தைப் பிள்ளைகள் போல சிலர் நடந்து கொள்கிறீர்கள் என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு சபையில் முதல்வர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக நாங்கள் அனைவரும் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டோம். ஆனால் இங்கு சம்பந்தம் இல்லாத விடயம் ஒன்றுக்கு நாம் ஒருவருடன் ஒருவர் சண்டை பிடிக்கிறோம். உங்களது மாண்பை நீங்கள் பாதுகாக்க வேண்டும்-என்றார். (த-7)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 14

பருத்தித்துறை கத்தோலிக்க மறைக் கோட்ட பொது நிலையியலாளர் கழகத்தின் பொதுக்கூட்டம் கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. கழகத் தலைவர் வின்சன் டி பேகால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மிருசுவில் பங்குத் தந்தை அருட்பணி. ஜேம்ஸ் அடிகள் ஆலய வழிபாட்டொழுங்கு முறைகள் பற்றி சிறப்புரை நிகழ்த்தினார். (ஐ-9)

# வடக்கு, கிழக்குப் பாடசாலைகளில் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம்

## பிற மாகாணங்களில் சுகவீனவிடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு உட்பட நாட்டின் அநேக இடங்களில் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஏனைய மாகாணங்களில் பெரும் பாலான பாடசாலகளின் ஆசிரியர்கள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


யாழ்ப்பாணம்


மன்னார்


வவுனியா


கிளிநொச்சி

வடக்கு - கிழக்கில், கல்விக்கு 6 வீத நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டும், சம்பளப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துக் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம் நடத்தப்பட்டது. இலங்கை ஆசிரியர் சங்கம், தரம் 111 புதிய அதிபர் சங்கம் மற்றும் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர்கள் கருப்புப் பட்டி அணிந்து போராட்டம் செய்ய விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைய இது நடைபெற்றது.

ஏனைய மாகாணங்களில் சம்பள அதிகரிப்பு, கல்வி அமைச்சு முன் பாக அண்மையில் நடத்தப்பட்ட போராட்டத்தில் தண்ணீர்த் தாரைப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் போராட்டத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள் ஈடுபட்டனர்.

இதற்கு இலங்கை ஆசிரிய சேவைச் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

வடக்கு மாகாணத்தில் நகரப் புறங்களில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள் அதிகளவில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பித்த போராட்டம் சுமார் 30 நிமிடங்கள் வரை இடம்பெற்றிருந்தது. தமது கோரிக்கைகள் கொண்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். போராட்டத்தின் பின்னர் பாடசாலையில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும், போராட்டம் தொடர்பாக ஏற்கனவே வெளிவந்த செய்திகளை அடுத்து பாடசாலைகளில் மாணவர்களின் வரவு சற்றுக் குறைந்து காணப்பட்டது. அவ்வாறிருந்தும் பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்களுக்குக் கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. போராட்டம் காரணமாகக் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறாது என்று எண்ணி மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பவில்லை என்று பெற்றோர்கள் பலர் தெரிவித்திருந்தனர்.

**ஆசிரியர்கள் கருத்து**

போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆசிரியர்கள்;

எமது பகுதிகளில் தொடர்ச்சியாக வந்த கதவடைப்பு, பாடசாலை விடுமுறை நாள்களைக் கருத்திற் கொண்டும், மணவர்களின் கல்வி, பரீட்சைகளைக் கருத்திற் கொண்டும் போராட்டத்தை அரை மணிநேரமாக மட்டுப்படுத்தினோம். பாடசாலைகளில் மாணவர் ஒழுக்கம் மிக மோசமாக உள்ளது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கடமைகளில் மேலதிகமாக எழுத்து வேலைகளும் அதிகமாக வழங்கப்படுகின்றன.

**ஆசிரிய பணியிலிருந்து விலகிச் செல்கின்றனர்**

வெளிநாடுகளை போல் அல்லாது எமது கல்வி கற்பிக்கும் செயற்பாடானது மிகவும் மோசமாக உள்ளது. வெளிநாடுகளில் ஆசிரிய துறைக்கு பலரும் விரும்பிச் செல்கின்றனர். இலங்கையில் ஆசிரியர் துறையிலிருந்து பலரும் விலகி வேறு வேலைகளை நோக்கிச் செல்கின்றனர். இவ்வாறான நிலை மாற்றப்பட்டு சீரான கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (து-21.106, 7, 56, 214, 9.110)



# பிரதி எடுக்கும் இயந்திரம் வழங்கல்

யாழ்ப்பாணம்,மார்ச் 14

யாழ்ப்பாணம் ஆழியவளை சி.சி.த.க,பாடசாலைக்கு அன்பளிப்பாக பிரதி எடுக்கும் இயந்திரம் ஒன்று கடந்த ஆறாம் திகதி பாடசாலையின் பழைய மாணவரான செபஸ்தியாம்பிள்ளை ஆனந்தராசாவால் கையளிக்கப்பட்டுள்ளது. (க-70)

# சட்டவிரோத செயற்பாடுகளை சபை கட்டுப்படுத்த வேண்டும்

## நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 14

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட காரைக்கால் இந்துமயானத்தில் பகல் வேளைகளில் இளைஞர்கள் ஒன்று கூடி சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இதனால் அந்த பகுதியினூடாகச் செல்லும் மக்கள் அச்சம் அடைவதாக நல்லூர்ப் பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி அ.கௌசல்யா தெரிவித்தார். நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்டகாரைக்கால்இந்துமயானம்நான்கு கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட கிராமங்களுக்கு சொந்தமானதாக காணப்படுகின்றது. எனினும் மயானத்தின் அபிவிருத்தி தொடர்பில் சபை பலகாலமாக கூட்டம் நடத்தாது உறங்கு நிலையில் இருக்கின்றது.

இது மட்டுமல்ல மயானத்தின் முன் பக்க வாசல் கதவுக்குகூட ஒருபூட்டுவாங்கி பூட்ட முடியாத நிலையிலேயே காணப்படுகின்றது. மயானம் பராமரிப்பு அற்று திறந்துகாணப்படுவதனால் பகல் இரவுகளில் அங்கு ஒன்று கூடும் இளைஞர்கள் மது, புகைத்தல், போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுகின்றனர். அவ்வழியால் சென்றுவரும்பொதுமக்களிடம் அவர்கள் வீதிகளில் நின்று அநாகரிகமான செயலில் ஈடுபடுகின்றனர். இதனால் அவ்வழியால் பகலில் செல்வதற்குக் கூட மக்கள்அச்சம்அடைகின்றனர். இவ்வாறுபலசீரழிவுகளை காரைக்கால் இந்து மயானம் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. எனவே இந்த விடயத்தில்கட்சி,மதம், சமூக வேறுபாடுகள் பார்க்காது தீர்வு காண அனைவரும் முன்வரவேண்டும் - என்றார். (ஐ-8)

# இருநாள்கள் வீதித் தடை

யாழ்ப்பாணம்,மார்ச் 14

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிறி வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் பங்குனிக் குளிர்த்திப் பெருவிழாவை முன்னிட்டு தற்காலிகமாக ஆலயத்தை அண்டிய வீதி இருநாள்கள் தடைசெய்யப்படவுள்ளது. பங்குனிக் குளிர்த்திப் பெருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் பருத்தித்துறை வீதியில் அரசடிச் சந்தி தொடக்கம் ஆனைப்பந்திச் சந்திவரையான போக்குவரத்து நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியிலிருந்து 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒருமணிவரை தடைசெய்யப்படவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் மாற்றுப் பாதைகளை பயன்படுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ)

# அத்தியட்சகர் நியமனம்

சாவகச்சேரி, மார்ச் 14

கைதடி அரச முதியோர் இல்லத்தின் பதில் அத்தியட்சகராக யாழ்ப்பாண மாட்ட சமூக சேவைகள் அலுவலர் வ.செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகராக் கடமையாற்றிய த.கிருபாகரன் கடந்த ஜனவரி மாதம் சேவையிலிருந்து இளைப்பாறினார். (ஐ-9)

# முறைசாராக் கல்விக்கு விண்ணப்பம் கோரல்

வடமராட்சி,மார்ச் 14

வடமராட்சிவலயக்கல்விப் பிரிவால் இலவச தொழில் பயிற்சிநெறிகளுக்குவிண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

வீட்டு மின் இணைப்பு, அலங்காரப் பொருள் உற்பத்தி, மனை முகாமைத்துவம் ஆகிய 3 மாதங்களுக்குரிய பயிற்சிகளும், இரண்டாம் மொழியாகிய சிங்களம் 6 மாதங்களுக்குரியபயிற்சிநெறியும்வழங்கப்படவுள்ளது.


மேற்குறிப்பிடப்பட்டகற்கை நெறிகளை பயில விரும்புவோர், பயில விரும்பும் பயிற்சி நெறியை குறிப்பிட்டு, வலயக் கல்விப் பணிப்பாளர்,வலயக்கல்வி அலுவலகம்,(முதலாம் கட்டையடி)பருத்தித்துறை, வடமராட்சி. என்ற முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்குமுன்னர்அனுப்பி வைக்கமாறு வலயக் கல்வி பணிப்பாளர், யோ. ரவீந்திரன் அறிவித்துள்ளார். (க)

# ஆலய சீரமைப்புக்கு நிதி ஒதுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் அரியாலை சிறி சிவகாமி அம்பாள் ஆலயத்தின் மீள் சீரமைப்பு பணிகளுக்கான நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் ஆலயத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது ஆலயம் விரைவில் மீளமைப்புச் செய்யப்படவுள்ளது. இந்த ஆலயத்துக்கு வர்ணம் பூசுதல், கலசம் அமைத்தல், குடமுழுக்கு ஏற்பாடு, மின் இணைப்பு மற்றும் வசந்தமண்டப சீரமைப்பு போன்ற வேலைகளை முன்னெடுப்பதற்கு 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று அவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-50)



# ஆபத்தான குழி

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 14

ஏ-9 முதன்மை வீதியில் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் காணப்படும் குழியை மூட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு ஏ - 9 வீதி தார் வீதியாக மாற்றப்பட்டது. அவ்வேளையில் அமைக்கப்பட்ட வீதியில் சாவகச்சேரி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பணியகத்துக்கு முன்பாக 3 அடி ஆழமான பெரும் குழி ஏற்பட்டுள்ளது.

நகரப் பகுதியை அண்டிய பகுதியில் பெருமளவு வாகனங்கள் வீதியோரங்களில் தரித்துச் செல்கின்றன எனவும் இரவு வேளைகளில் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் குழியில் வீழ்ந்து ஆபத்தை எதிர்நோக்கும் அபாயம் உள்ளதால் பெரும் குழியை மூடுமாறும் கேட்டுள்ளனர். (ஐ-9)

# குளிர்த்தி விழாவும் வசந்த உற்சவமும்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிறி வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் பங்குனிக் குளிர்த்திப் பெருவிழாவும் வசந்த உற்சவமும் நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

அன்று அதிகாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் அம்பாள் வெள்ளி இரதத்தில் ஆரோகணித்து கிராம வலம்வருதல் இடம்பெறும்.

மாலை 6 மணியளவில் ஆலயவீதியில் 108 பானைகள் கொண்டு குளிர்த்திப் பொங்கல் வழிபாடுகளுடன் 108 கற்பூரச்சட்டி ஆராதனைகளும் இடம்பெறும். இரவு 10 மணிமுதல் சிறப்பு வாண வேடிக்கையும் சிவ நர்த்தனாலயா நடன கலையகம் வழங்கும் நாட்டியாஞ்சலியும், தென்னிந்தியச் சிறப்புக் கலைஞர்களின் இசைச் சங்கம நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஐ)

# கோடரியுடன் வந்து கண்ணாடிகளை உடைத்தனர்

## சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 14

சண்டிலிப்பாயில் நள்ளிரவு வீடு புகுந்த இனந்தெரியாத குழு, ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்ததோடு உந்துருளியையும் சேதப்படுத்திச் சென்றுள்ளது.

முகங்களை மறத்தவாறு நேற்றுமுன்தினமிரவு 11 மணியளவில் மூன்று உந்துருளிகளில் அவர்கள் வந்திருந்தனர். சிலர் வாள், கைக்கோடரியுடன் காணப்பட்டனர். மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்களைக் கண்டதும் அந்தக் குழு தப்பியோடியது. பொலிஸார் துரத்தியபோது இரண்டு உந்துருளிகளையும் வாள் ஒன்றையும் சங்குவேலிப் பகுதியில் விட்டுச் சென்றுள்ளனர்.

விசாரணைகள் மூலமாக மானிப்பாயைச் சேர்ந்த 17 வயதுடையவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணை தொடர்கிறது என்று மானிப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (து-26)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடுகளின் எண்ணிக்கை 300ஆக அதிகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 14

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் அமைக்கப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த வருட பிற்பகுதியில் அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 ஆயிரம் வீடுகள் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு தென்மராட்சி பிரதேசத்துக்கு 600 வீடுகள் ஒதுக்கப்பட்டன. இதனையடுத்து 600 தகைமையுள்ளவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

தகைமையுள்ளவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட 5 ஆயிரம் வீடுகளுக்குப் பதிலாக ஆயிரத்து 500 வீடுகளே அமைக்கப்படவுள்ளதென அமைச்சால் திடீர் என அறிவிக்கப்பட்டது.

இதன்படி தென்மராட்சி பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்ட 600 வீடுகள் 165 ஆகக் குறைக்கப்பட்டது. இதனடிப்படையில் ஏற்கனவே அனுப்பப்பட்ட 600 பேர் பட்டியலிலிருந்து 165 பயனாளிகளின் விவரங்கள் மாவட்டச் செயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்நிலையில் தற்போது தென்மராட்சிப் பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஏற்கனவே தெரிவு செய்து வைக்கப்பட்டிருந்த 435 பயனாளிகளில் 135 பயனாளிகளின் விவரங்கள் மாவட்டச்செயலகத்துக்கு பிரதேச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

# யாழ். இந்து கல்லூரியில் ஆய்வுகள் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆய்வுகள் அபிவிருத்தி பிரிவினரால் இன்று வியாழக்கிழமை 10.30 மணிக்கு ஆய்வுகள் தினம் கொண்டாடப்படுகிறது.

பாடசாலை அதிபர் சதா நிமலனின் வாழ்த்துரை வழிகாட்டலுடன் நி.தனுரேஸ் தலைமையில்நடைபெறும் நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின், பட்டப்பின் கற்கைகள் பீட பீடாதிபதி கு.மிகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (க)

# ஏ.ஆர்.வி வகைத் தடுப்பூசிக்கு குடாநாட்டிலும் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அநேகமான அரச மருத்துவமனைகளில் விசர் நாய் தடுப்பூசிக்கு (ஏ.ஆர்.வி) பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

விசர்நாய்க் கடிக்கு ஏ.ஆர்.வி என்று சொல்லப்படும் வகை தடுப்பூசி மருத்துவ மனைகளில் ஏற்றப்படுகிறது. அதன் இருப்பு மருத்துவ மனைகளில் வெகுவாகக் குறைந்துள்ளது. அநேகமான மருத்துவ மனைகளில் அது இல்லை.

இந்த நோய் நிலைமைக்கு உள்ளாகிய நோயாளர் வேறு மருத்துவ மனைக்குச் சென்று அந்த ஊசியை ஏற்றுமாறு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதனால் ஒரு இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு சென்று ஊசி போடும் நிலை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிடம் கேட்டபோது தெரிவிக்கப்பட்டதாவது:

ஏ.ஆர்.வி தடுப்பூசிக்கு நாடு முழுவதும் பற்றாக்குறை காணப்படுகின்றது. நாம் முன்வைக்கும் கோரிக்கையின் அளவை விட மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே அவை எமக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இது கொழும்பு சுகாதார அமைச்சுடன் தொடர்புடைய பிரச்சினை. அவர்களும் இந்த ஊசி மருந்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்தாலும் குறைந்த அளவே அவர்களாலும் கொள்வனவு செய்ய முடிகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (து-7)

# ஒஸ்மானியா கல்லூரியில் மறைகாணிகள் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் மறைகாணிகள் பொருத்தப்பட்டுள்ளன. கல்லூரியின் பழைய மாணவர் சங்க 71 ஆவது அணியினர், பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் கட்டுமானங்களை ஊக்குவிக்கும் முகமாக மறைகாணிகளைப் பொருத்தி பாடசாலை அதிபர் சேகு ராஜிதுவிடம் கையளித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்குக் கற்றல் மேம்பாட்டுக்கான பொருள்களையும் அன்பளிப்புச் செய்தனர். (து)

# நடமாடும் சேவை

சாவகச்சேரி, மார்ச் 14

சாவகச்சேரி நகரசபையினர் சபை எல்லைக்குட்பட்டபகுதிகளில்வரியிறுப்பாளர் நலன்கருதி நடமாடும்சேவையை ஆரம்பித்துள்ளனர். இந்தநடமாடும் சேவையில் வர்த்தக - வியாபார கட்டணங்கள், ஈருருளிகளுக்கான இலக்கத்தகட்டுக்குரியகட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக மீசாலை மேற்கு வட்டார வரியிறுப்பாளர்களுக்கான அறவீடுகள்தொடர்பானநடமாடும் சேவை மீசாலை பொது நூலகமண்டபத்தில்இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நடைபெறும் என்று சபைச் செயலர்கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தவணைப் பரீட்சைகள் 19 ஆம் திகதி ஆரம்பம்

சாவகச்சேரி, மார்ச் 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கான முதலாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஏனைய கல்வி வலயங்கள் முதலாம் தவணைப் பரீட்சைகளை மார்ச் 21 ஆம் திகதி நடத்தவுள்ள நிலையில் தென்மராட்சி கல்வி வலயத்தினர் பங்குனித் திங்கள் பொங்கலை கருத்தில் கொண்டு இரு தினங்களுக்கு முன்னர் பரீட்சைகளை ஆரம்பிக்கவுள்ளனர். (ஐ-9)



# சாதனை மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்

தேசிய மட்ட விளையாட்டுக்களில் சாதனை படைத்த மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

கல்லூரியில் 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை திறப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை அதிபர் தி.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டார்.

அதில் பளுதூக்கல் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற திவானுஜன் மற்றும் தேசிய மட்ட வேக நடைப் போட்டியில் முதன் முறையாக வடக்கில் இருந்து தோற்றி தேசிய மட்டத்தில் 2 ஆம் இடம் பெற்று 'வேகநடை மங்கை' என்ற விருதைப் பெற்ற மாணவி ர.கௌசிகா ஆகியோர் முதன்மைவிருந்தினரால் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-159)

# வாடிக்கையாளர் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14

பன்னாட்டு தண்ணீர் தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் தண்ணீர் பட்டியல் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வாடிக்கையாளர் நிகழ்வை தேசிய தண்ணீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடத்தவுள்ளது.

வாடிக்கையாளர்கள் நாளை வெள்ளிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆகிய தினங்களில் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் அலுவலகத்துக்கு வருகை தருமாறு யாழ்ப்பாண வாணிப அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ)

# முல்லையில் நில அளவைத் திணைக்களத்திடம் 40 முக்கிய இடங்கள் அளவிட அனுமதி கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 இடங்கள் தமது ஆளுகையின் கீழ் அடங்குவதால் அவற்றை உடன் அளவீடு செய்து தருமாறு தொல்லியல் திணைக்களம் நில அளவைத் திணைக்களத்திடம் எழுத்தில் கோரியுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராயா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முதுபெரும் தமிழ்க் கிராமங்கள் பலவற்றில் காணப்படும் 40 இடங்கள் இவ்வாறு கோரப்பட்டுள்ளன. இந்த இடங்களில் பல, தமிழர்களின் வாழ்விடங்களாகவும் , சில இடங்கள் பொருளாதார மையங்களாக, வாழ்வியலுக்கான இடங் களாகவும் காணப்படுகின்றன. இவற்றில் தமிழ் மக்களின் கலாசார மையங்களும் அடங்குகின்றன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈசுவரர் ஆலயம் உள்ளிட்ட பகுதியும், தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியென திணைக்களம் உரிமை கோருகின்றது. உடனடியாக இந்து கலாசார அமைச்சு மற்றும் தலைமை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்ல எண்ணியுள்ளோம். ஏனெனில் மகாவலி, அபிவிருத்தி அதிகார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களத்துடன் தொல்பொருள் திணைக்களமும் ஏட்டிக்குப் போட்டியாக நில அபகரிப்பில் ஈடுபட ஆரப்பித்து விட்டன என சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார். (க-105)



## வவுனியாவில் விபத்து தாயும் பிள்ளையும் காயம்

வவுனியா சுகாதார மருத்துவஅதிகாரிபணிமனைக்கு முன்பாகவுள்ள பாதசாரிகள்கடவையால் வீதியைக் கடந்து சென்ற தாயையும் பிள்ளையையும் பட்டா ரக வாகனம் மோதியதில் இருவரும் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 3.45 மணியளவில் புதிய பேருந்து நிலையப்பக்கமாக இருந்து. ஒன்றரை வயது மகனை தூக்கியவாறு தாயார் பாதசாரிகள் கடவையை கடக்க முயற்சித்துள்ளார்.

வீதியைக் கடந்தவர் மீது மருத்துவமனைப் பக்கமாக இருந்து வந்த பட்டா ரக வாகனம் மோதியதால் தாயும் பிள்ளையும் தூக்கி வீசப்பட்டதுடன். பட்டா ரக வாகனம் பிள்ளைக்கு மேலாக ஏறியதாக தெரிவிக்கபடுகின்றது.

இதன்போது அப்பகுதியில் நின்றவர்கள் ஓடிச்சென்று தாயையும் குழந்தையையும் மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர். குழந்தையின் மேலாக பட்டா ரக வாகனம் ஏறிச் சென்றமையினால் குழந்தையின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அறிய முடிகின்றது. (க-110)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 14

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 2019 ஆம் ஆண்டு மாணவத் தலை வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி அதிபர் கி. விக்கின ராஜா தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் சுற்றாடல் முன்னோடிக் குழுவுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம் பெற்றன.

ஆசிரியர்களும் பொறுப்பு ஆசிரியர்களும் மாணவர்களுக்கான சின்னங்களைச் சூட்டினர். (க-159)



## வீதித் தடை தொடர்பில் விரைவில் தீர்வு

### கலந்துரையாடலின் போது பொலிஸார் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 14

ஓமந்தை தொடருந்துக் கடவையின் வீதி தடை தொடர்பில் பொலிஸாருக்கும் அப்பகுதி மக்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைக்கு திருச்சபை ஒன்றின் நிதி உதவியுடன் அண்மையில் பாதுகாப்பு கேற் ஒன்று அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

தொடருந்துத் திணைக்களத்தின் அனுமதியைப் பெறாது அமைக்கப்பட்டதாக தெரிவித்து கடந்த வாரம் குறித்த பாதைக்கு குறுக்காக பொதுமக்கள் பயணம்செய்யமுடியாதபடி தண்டவாளங்களால் வேலி அமைக்கப்பட்டு தடை ஏற்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில்:

பாதைக்கு அப்பால் உள்ள கிராமத்தில் 30 வருடங்களுக்கு மேலாக நாங்கள் வசித்துவருவதுடன், காணிகளுக்கான உறுதிகளையும் கைவசம் வைத்துள்ளோம். குறித்த வீதியே எமது முதன்மை போக்குவரத்து மார்க்கமாக காணப்படுகிறது. எனவே அந்த வீதி எமக்கு அவசியமானது. தற்போது தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமையால் அதனால் பயணிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், மரக்கறிகளை சந்தைக்கு எடுத்துச் செல்லமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இதேவேளை அந்தப் பகுதி மக்கள் தொடருந்தை வழிமறித்து போராட்டம் ஒன்றினை மேற்கொள்ளத்திட்டமிட்டிருந்தனர். இந்நிலையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமாருடன் தொடர்பு கொண்ட ஓமந்தை பொலிஸார் அப்பகுதி மக்களுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தொடருந்துக் கடவைக்கு அருகில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா, தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர், ஆலய நிர்வாகத்தினர் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் இதற்கு ஓரிரு தினங்களில் தற்காலிகத் தீர்வு ஒன்றினைப் பெற்றுத் தருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தொடருந்து திணைக்களத்தின் வவுனியா அலுவலகத்தின் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது இந்தப் பகுதியில் தொடருந்து திணைக்களத்தால் கடவை அமைக்கபடவில்லை. அருகாமையில் கிட்டிய தூரத்தில் இரண்டு கடவைகள் அமைந்துள்ளன. எனவே குறித்த மக்கள்தொடருந்து வீதிக்கு அருகாக பயணம்செய்து அந்த கடவையூடாகச் செல்லமுடியும். இந்தப் பகுதி உயரமானது என்பதால், அதில் கடவை அமைப்பது பாதுகாப்பற்றது. எனவே பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி எமது தலைமை அலுவலகத்தின் பணிப்பின் பேரில் நாம் குறித்த பாதையினை போக்குவரத்து மேற்கொள்ளமுடியாதபடி தடைசெய்துள்ளதாகத் தெரிவித்தார். (ஐ)

## மன்னாரில் வசிக்காதோரை வாக்காளர் பட்டியலில் நீக்குக

### நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் வேண்டுகோள்

மன்னார், மார்ச் 14

மன்னார் மாவட்டத்தில் வசிக்காத பலர், போர் முடிந்து 10 ஆண்டுகளின் பின்னரும் வாக்காளர் பட்டியலில் பெயரைப் பதிவு செய்வதைத் தேர்தல்கள் ஆணைக் குழு தடுத்து நிறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சார்ள்ஸ் நிர்மலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த பல ஆயிரம் மக்கள் இந்தியாவில் வசிக்கும் நிலையில், அவர்களது பெயர் விவரங்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வேறு மாவட்டத்தில் சொந்தமாக வீட்டில் தங்கியிருப்போர், பின்தங்கிய மாவட்டமான மன்னார் மாவட்டத்தின் பதிவினை நீடிப்பதன் மூலம் மாவட்டத்துக்கு கிடைக்கும் சொற்ப சலுகைகளையும் அனுபவிக்க முயல்கின்றனர்.

மாவட்டத்திலேயே வாக்காளர் பட்டியலை பேணும் அதேநேரம், வசதி வாய்ப்பான ஓர் மாவட்டத்தில் கல்வியைத் தொடர்ந்துவிட்டு எமது மாவட்ட வாக்காளர் பட்டியல் மூலமே பல்கலைக் கழக தேர்வும் இடம் பெறுகின்றது.

எனவே இவற்றை அடிப்படையாக கொண்டு பிறமாவட்டத்தில் வசிப்போர் எமது மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலை தொடர்வதைத் தடுக்குமாறு வேண்டுகின்றேன் என தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

குறித்த விடயத்தினை ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக்குழு 2018 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், இதனை முறைப்பாடாகக்கொண்டு, அவற்றை பரிசீலிக்க வேண்டும். அவ்வாறு பிற மாவட்டத்துக்கு வெளியில் நிரந்தரமாக வசிப்பவர்களின் பெயர்கள் இருப்பின் அது தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு பிற மாவட்டத்தில் இருந்தும் மன்னாரில் பதிவினை மேற்கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை கண்டறியப்பட்டு அதன் பின்பே அதற்கான தீர்வைக் கண்டறிவது என ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-105)

## காணிகள் விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல்

நானாட்டான், மார்ச் 14

நானாட்டான் பிரதேசத்தில் காணிகளை விடுவிப்பது தொடர்பாக திணைக்களங்களுடனான கலந்துரையாடல் ஒன்று நானாட்டான் பிரதேச செயலர் மா. சிறிஸ்கந்தகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள அரச காணிகள், நீர்ப்பாசனம் கமநல அபிவிருத்தி திணைக்களங்களின் காணிகள், இடம்பெயர்ந்து இந்தியாவில் ஏதிலிகளாக சென்றவர்கள் ஆகியோரது காணிகளையும் வனவிலங்கு வனஇலாகா திணைக்களத்தினர் எல்லைகள் இட்டு வந்தனர்.

இதன்மூலம் எழுந்த முரண்பாட்டைத் தீர்க்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் நானாட்டான் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது

இது பற்றிக் கூட்டத்தில் மேலும் பேசப்பட்டதாவது;

வனவிலங்கு வன இலாகா திணைக்களத்தினர் காணிகளை எல்லையிட்டு வருகின்றமையால் எழும் பிணக்கு தொடர்பாக அண்மையில் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வருகையின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இவ்விடயங்களை தீர்க்கும் பொறுப்பு மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக பிரதேச ரீதியாக சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்களங்களையும் அழைத்துக் கலந்துரையாடித் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்காக இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வன இலாகா மற்றும் வனவிலங்கு தொல்பொருள் திணைக்களத்தினர், நீர்பாசனத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் சட்டத்துறையினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-213)

## 50 முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலா

கிளிநொச்சி, மார்ச் 14

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் முதியோர் உளசமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி சாந்தபுரம் கிராம முதியோர்கள் 50 பேர் இன்று வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்தில் உள்ள திருத்தலங்களுக்கு ஆன்மிகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினர் மேற்கொண்டுள்ளனர். மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் முதியோர் சங்கங்களை அமைத்து கிராமத்தின் பொதுச் சேவைகளில் ஈடுபடும் பொருளாதார நிலையில் பின்தங்கிய முதியோர்களை அவர்களின் உளசமூக மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு ஆன்மீகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். (க-9)

# படைப்புழுவை அழித்து எம்மைக் காப்பாற்றுங்கள்

## இரணைமடு விவசாய சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 14

2 ஏக்கர் சோளப் பயிர் செய்கையில் முழுமையாக பீடித்துள்ள படைப்புழுவை அழித்து ஏனைய விவசாயிகளைக் காப்பாற்றுமாறு இரணைமடு விவசாயச் சம்மேளனச் செயலர் மு.சிவமோகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் வில்சன் வீதியில் உள்ள இரு விவசாயிகளான சோ.நாகலிங்கம், கயன் ஆகியோர் 2 ஏக்கர் நிலப்பரப்பில் சோளப்பயிர் செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

சோளப்பயிர்முழுமையாகப் படைப்புழுவினால் பாதிக்கப்பட்டுள்ளது.

மகிழங்காடு கமக்கார அமைப்பின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த விடயம் தற்போது எமதுகவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அதனை நாம் பரீட்சித்துப் பார்த்த நிலையில் பயிர்களை முழுமையாக அழிப்பதனைத் தவிர வேறு வழியில்லை.

இதனால் சோளப் பயிரை அழித்துஏனைய விவசாயிகளை காப்பாற்றுவதோடு சிறு போக நெற்செய்கையையும் பாதுகாக்குமாறு மாவட்ட கமநல சேவைத் திணைக்களம் மாவட்ட விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம்.

இருப்பினும் இதுவரை குறித்த பயிர்கள் அழிக்கப்படவில்லை.

இதனால் அப் பகுதி விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் பாதிப்பு ஏற்படுமா என்றும் அச்சமடைந் துள்ளனர் - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம் தொடர்புகொண்டு கேட்டபோது:

படைப்புழுவின் ஆபத்து தொடர்பில் சகல திணைக்களத்துக்கும் ஏற்கனவே தெளிவாகக் கூறப்பட்டது. தற்போதே எனது கவனத்துக்குகொண்டுவரப்பட்டுள்ளது.

சகல திணைக் களங்களும் உடனடியாக களத்தில் இறங்கி அதனைமுழுமையாக அழிக்க நடவடிக்கை எடுப்பதோடு அயலில் உள்ள விவசாய நிலங்களுக்குப் பரவுவதற்கான ஏது நிலமை உள்ளதா என்பது தொடர்பிலும் ஆராயப்படும். - என்றார்.

(ஜ-105)



### ஒளிரும் கிராமம் அபிவிருத்திப் பணிகள்

வவுனியா,மார்ச் 14

வவுனியா நகர சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபனின் நிதிப்பங்களிப்பில், நகர சபையின் முதலாம் வட்டாரத்தில், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் ஒழுங்கமைப்பில் ஒளிரும் கிராமம் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக புதிய தெரு விளக்குகள் நேற்றைய தினம் பொருத்தப்பட்டன.

திருநாவற்குளம் நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளமையால் ஆலய நிர்வாகத்தின் வேண்டுகோளின்படி ஆலய வெளி வீதிக்குரிய தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (க-222)

### ஊடகவியலாளரின் வீட்டில் திருட்டு

முல்லைத்தீவு, மார்ச் 14

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பில் அமைந்துள்ள ஊடகவியலாளர் ஒருவரின் வீடு உடைத்து கமரா மற்றும் மடிக்கணினிகள் திருடப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம் பெற்றுள்ளது. வீட்டின் கதவு உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த பெறுமதியான இரண்டு கமராக்கள் மற்றும் மடிக்கணினி என்பன திருடப்பட்டுள்ளன. (க-ரி3,21)



### பேசாலையில் தியானம்

மன்னார்,மார்ச் 14

இந்தியாவிலிருந்து மன்னார் மறைமாவட்டத்துக்கு வருகை தந்திருக்கும், வின்சென்ஷியன் அருட்தந்தையர்கள் முன்னின்று நடத்தும் பொப்புலர் மிஷன் தியானம் முதலில் வங்காலை புனித ஆனாள் பங்கில் ஆரம்பமாகி, பின் பள்ளிமுனை புனித லூசியா ஆலய பங்கில் நிறைவேற்றப்பட்டத்தைத் தொடர்ந்து, பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு-60)



## இழப்பீட்டை ஏப்பம் விடும் வயல் உரிமையாளர்களால் குத்தகையாளர்கள் பாதிப்பு

அழிவடைந்த பயிருக்கான இழப்பீடுவழங்கப்படும்போது அந்த இழப்பீடு பாதிக்கப்பட்ட விவசாயிக்குச் சென்றடையாதுகாணியைக்குத்தகைக்கு விட்டு குத்தகைப் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் காணி உரிமையாளர்களுக்கே கிடைக்கின்றது என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளம் காரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கானஏக்கர்நெல் வயல்கள் அழிவடைந்தன.

இந்தப் பாதிப்புக்களால் கிளிநொச்சி மாவட்டத்தில் 3ஆயிரத்து 250 நெற் பயிர்செய்கையாளர்கள் முழுமையாகவும், பகுதியளவிலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் பயிர்களின் அழிவுக்கேற்ற வகையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இழப்பீடு வழங்கப்பட்டும் வருகிறது. ஆனால் 3 ஆயிரத்து 250 நெற் செய்கையாளர்களில் பலர் வேறொருவரின் வயல்க் காணியை குத்தைக்கு எடுத்தே வயல் விதைப்பை மேற்கொண்டனர். வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவும், பாதிப்பும் காணியைக் குத்தகைக்கு எடுத்து விதைத்தவருக்கே ஏற்பட்டது. ஆனால் வெள்ள அழிவுக்கான இழப்பீடு சட்டரீதியாக காணிஉரிமையாளரின்பெயரிலேயே பதியப்பட்டு அவருக்கே வழங்கப்படுகிறது. இதனால் காணிகளை குத்தகைக்குப் பெற்று அதில் விதைத்து அழிவைச்சந்தித்தவிவசாயிகளுக்கு எந்தப்பயனும்கிடைக்கவில்லை. அரசுஉதவிகள்செய்தபோதும், நேரடியாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

விவசாயிகள் மீண்டும் மீண்டும் கடன் சுமைக்குள் தள்ளப்பட்டும் நிலையே தொடர்கின்றது. இழப்பீட்டைப் பெறும் உரிமையாளர்கள் அதனை தங்களிடம் எவர் குத்தைக்கு எடுத்து விதைத்தாரோ அவர்களிடமே வழங்கவேண்டும். என்று கேட்கப்பட்டுள்ளது.

(க-21,214)

## தவக்கால தியானங்கள்

### பொதுநலச் செயலே இறைவன் விருப்பம்!

பிறர் உங்களுக்குச் செய்யவேண்டுமென விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.

(மத்.7:12)

வானம் எமக்கு மழை தரவேண்டும். கதிரவன் ஒளிதரவேண்டும். பூமி விளைச்சல் தரவேண்டும். காற்று இதமாக இந்த விருப்பத்தை நிறைவு செய்கிறது. ஆனால் மனிதரோ தனக்கும் தான் சார்ந்தவர்களுக்கு மட்டுமே அனைத்தும் கிடைக்க வேண்டுமென விரும்புகிறான்.

பட்டம், பதவி, புகழ், முன்னுரிமை, தலைமைத்துவம், கௌரவம், பணம், பாதுகாப்பு, அறிவு, உதவி, அரவணைப்பு, அன்பு, பாசம் போன்ற பல்வேறு நிலைகளை பிறர் எமக்கு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கும் நாம் அவர்களுக்கு இவற்றை வழங்கத் தயாராக இருக்கின்றோமா? எம் நிலை இறங்கி பிறர் துயர் துடைக்கும் அன்புக்கரங்களாகச் செயற்படுகின்றோமா?

இயேசுவின் 'பொன்விதி'யைக் கடைப்பிடிக்க வேண்டுமெனில் எமது கண்ணோட்டங்கள் மாற்றம் பெறவேண்டும். அடுத்தவரின் நலனை மழுங்கடிக்கும் மனநிலையை விடுத்து உயர்த்தும் ஏணியாக மாறவேண்டும். என்னுடைய வளர்ச்சியும் மகிழ்ச்சியும் பிறரின் உயர்வில்தான் தங்கியுள்ளது என்ற எண்ணம் பெருகவேண்டும். மனித உறவுகள் உருப்பெற அடிப்படைப் பொன்விதி மனித உறவுகள் தளைக்கும்போது மனிதம் வளரும். மனிதம் மலர்ந்தால் இறையாட்சி எங்கும் நிலை கொள்ளும்.

*எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை*

## விளையாட்டு மைதானத்தின் தரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்

### மாவட்ட இளைஞர் கழகங்கள் கோரிக்கை

கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட பன்னாட்டு விளையாட்டு மைதானம் எதிர்வரும் 17 ஆம் திகதி திறக்கப்படும் நிலையில் அதன் தரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று மாவட்ட இளைஞர் கழகங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அந்தக்கோரிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் பன்னாட்டு விளையாட்டு மைதானம் ஒன்று 200 மில்லியன் ரூபாவில் அமைப்பதாக திட்டமிடப்பட்டு அதன் பணிகள் மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்காக 2012 ஆம் ஆண்டு பணிகள் ஆரம்பித்த நிலையில் இதே பெறுமதியில் அநுராதபுரம் மாவட்டத்திலும் ஓர் விளையாட்டு மைதானம் ஆரம்பிக்கப்பட்டது.

இவை இரண்டுக்கும் அனுமதிக்கப்பட்ட நிதி போதாமையால் அப்போதைய விளையாட்டு அமைச்சராக இருந்தவர் எமது மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்த எஞ்சிய நிதியையும் இரகசியமான முறையில் அநுராதபுரம் மாவட்டத்துக்கே கொண்டு சென்றுவிட்டார். எமது மாவட்ட விளையாட்டு அரங்கின் பணிகள் முழுமையாகத் தடைப்பட்டன. இந்த நிலையில் தொடர்ந்தும் எழுந்த குரலை அடுத்து பகுதி பகுதியாக 7 ஆண்டுகளாக கட்டிமுடிக்கப்பட்ட விளையாட்டு அரங்கு தற்போது பணிகள் முடிவுற்றதாக கூறப்படுகின்றது.

சுயாதீன பொறியியலாளர் குழுவை நியமித்து அதன் மூலம் தரத்தினை உறுதி செய்த பின்பே அங்கு விளையாட்டுக்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் கருத்து தெரிவிக்கையில் இளைஞர் கழகங்களின் ஐயமும் நியாயமானது. இருப்பினும் விளையாட்டுத்துறை அமைச்சு அதன் தரம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தியே அமைப்பாளர்களால் மைதானம் எம்மிடம் கையளிக்கப்பட்ட பின்பும் ஒரு தடவைமாவட்டச்செயலகபொறியியலாளர்கள் மூலம் தரத்தினை உறுதி செய்துகொள்ள முடியும். -என்றார்.

(ஜ-105)

# திட்டமிடப்படாத முறையில் கிளிநொச்சியில் வேலைத்திட்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் திட்டமிடாத வகையில் மேற்கொள்ளப்படுவதால் அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்படுவதாக நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு, நிரந்தர போக்குவரத்து நிலையம் இன்றி மரநிழல்களிலும், வீதிகளிலும் மக்கள் நின்று தமது பயணங்களை மேற்க் கொண்டு வந்தனர். இந்த நிலையில் கடந்த இரு வருடங்களுக்குமுன்னர்பேருந்து நிலையம் அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்று அவற்றுக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அவை ஒரு வருட காலமாக அரை குறை வேலைகளுடன் நிறுத்தப்பட்டுள்ளன.

அதில் தற்போது பல் வேறு சமூகச்சீர்கேட்டு விடயங்கள் இடம்பெறுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்ததாவது:

மாவட்ட அபிவிருத்திப்பணிகளில் ஒரு சில வேலைத் திட்டங்கள் திட்டமிடாத வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதற்கு உதாரணங்களாக போக்குவரத்து நிலையம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, தென்னிலங்கை ஒப்பந்தாரருக்கு வழங்கியிருந்தது. ஆனால் இன்று அவரைக் கண்டு கொள்ள முடியவில்லை. அதே போல் கிளிநொச்சி மாவட்ட பொது மைதானம்தென்னிலங்கை ஒப்பந்தக்காரர்களிடம் கையளிக்கப்பட்டு அதுவும் வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை. அதே போல் சில பொதுமண்டப கட்டடங்கள்,அக்கராயன் பகுதியில் உள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள் எனப் பல வேலைத்திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் தென்னிலங்கையர்களிடம் கையளிக்கப் பட்டு, முடிவுறுத்தப்படாத வேலைத்திட்டங்களாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு மாவட்டத்தின் பல வேலைகள் யாரிடம் வழங்கப்பட்டது என்று கூட தெரியாத நிலையில் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அவற்றை நிவர்த்தி செய்தால் தான் மாவட்டம் அபிவிருத்திப் பாதையில் பயணிக்க முடியும். குறிப்பாக மகிந்த ராஜபக்ச காலத்தில் பல வேலைகள் ஆரம்பிக் கப்பட்டு முடிவுறுத்தப்படாத வேலைத்திட்டங்கள் ஆக காணப்படுகின்றன.

அதற்கு உதாரணமாக பொது மைதானம் மற்றும் பொருளாதார மத்திய நிலையங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம் எனத் தெரிவித்தார். (க-6)



## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் கிளி.மாணவர்களுடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி,மார்ச் 14

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கிளிநொச்சியில் உள்ள யாழ் பல்கலைக்கழக விவசாயப்பீட. பொறியியல்ப்பீட மாணவர்களை நேற்று முன்தினம் சந்தித்து தாம் நாளை மறுதினம் நடத்தவிருக்கும் மாபெரும் கவன வீர்ப்பு போராட்டம் தொடர்பான விளக்கத்தை வழங்கியுள்ளனர்.

ஐ.நாவால் நடைபெறும் ஜெனிவா அமர்வில் இலங்கை அரசுக்கு காலநீடிப்பு வழங்காதுபன்னாட்டு குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என்பது காலம் கடந்த நீதி நடைமுறையில் வராது என்பதை, யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் திவிராஜீம்,மாணவர் ஒன்றியச் செயலர் பபில்ராஜீம் ஆகியோர் தெளிவுபடுத்தினர். (க-222)



## வவு.பொது அமைப்புக்களுடன் பல்கலை மாணவர்கள் சந்திப்பு

காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலையை வெளிபடுத்தக் கோரியும்,மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும், நாளை மறுதினம் 16 ஆம் திகதி, யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடுசெய்பட்டுள்ள போராட்டம் தொடர்பானகலந்துரையாடல்ஒன்று வவுனியாவில் நேற்று முன் தினம் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் வவுனியா மாவட்ட பொது அமைப்புகள்.அரசியல்க் கட்சிகளைச் சார்ந்தோர் கலந்து கொண்டனர். நிகழ்வில், காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவுகள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து செயற்படுகின்றமை,மற்றும் தன்னிச்சையாகச் செயற்படுகின்றமை தொடர்பாகவும், அவர்களை ஒருங்கிணைப்பது தொடர்பாகவும், கலந்துரையாடலில் கவனம்செலுத்தப் பட்டதுடன், போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பும் ஆதரவை வழங்கவேண்டும் என்றுபல்கலைக்கழக மாணவர்களால்கோரப்பட்டிருந்தது. இந்த நிலையில் கலந்துரையாடலில் பங்குகொண்டிருந்த வவுனியா வர்த்தகர் சங்கம்,வவுனியா வரியிறுப்பாளர் சங்கம் ஆகியன இந்தப் போராட்டத்துக்கு தமது பூரண ஆதரவை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)

### மேலதிக விதைப்பில் ஈடுபடும்

# விவசாயிகளின் நீர் உரிமம் நிறுத்தம்

கிளிநொச்சி,மார்ச் 14

இரணைமடுசிறுபோகத்தில் மேலதிக விதைப்பில் ஈடுபடும் விவசாயிகளின்நீர் உரிமம் இரத்துச் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2019 ஆம் ஆண்டுக்கான இரணைமடுவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட சிறுபோக நெற்செய்கை அளவுக்கு மேலதிகமாகப் பயிர் செய்கை நடவடிக்கைகளில் ஈடுப்படும் விவசாயிகளின் நீர் உரிமம் இரத்துச் செய்யப்படும் என இரணைமடு சிறுபோக குழுக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கிளிநொச்சிமாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்கான சிறுபோகம் 15 ஆயிரம் ஏக்கர் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுவின் கீழ் உள்ள 21கமக்கார அமைப்புகளின் கீழும் தீர்மானிக்கப்பட்ட அளவுகளில் விதைப்புகள் இடம்பெறும். மாறாக இதனை கவனத்தில் எடுக்காது கடந்த காலங்கள் போன்று விவசாயிகள் மேலதிக விதைப்பில் ஈடுப்பட்டால் அவர்களின் நீர் உரிமை இரத்துச் செய்யப்படும் எனத்தீர்மானிக்கப் பட்டுள்ளது. (க-214)

## மாணவர்களுக்கு உதவி

மன்னார்,மார்ச் 14

மன்னார் பெரியகுஞ்சுக்குளம் சென் லூட்ஸ் மகா வித்தியாலயம் அதிபர் எஸ்.ராசரத்தினத்தின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்.களரியினால் 11 ஆம் திகதி பாடசாலையில் கல்விகற்கும் 30 மாணவர்களுக்குரிய பாடசாலைப் புத்தகப் பையும், உளவியல் கற்கை நெறி புத்தகங்களும் பாடசாலை அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உதவித்திட்டத்துக்குரிய நிதியை பிரித்தானியாவில் வசிக்கும் ஈழத்தமிழர் ஒருவர் தனது பிறந்த நாளை முன்னிட்டு வழங்கியிருந்தார். (க)

## சக்கர நாற்காலி வழங்கல்

கிளிநொச்சி,மார்ச் 14

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக முழங்காவில் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் பிறப்பிலேயே மாற்றுத்திறனாளியாக உள்ள ஒருவருக்கு பொன்மணி அறக்கட்டளை நிதியத்தினால் சக்கர நாற்காலி ஒன்று கடந்த 11ஆம் திகதி வழங்கப்பட்டது.(க-222)



## கெரோய்னுடன் இருவர்கைது

வவுனியாவில் கெரோய்ன் போதை பொருளை உடமையில் வைத்திருந்த இருவரைக் கைதுசெய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை வவுனியா புதியபேருந்து நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த வவுனியா பொலிஸ் நிலைய போதைத்தடுப்பு பிரிவின் சாயன்ட் யெகத், கான்ஸ்டபிள்களான மிதுசன், சமன்,ருவன்குமார,பண்டார ஆகியோரைக் கொண்ட பொலிஸ்குழுவினர், சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற இருவரைச் சோதனைசெய்த போதே குறித்த போதைப் பொருளை மீட்டுள்ளனர். சம்பவத்தில் மாளிகாவத்தை,நுகேகொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 வயதான இருவர் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம் பெறுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (க-110)



## புத்தகப்பை வழங்கல்

மன்னார்,மார்ச் 14

மன்னார் மாவட்ட பெண்கள் மற்றும் சிறுவர் மேம்பாட்டு அமைப்பின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பை நேற்றுக் காலை வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மடு பூமலந்தான் பாடசாலையில் கல்வி கற்கும் 50 மாணவர்களுக்கும், பண்ணை வெட்டுவான் ம. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 50 மாணவர்களுக்கும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட பெண்கள் மற்றும் சிறுவர் மேம்பாட்டு அமைப்பின் இணைப்பாளர் அந்தோனி சகாயம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள்,அதிபர் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-56)

## விபத்தில் பெண் காயம்

முல்லைத்தீவு, மார்ச் 14

ஒட்டுசுட்டான் கணேசபுரம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப் பாணப் பொது மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கணேசபுரம் முதன்மை வீதியில் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்தபோது உந்துருளி மோதிக் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 45 அகவையுடைய சி.தியாகினி (வயது 45) என்பவரே படுகாயமடைந்தார்.

ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (து- ரி3)

## இலங்கையில் இடம்பெறவுள்ள

# வேலைத் திட்டங்களுக்கென 32.58 மில்.டொலர் வழங்கவும்

### அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் பரிந்துரை

கொழும்பு, மார்ச் 14

**இலங்கைப் பொருளாதார அபிவிருத்தி, கண்ணிவெடிகளை அகற்றுதல் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவுஅளிக்க அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், 32.58 மில்லியன் டொலரைக் கோரியுள்ளது.**

2020ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் ஆகியவற்றுக்கு 40 பில்லியன் டொலரை ஒதுக்கீடு செய்யுமாறு, அமெரிக்க நாடாளுமன்றிடம் திணைக்களம் கோரிக்கை முன்வைத்துள்ளது. இதில், 32.58 மில்லியன் டொலர் இலங்கைக்கு ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல், சிறிய /இலகு ஆயுதங்களை அழித்தல், மரபுவழி ஆயுதங்களின் பாதுகாப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை முன்னேற்றுதல் ஆகியவற்றுக்கு 5 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி கட்டுப்பாடு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திட்டத்துக்கு இலங்கைக்கு 3 லட்சத்து 80 ஆயிரம் டொலரை ஒதுக்கவும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. 2020இல் அனைத்துலக இராணுவ கல்வி மற்றும் பயிற்சிகளுக்காக இலங்கைக்கு 9 இலட்சம் டொலர் ஒதுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)



## மருத்துவமனையிலிருந்து தப்பித்து தீ மூட்டி காயம்

வடமராட்சி, மார்ச் 14

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி, அங்கிருந்து தப்பிச்சென்று தனக்குத்தானே மண்ணெண்ணை ஊற்றிக் கொழுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வீதியில் சில நாள்களுக்கு முன்னர் சம்பவம் இடம்பெற்றது. அவர் ஆபத்தான நிலையில் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மருத்துவமனையில் சிகிச்கை பெற்று வந்தவர் அங்கிருந்து வெளியே சென்றமை தொடர்பில் பலரும் சிலாகிக்கின்றனர்.

கொற்றாவத்தையைச் சேர்ந்த 34 வயதுடையவரே இந்த நிலைக்கு ஆளானார். அவர் புல்லுக்கு விசிறும் மருந்தை உட்கொண்ட நிலையில் மருத்துவனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கிருந்து வெளியேறிச் சென்று கடையொன்றில் மண்ணெண்ணெய் வாங்கி தனக்குத் தானே ஊற்றி தீ மூட்டினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

“உதவியாளர் ஒருவருடனேயே அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்றுக் காலை உதவியாளர் வெளியில் செல்லும் போது அவரும் சென்றுள்ளார். இந்த விடயம் தமக்குத் தெரியாது. காலையில் கடமை மாறும் போது சம்பவம் இடம்பெற்றுள்ளது. 7மணிக்குப் பின்னர் கடமையைப் பொறுப்பேற்றவர்கள் அவரைத் தேடியபோதே அவர் தப்பித்தது தெரியவந்தது என்று மருத்துவமனப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(த-21,26,173)

## ராமநாயக்க மீதான வழக்கு ஜூன் 12இல்



கொழும்பு, மார்ச் 14

நீதிமன்றை அவமதித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான விசாரணைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஓகஸ்ட் 21இல் நடைபெற்ற, ஊடகவியலாளர் மாநாட்டில் நீதிமன்றங்கள் மற்றும் வழக்கறிஞர்கள் தொடர்பாக ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்ட கருத்து நீதிமன்றங்களை அவமதிக்கும் வகையில் இருப்பதாகத் தெரிவித்து, தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையிலேயே குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டிலுள்ள நீதிவான்கள் மற்றும் வழக்கறிஞர்களில் பெரும்பாலானோர் ஊழல்வாதிகள் என்று, இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டொன்றை முன்வைத்திருந்தார்.

இது நீதிமன்றத்தை அவமதிப்பதாகத் தெரிவித்து, ஓய்வு பெற்ற வானூர்திப்படை அதிகாரியான சுனில் பெரேரா மற்றும் சிங்கள ராவய அமைப்பின் செயலர் மாகல்கந்த சுதத்த தேரர் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில், இரு வேறு மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். (த)



நன்றி நாமல் அமரசிங்க

## பொருளாதாரத் தடைக்கு அஞ்சி 2 வருடங்களுக்கு முன் தேர்தல்

### மகிந்த ராஜபக்சவின் குட்டை வெளிப்படுத்துகிறார் சபை முதல்வர்



கொழும்பு, மார்ச் 14

பொருளாதாரத் தடைகளுக்கு அஞ்சியே அரசதலைவர் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு முன்பாக முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச நடத்தினார் என்று சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து குழுநிலை விவாதம் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மகிந்த ராஜபக்சவின் ஆட்சி நாட்டில் தொடர்ந்திருக்குமாக இருந்திருந்தால் நாடு பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருக்கும்.

நாட்டை மகிந்த ராஜபக்ச சீரழித்தார். மகிந்தவின் ஆட்சி தொடர்ந்திருந்தால் நாம் சில பன்னாடுகளுடன் முரண்பட வேண்டிய ஏற்பட்டிருக்கும். எனினும் நாம் நாட்டை பன்னாடுகளிடமிருந்து காப்பாற்றினோம் - என்றார். (த)

## கோத்தா அரசதலைவரானால் நாடு குருதிக் காடாகிவிடும்!

### முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா ஊடக சந்திப்பில் காரசாரமாகக் கருத்து

கொழும்பு, மார்ச் 14

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அரசதலைவரானால் நாடு குருதிக் காடாக மாறும் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவரது வீட்டில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்டால், அனைவரும் சாவுப் பயணத்துக்குத் தயாராக இருக்க வேண்டும். பாதுகாப்புச் செயலராக பதவி வகித்தபோது வெள்ளை வானைக் கொண்டு கண்முன் தெரியாமல் ஆள்களைக் கொலை செய்ய முடியுமாயின், அந்த மனிதன் இந்த நாட்டின் அரசதலைவரானால் நாடு குருதிக் காடாக மாறும்.

இராணுவத்தைச் சேர்ந்தவருக்கு, அரசதலைவர் பதவியைக் கொடுக்க வேண்டுமாயின் இராணுவத்தில் கொலை செய்யாத சிறந்தவர்கள் இருக்கின்றனர். கோத்தபாயவை விட ஜெனரல் பொன்சேகா சிறந்தவர். அவரே போர்க் களத்தில் இருந்தார். கோத்தபாய குளிரூட்டிய அறையில் இருந்தார். போருக்கு அரசு பணத்தை ஒதுக்கும்போது அதனைச் செலவிட வேண்டும். அது அவரது வேலை. எவ்வாறாயினும் கோத்தபாய ராஜபக்ச நாட்டின் அரசதலைவராகப் பதவிக்கு வந்தால், ஹிட்லர், முசோலினி போன்றவர்களை விட நிலைமை மோசமாக மாறும்.

குமார வெல்கம போன்றவர்கள் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் உள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நிமல் சிறிபால டி சில்வா போன்றவர்கள் இருக்கின்றனர்.

கோத்தபாய ராஜபக்ச மட்டுமா இருக்கின்றார். ராஜபக்ச குடும்பம் சுத்தோதனன் (புத்த பகவானின் தந்தை) குடும்பமாக மாற முடியாது. சித்தார்த்தன் (புத்தர்) குடும்பமாக மாற முடியாது. இதனை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**மைத்திரி பைத்தியக்காரன்**

பசில் ராஜபக்ச தரகுப் பணம் பெறுபவர். கோத்தபாய ராஜபக்ச கொலைகாரன். இவர்கள் செய்த குற்றங்கள் குறித்து நான் குற்றப் புலனாய்விப் பிரிவில் முறைப்பாடு செய்தேன். இன்னும் விசாரணைகள் நடக்கவில்லை. மைத்திரிபால சிறிசேன பைத்தியகாரன். சிறிசேனவுக்கு பதிலாக அங்கொடையில் இருந்து ஒருவரை அரசதலைவர் தேர்தலில் நிறுத்தலாம் - என்றார். (த)

## மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

சாவகச்சேரி, மார்ச் 14

காணி பார்க்கச் சென்றபோது மயங்கிவீழ்ந்த குடும்பத் தலைவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்வழியில் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கு கட்டப்பிராயைச் சேர்ந்த சின்னராசா லோகேஸ்வரன் (வயது 54) என்பவரே உயிரிழந்தார்.

பளையில் உள்ள காணியை நேற்றுமுன்தினம் பார்வையிடச் சென்றபோது காணிக்குள் மயங்கி வீழந்துள்ளார். அங்குள்ளவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். பரிசோதனையின்போது அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-9)

## கொள்ளையிட்ட பொருள்கள் இலங்கைக்கு மீள வழங்கப்படும்

கொழும்பு, மார்ச் 14

ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இலங்கையில் கொள்ளையிட்ட பழங்காலப் பொருள்களை மீண்டும் இலங்கையிடம் வழங்குவது தொடர்பான பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெதர்லாந்து ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையுடன் மட்டுமல்லாது இந்தோனேசியா உட்பட சில நாடுகளுடனும் இதேபோன்ற பேச்சுக்களை நெதர்லாந்து ஆரம்பித்துள்ளது.

நெதர்லாந்தில் உள்ள, அந்த நாட்டுக்குச் சொந்தமில்லாத பொருள்கள் அந்தந்த நாடுகளிடம் கையளிக்கப்பட உள்ளன. அம்ஸ்டர்டாமில் உள்ள அருங்காட்சியகம் இந்த பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் கண்டி ராச்சியத்தை ஆட்சி செய்த மன்னர் ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பீரங்கி மாதிரி ஒன்றை இலங்கையிடம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த)

# மகிந்த ராஜபக்ச உரையாற்ற சரியான தகவல் வழங்குங்கள்

## மகிந்த பாவம் சிரமப்படுகிறாரென தினேஸுக்கு மங்கள சாட்டை



கொழும்பு, மார்ச் 14

மகிந்த ராஜபக்சவுக்கு உரை தயார் செய்து வழங்கும்போது சரியான தகவல்களை முன்வையுங்கள். அவரிடத்தில் உரையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் முறையாகப் பரிசிலித்து வழங்குங்கள். பாவம், அவரை தொடர்ந்தும் கஷ்டத்துக்குள்ளாக்காதீர்கள் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்த்தனவை நையாண்டி செய்துள்ளார், நிதி அமைச்சர் மங்கள சமரவீர.

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின், இரண்டாவது வாசிப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. எதிரணி உறுப்பினர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, மேற்கண்டவாறு கூறினார்.

நாங்கள் நாட்டைக் காட்டிக்கொடுத்து ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொண்டுள்ளோம் என்று கூறுகின்றார்கள்.

நீங்கள் இல்லாது ஒழித்த அந்தச் சலுகையை நாங்கள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்டுள்ளோம்.

ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை, வெள்ளை வான்கள் நிறுத்தப்பட்டமை, கடத்தல் நிறுத்தப் பட்டமை, நாட்டைக் காட்டிகொடுக்கப்பட்ட செயலா? உங்களுடைய அரசின் நடவடிக்கைகள் காரணமாகவே நாட்டுக்கு கிடைக்கவிருந்த ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இல்லாது போனது.

நாம் 2015ஆம் ஆண்டு அரச நிர்வாகத்தைப் பொறுபேற்றபின்னர் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டோம். ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை எமக்கு மீண்டும் கிடைத்தது. இவையெல்லாம் நாட்டை காட்டிக்கொடுத்த செயலா?

உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க, முறிகளுக்கு அதிகளவு வட்டி வழங்க வேண்டிய நிலமை உருவாகியுள்ளதாகக் கூறியுள்ளார். 52நாள்கள் அரசியல் சூழ்ச்சி காரணமாக அந்த நிலமை ஏற்பட்டது.

எமது ஆட்சிக்காலத்தில் தான் அதிகளவு வாகனங்கள் தனியாரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக வாகனங்களின் விலையை அதிகரிக்க வேண்டியேற்பட்டது. சிறுவர் சேமிப்பு வங்கிக் கணக்கில் 12 லட்சம் ரூபா இருந்தால் தான் சிரமம். எதிர்த் தரப்பு பிள்ளைகளின் வங்கி கணக்கில் இவ்வாறான தொகை இருக்கக்கூடும் - என்றார். (த-61)

# ராஜபக்சவின் கட்சி மிளகாய்த்தூள் கட்சி!

## சபையில் கிண்டலடித்த ரணில்

கொழும்பு, மார்ச் 14

மகிந்த ராஜபக்ச தலைமையிலான எதிர்க்கட்சியை 'மிளகாய்த் தூள் எதிர்க்கட்சி' என்று தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் கிண்டலடித்துள்ளார். தமது அரசு புளியங்காய் அரசு அல்ல என்றும் கூறியுள்ளார்.

அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கான நிதி ஒதுக்கீடுகள் உட்பட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்த குழுநிலை விவாதம் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது.

இந்தக் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கிண்டலடித்துள்ளார்.

தற்போதைய அரசை எதிர்க்கட்சியினர் புளியங்காய் அரசு என விமர்சிக்கின்றனர். எனினும் எங்களுக்குடைய அரசு புளியங்காய் அரசு இல்லை. எதிர்க்கட்சி மிளகாய் தூள் எதிர்க்கட்சியாகக் காணப்படுகின்றது.

நாடாளுமன்றில் மிளகாய்த் தூள் தாக்குதல் மேற்கொண்டு நாடாளுமன்றின் அதியுயர் தன்மையை எதிர்க்கட்சியினர் கேள்விக்குறியாக்கியமையை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று மேலும் தெரிவித்தார். (த)

# இந்தியா - பாகிஸ்தான் பதற்றம் வளரக்கூடாது

## பாகிஸ்தான் தூதருக்கு விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 14

'இந்தியா- பாகிஸ்தான் இடையிலான பதற்ற நிலை தீவிரமடையக் கூடாது என்றும், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நிலைமைகளை இலங்கை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்றும் இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சாஹிட் அகமட் ஹஸ்மத் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்து, புல்வாமா தாக்குதலை அடுத்து ஏற்பட்டுள்ள பிராந்திய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

இதன்போது, கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பதற்றநிலை மோசமடையக் கூடாது.

இரண்டு நாடுகளும் எல்லாப் பிரச்சினைகளையும் அர்த்தமுள்ள பேச்சுமூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலமே, பிராந்தியத்தில் அமைதி மற்றும் உறுதிப்பாட்டை ஊக்குவிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (த)

# உறுப்பினரின் வீட்டுக்கு பெற்றோல் குண்டுவீச்சு

கொழும்பு, மார்ச் 14

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மேல்மாகாண சபை உறுப்பினர் முகம்மட் பாயிசின் கொழும்பு, மட்டக்குளியிலுள்ள வீடு மீது நேற்றுமுன்தினம் அதிகாலை பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் வீட்டின் பின் புறப்பகுதி சேதமடைந்துள்ளது. ஜன்னல் வழியாக அது வீசப்பட்டது என்றும் மின் உபகரணங்கள் மற்றும் சில பொருள்கள் எரிந்து சாம்பலாகி உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் காழ்ப்புணர்வால் இது நடந்திருக்கலாம் என்று அவர் கூறியுள்ளார். (த)

# ஐ.நா. சுற்றாடல் மாநாட்டில் பங்கேற்க சிறிசேன பயணம்

கொழும்பு, மார்ச் 14

கென்யாவின் நைரோபி நகரில் இடம்பெறும் ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் மாநாட்டில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்ள அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கென்யாவுக்குப் பயணமானார். கென்ய அரசதலைவர் உஹூரு கென்யாட்டா வின் அழைப்பின் பேரில் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார். "சுற்றாடல் சவால்களும் நிலையான நுகர்வு மற்றும் உற்பத்திக்கான புத்தாக்கத் தீர்வுகளும்" எனும் தொனிப் பொருளிலான மாநாடு நைரோபி நகரில் மார்ச் 11ஆம் திகதி ஆரம்பமாகியது. நாளைவரை இடம்பெறவுள்ளது. அதன் உயர்மட்டக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சிறிசேன மாநாட்டில் இன்று உரையாற்றுவார்.

பிரான்ஸ் அரசதலைவர் இம்மானுவேல் மெக்ரோன் உள்ளிட்ட இராஜதந்திரிகள் பலர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிலையான உணவுக் கட்டமைப்பு, உணவுப் பாதுகாப்பு, உயிர் பல்வகைமை அழிவடைதலைத் தடுத்தல், வறுமை மற்றும் இயற்கை வளங்களின் முகாமைத்துவத்துடன் தொடர்பான சுற்றாடல் சவால்கள், வளங்களின் வினைத்திறனான பயன்பாடு, சக்தி வளங்கள், இரசாயனப் பதார்த்தங்கள், கழிவு முகாமைத்துவத்துக்கான வாழ்க்கை நடைமுறைகள் மற்றும் துரித தொழிநுட்ப மாற்றங்களுக்கு உள்ளாகும் பருவத்தில் புத்தாக்கப் பேண்தகு வர்த்தக அபிவிருத்தி தொடர்பில் மாநாட்டின்போது கவனம் செலுத்தப்படும். கென்ய அரசதலைவர் உஹூரு கென்யாட்டாவையும் சந்திக்கவுள்ளார்.

1970ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைக்கும் கென்யாவுக்குமிடையில் நட்பு ரீதியான தொடர்புகளே இதுவரை காணப்படுகின்றன. பொதுநலவாய அமைப்பு மற்றும் இந்து சமுத்திர வலய நாடுகளின் அமைப்பு ஆகியவற்றில் இந்த இரு நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

ஆடை உற்பத்தி, நீர் மின் உற்பத்தி, தோட்டக்கலை மற்றும் மோட்டார் வாகன பயிற்சி துறைகளில் தற்போது இலங்கையர்கள் கென்யாவில் பணியாற்றி வருகின்றனர் என்று அரசதலைவர் ஊடக அறிக்கையில் உள்ளது. (த)

# கூட்டமைப்புடன் பேசியிருக்கலாம் சபையில் தவறான கருத்து ஏன்?

## மு.காவிடம் மாவை எம்.பி. கேள்வி



கொழும்பு, மார்ச் 14

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்த வேண்டுமென்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்க்குமாக இருந்தால் எதற்காக அதன் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் பேசினார்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை சோ.சேனாதிராசா.

இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கும் அதேநேரம், தலைமைஅமைச்சர் இந்தவிடயத்தில் தலையிட்டு சுமுகமான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று சேனாதிராசா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 5ஆம் நாள் விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதில் எந்தத் தவறும் இல்லை. கல்முனை பிரதேசம் தனியான தமிழ்ப் பிரதேச செயலகமாக மாற்றப்பட வேண்டும் என்பது கடந்த முப்பது ஆண்டுகளாக பேசப்பட்டுவரும் விடயம்.

இந்த விடயத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்ற காரணத்தைக் கருத்தில் கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

துரதிஷ்டவசமாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது இந்த விடயத்தில் தவறான கருத்துக்களை முன்வைத்துள்ளார். அதற்கு எமது உறுப்பினர் கோடீஸ்வரனும் தனது பதில் கருத்தை முன்வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்முடன் பேச வேண்டும் எனக் கூறும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான ஹரீஸ் இந்த விடயத்தை நாடாளுமன்றில் பேசாமல் எம்முடன் பேசியிருக்கலாம். இதற்குச் சுமுக தீர்வு காணவேண்டும் - என்றார். (த)

# தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் ஒருபோதும் பிரியவே கூடாது

## அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்

கொழும்பு, மார்ச் 14

தமிழ், முஸ்லிம் சமூகங்கள் பிரிந்து விடக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சண்டைபோடுவதற்கு முதல் எங்களுக்குள் பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரு கட்சிகளும் மோதுவது நல்லதல்ல. இந்த வருடம் தேர்தல் வருடம். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஏற்கனவே நடைபெற வேண்டிய தேர்தலைக் காலம் தாழ்த்தினாலும் இந்தவருடக் கடைசியில் அரசதலைவர் தேர்தலையாவது நாட்டு மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தேசிய ரீதியாக ஒரு தேர்தலுக்கு நாம் தயாராக வேண்டும். நாட்டின் அரசியல் போக்கை சிறுபான்மை சமூகத்தினரான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையால் மாற்றியமைக்க முடியும்.

அரசியல்வாதிகளின் தனிப்பட்ட போக்கால் இந்த இரண்டு சமூகங்களும் பிரிந்து விடக்கூடாது. இரு கட்சிகளும் மோதுவது நல்லதல்ல - என்றார். (த)

# அமைச்சர் அமரதுங்கவை கிண்டலடித்த எதிரணியினர்

கொழும்பு. மார்ச் 14

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அமைச்சர் ஜோன் அமரதுங்க தனது உரையை ஆரம்பித்தபோது. அவரை எதிர்த்தரப்பினர் கிண்டல டித்து புன்னகைத்தனர்.

விமல்வீரவன்ச போன்ற எதிர்த்தரப்பினர் குற்றச் சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். அதனை விட வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக ஆழமாகப் பார்த்து கருத்துக்களை முன்வைக்கலாம் என்று கூறியவாறு. வரவு - செலவுத்திட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்த எண்டபிரைஸ் சிறிலங்கா உள்ளிட்ட விடயங்களை வாசிக்கலானார்.

இதன்போது இடைமறித்த விமல்வீரவன்ச, அமைச்சர் மங்கள சமரவீர ஏற்கனவே இந்த 'வரவு செலவுத்திட்ட அறிக்கையை முழுமையாக சபையில் படித்து விட்டார். மீண்டும் நீங்கள் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. நிலையியற் கட்டளைக்கு அமைய வரவு-செலவுத்திட்ட அறிக்கையை இரண்டு தடவைகள் சபையில் படிக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் உங்களுக்கு நேரம் அவசியமில்லை என்றால் எனக்குத் தாருங்கள் என்றும் கோரினார்.

இதன்போது கோபமடைந்த அமைச்சர் ஜோன் அமரதுங்க, நான் அறிக்கையை மீண்டும் வாசிக்கவில்லை. அதிலுள்ள முக்கிய விடயங்களையே சுட்டிக்காட்டி எனது உரையை தொடர விளைகின்றேன். நீங்கள் வரவு செலவுத்திட்டத்தைப் பற்றிக் கதைக்காது வெளியில் சென்று அரசியல் உரையாற்றி விட்டு எனக்கு அறிவுரை கூற வரவேண்டாம் - என்றார்.

இந்தச் சமயத்தில் எழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி. அவர் பாவம். அவருக்கு இன்று நேரம் வழங்கப்படும் என்று தெரியாததால் அவர் உரையாற்றுவதற்குரிய தயார்ப்படுத்தலுடன் வரவில்லை. ஆகவே அமைச்சர் மங்களவின் அறிக் கையை மீண்டும் சுற்றி சுற்றி வாசிக்கின்றார் என்று புன்கையுடன் கூறினார்.

அதற்கு பதிலளித்தஅமைச்சர் ஜோன். யார் வேறுவிடயங்களை பேசுவது என்று தெரியாது இங்கு கதைகின்றார்கள். நான் சரியான விட யங்களையே கூறுகின் றேன் - என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த விமல்வீரவன்ச. சரி அமைச்சரே. நீங்கள் மீண்டும் வாசிக்கும் முன்மொழிவுகளைச் செய்வதற்கு பணம் எங்கிருந்து வரப்போகின்றது - என்றார்.

அதற்கு ஜோன்அமரதுங்க, நீதி அமைச்சர் மங்கள அந்தந்தச் சமயங்களில் அவற்றைக்கொண்டுவருவார். நீங்கள் அஞ்சவேண்டாம் - என்றார்.

அதனையடுத்துக் குறுக்கீடு செய்த மகிந்தானந்த அழுத்கமகே. இறுதி வரவு - செலவுத் திட்டம் இது என்பதால் நிதி அமைச்சராக வரமுடியாத அமைச்சர்களும் தங்களது ஆத்ம திருப்திக்காக மீண்டும் வாசிக்கின்றார்கள். அதற்கு இடமளிப்போம்- என்றார்.

(த-31)

# அரசின் அனுசரணைகளால் கூட்டமைப்பு மயங்கியுள்ளது

## சாடுகிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், மார்ச் 14

**த**மிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அதிகாரத்தால், அதன் வழிவந்தசெல்வச் செழிப்பால் அரச அனுசரணைகளால் மயங்கி நிற்பவர்கள். ஐ.நா. இலங்கைக்குக் காலஅவகாசம் கொடுத்தால் தமக்கு அதுவரை நல்லகாலம் என்ற நோக்கில் கால அவகாசத்தைச் சிபார்சு செய்யலாம்.

இவ்வாறு. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் அனுப்பிய கேள்வி பதில் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

**கேள்வி:** இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையைக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வரவேற்று. காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும். பன்னாட்டுக் கண்காணிப்பு அவசியம் என்றும் கேட்கிறார். காலஅவகாசம் வழங்கக்கூடாதென்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் சில வெளியில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதாக அறிகிறோம். அதில் உங்கள் வகிபாகம் எப்படி இருக்கும்? அதனால் எவ்வாறான பயன் கிடைக்கும் என்று நினைக்கி றீர்கள்? ஏன் காலஅவகாசம் வழங்கக் கூடாது என்பதையும் தெளிவுபடுத்துக.

**பதில்:** 4 வருடங்களாக ஐ.நா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாத அரசு. தற்போது நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று உயர் பதவிகளில் உள்ளோர் கூறியுள்ளார்கள்.

இலங்கை ஏதாவதொரு கடப்பாட்டை நடைமுறைப்படுத்த முன் வந்தால் தான் பன்னாட்டுக் கண்காணிப்பு இடம்பெறும். முன்வராவிட்டால் காலஅவகாசம் வழங்குவதால் இலாபம் என்ன?

காலஅவகாசம் கொடுத்தாலும் அது நடைபெறாது. சவேந்திரசில்வாவுக்கு அதியுயர் இராணுவ பதவி கொடுத்திருப்பதிலிருந்து இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**அமெரிக்காவால் முடியாது**

இரண்டுவருடக் காலக்கெடு 2017ல் கொடுத்தபோது அதுபற்றி அமெரிக்க உயர் அதிகாரி நிஷா பிஸ்வாலுக்குக் கூறினேன். "நாங்கள் உங்களுடன் தான் எப்பொழுதும் இருப்போம்"என்று பிஸ்வால் கூறியிருந்தார். இன்று என்ன நடந்துள்ளது? அமெரிக்கா முன்னால் வரமுடியாமலேயே பின்னால் இருக்கின்றது.

இலங்கை அரசு ஜெனிவாவில் ஒரு முகமும் இலங்கையில் மற்றொரு முகமும் காட்டுகின்றது. சுயநலகாரணங்களுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு வக்காலத்து வாங்குகின்றது.

**உண்மை, முழுமையான விசாரணை வேண்டும்**

முழுமையான உண்மை விசாரணை. இடம்பெற்று நீதிகிடைக்கவேண்டும். பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றி னூடாகவே எமது மக்களுக்கு நியாயம். நீதி கிடைக்கும். நடந்த கொடூரங்களைக் காலக்கெடு கொடுத்து மறைத்துவிடவா ஐக்கிய நாடுகள் இருக்கின்றது? ஏற்கனவே 10 வருடங்கள் பூர்த்தியாகி யுள்ளன. காலஅவகாசம் எதற்கு? நீங்களே சொல்லுங்கள்! - என்றுள்ளது. (த)

# ஜெனிவா ஒரு ரீக்கடை; றெமீடியஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஜெனிவா அமர்வு மூலமாக எமது மக்களுக்கு எந்தத் தீர்வும் ஏற்படப்போவதில்லை, அது ஒரு ரீக்கடை என்று யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் மு. றெமீடியஸ் தெரிவித்தார்.

சபையின் அமர்வு நேற்றுமுன்தினம்இடம்பெற்றபோது. ஜெனிவாவில் இலங்கைக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் தொடர்பில் சபை முதல்வர் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபை அமர்வின் நிறைவில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக் கூடாது என்ற தீர்மானத்தை உறுப்பினர் கிருபாகரன் சபையில் முன்வைத்தார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முதல்வர்,

ஜெனிவாவில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக் கூடாது என்ற தீர்மானத் தைத் தவிர மாநகர சபை உறுப்பினர்கள் கொண்டுவந்த தீர்மானங்களின் சாதக பாதக விடயங்களை ஆராய்ந்து அதனடிப்படையில் அவர்களுக்கு ஆதரவாகவேநடந்துகொண்டுள்ளேன். இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் உள்ள கால அவகாசம் என்பது கால அட்டவணையின் அடிப்படையிலேயே தற்போது வழங்கப்படவுள்ளது. அதை வேண்டாம் என்று கூறினால் நாங்கள் ஆரம்பப் புள்ளியிலேயே வந்து நிற்போம் என்று விளக்கினார்.

உறுப்பினர் யோகேஸ்வரி. அந்தத் தீர்மானம் தொடர்பில் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்துக்களையும் அறிய வேண்டும் என்று கோரினார்.

தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கின்றேன் என்று எழுந்த றெமீடியஸ், நான் வெளிப்படையாகச் சொல்கின்றேன். ஜெனிவா என்பது ஒரு ரீக்கடை. இதை 2013ஆண்டு நான் பகிரங்கமாகக் கூறி விட்டேன். அவரவர் தங்களைப் பிரபல் யப்படுத்துவதற்கு பயன்படுத்துகின்ற ஒரு சொல்தான் ஜெனிவா. அது கட்டளையிடுகின்ற. அல்லது திணிக்கின்ற அமைப்போ அல்ல. நாங்கள் இங்கு செய்கின்ற ஆர்ப்பாட்டங்கள். போராட்டங்களை கணக்கில் எடுக்க வேண்டிய அவசியமும் ஜெனிவாவுக்குக் கிடையாது - என்றார். (த-21)

# அதிபர், ஆசிரியர்களை பகடைகளாக்குகின்றன

## தொழிற்சங்கங்கள் மீது கல்வி அமைச்சு குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 14

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களைப் பகடைகளாகப் பயன்படுத்தி குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற ஒரு சில தொழிற்சங்கங்கள் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் தொடர்பில் மக்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்று கொழும்பு கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசு தயாராக உள்ள நிலையில், அதனைத் தமது சங்கங்களின் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியெனக் காண்பித்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கவனத்தைத்திசைதிருப்புவதற்குப்பலர் முயற்சிக்கின்றனர். ஆசிரிய சேவை சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சின் ஊடாக தயாரிக்கப்பட்ட யோசனைகள் தற்போது அரச துறை சம்பள கலந்தாய்வுக்கான ஆணைக்குழுவுக்குமுன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கான பரிந்துரைகள் வெகுவிரைவில் கிடைத்த பின்னர் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க திட்டமிட ப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கும் போது ஒரு சில தொழிற்சங்கங்கள் மக்களைத் திசைதிருப்பும் வகையில் முன்னெடுத்து வரும் வேலைநிறுத்த போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் பின்னால் குறுகிய அரசியல் நோக்கம் உள்ளது. அரசுக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள தொடர்பை நீக்கி, அரசின் மீது எதிர்ப்பை வலுவாக்குவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2016.03 அரச நிர்வாக சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின்படி அனைத்து அரச ஊழியர்களின் சம்பள அளவுத்திட்டம்திருத்தம்செய்யப்பட்டது. ஆசிரியர்களின் சம்பளமும் திருத்தி அமைக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 16,120 ரூபாவே அடிப்படைச் சம்பளமாக கிடைக்கப்பெற்றது. தற்போது அந்த தொகை 33,330 ரூபாவாக இரு மடங்கு அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் இலங்கை ஆசிரிய சேவைக் சங்கம் நேற்றுப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

(த)



# நடிகர் விவேக்குக்கு "கலைமகன்" விருது

யாழ்ப்பாணம்.மார்ச் 14

தென்னிந்திய திரைப்பட நடிகர் விவேக்கிற்கு இலங்கையை சேர்ந்த இலங்கை அல் மீஸான் பௌண்டேசன் அமைப்பினால் "கலைமகன்" விருது வழங்கிமதிப்பளிக்கப்பட்டது

மறைந்த முன்னாள் இந்திய அரச தலைவர் அப்துல் கலாமின் ஒரு இலட்சம் மரங்களை நடும் திட்டத்தை வெற்றிகரமாக செய்துவரும் விவேக்கின் சேவையை பாராட்டுவதுடன். அவர் சினிமா மூலம் பல நல்ல சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைக்கும் அந்த செயலுக்காக அவருக்கு "கலைமகன்" விருதை வழங்குவதாக தெரிவித்தனர். (ஐ)

# லிந்துலை தவிசாளர் ஐ.தே.கவில் இணைவு



பொகவந்தலாவ, மார்ச் 14

தலவாக்கலை லிந்துலை நகர சபைத் தவிசாளர் அசோக்க சேபால உத்தியோக பூர்வமாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இணைந்து கொண்டார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து கட்சி உறுப்பினராக இணைந்து கொண்டார்.

இவர் கடந்த காலங்களில் சிறிலங்கா பெரமுன கட்சியோடு இணைந்து செயற்பட்டு வந்தார். கட்சியில் அங்கீகாரம் கிடைக்காததால் அவர் சில மாதங்களாகச் சுயாதீன மாகச் செயற்பட்டு வந்தார். (த)

# அபிவிருத்தி தடைப்படுவதாக மத்திய வங்கி செயற்பட்டது

## அமைச்சர் கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

மத்திய வங்கி சில சந்தர்ப்பங்களில் நாட்டின் அபிவிருத்தி தடைப்படும் வகையில் செயற்பட்டுள்ளது என்று முன்னாள் நிதி அமைச்சரும் இந்நாள் மின்சக்தி, எரிசக்தி மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அநுரகுமார திசாநாயக்க, பெரும் எண்ணிக்கையிலான முறிகளை 7.85சதவீத வட்டியில் மத்திய வங்கி விநியோகித்தமைக்கான காரணம் என்ன? என்று கேட்டார்.

இதற்குப் பதிலளிக்கையில், கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(த-61)

அமைச்சரவைக் கூட்டங்களின் போது

## அலைபேசிகள் பயன்படுத்த அமைச்சர்களுக்குத் தடை!



கொழும்பு, மார்ச் 14
அமைச்சரவைக் கூட்டங்களின் போது, அமைச்சர்கள் அலைபேசிகளைப் பயன்படுத்த அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தடைவிதித்துள்ளார்.
அரசதலைவர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே, இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை கூட்டங்களின் போது, அமைச்சர்கள் அலைபேசியில் உரையாடுவதால் ஏற்படும் இடையூறுகளை கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சாதாரணதர பெறுபேறு இந்த மாத இறுதிக்குள்!

கொழும்பு, மார்ச் 14
கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதிக்குள் வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித இதனைத் தெரிவித்துள்ளார். பெறுபேறுகள் அடங்கிய பட்டியலைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.
கடந்த டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் 6 லட்சத்து, 56 ஆயிரத்து, 641 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். 4 ஆயிரத்து 461 நிலையங்களில் பரீட்சை நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கம்பர்மலைப் பகுதியில் வீடொன்றில் திருட்டு

கால்பந்தாட்டம் பார்க்கச்சென்ற சமயத்தில் திருடர்கள் கைவரிசை என்று முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 14
கம்பர்மலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுத் திருடப்பட்டுள்ளது. வீட்டின் உரிமையாளர்கள் கால்பந்தாட்டம் பார்க்கச் சென்ற சமயம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
4 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசி மற்றும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் என்பனவே அவ்வாறு திருடப்பட்டுள்ளன என்று அந்த முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-26)

புற்றுநோய் தாக்கத்தின் எதிரொலி

# அரச நிறுவனங்களுக்குள் வெற்றிலை, புகையிலைக்கு விரைந்து வருகிறது தடை

கொழும்பு, மார்ச் 14
அரச நிறுவனங்களுக்குள் வெற்றிலை, பாக்கு, புகையிலை உள்ளிட்டவற்றை பயன்படுத்தவும், விற்பனை செய்வதற்கும் அரசு தடைவிதிக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சரவையில் நேற்றுமுன்தினம் சமர்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் காரணமாக புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தில் கண்ணீர்ப்புகை!



கொழும்பு, மார்ச் 14
அரசால் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத் தடை சட்டத்தை உடனடியாகக் கைவிடுமாறு வலியுறுத்தி தலைநகர் கொழும்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரால் மாணவர்களுக்கு எதிராக கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பயன்பாடு மேற்கொள்ளப்பட்டது.
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சம்மேளனத்தின் இணைப்பாளர் மஹீல் தெஹிதெனிய பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். பாதுகாப்பு கடமைகளுக்கு இடையூறு விளைவித்து அநாகரிகமாக நடந்து கொண்டாரென அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்துக்கு நுழையும் வீதியில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதால் அந்த வீதி தற்காலிகமாக நேற்றுமுன்தினம் மூடப்பட்டது. (ம)

## கைதானார் ஜீ பூம்பா!

கொழும்பு, மார்ச் 14
பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கஞ்சிபான இம்ரானின், உதவியாளரான ஜீ பூம்பா கைது செய்யப்பட்டுள்ளார். கம்பளையில் வைத்து பொலிஸ் அதிரடி படையினர் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கஞ்சிபான இம்ரான் பாதாள உலக குழுத் தலைவர் மாகந்துரே மதூஷுடன் டுபாயில் வைத்து கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேலும் கஞ்சிபான இம்ரானின் முதன்மை உதவியாளர் மற்றும் அவருக்கு நெருக்கமான ஒருவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது மேலுமொரு உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மைத்திரிக்கு ஹிருணிகா சாட்டையடி

கொழும்பு, மார்ச் 14
போதைப்பொருளை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முதலில் தனது மகளுக்கு வழங்கியுள்ள மதுபான சாலைக்கான உரிமத்தை முதலில் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தினார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா.
அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து குழுநிலை விவாதம் தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.
இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

# குறுகிய அரசியல் நோக்கத்துக்கான போராட்டத்தால் 2 கோடியே 58 லட்சம் மணிநேரக் கற்கைகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14
ஆசிரியர்களின் கவனத்தை திசைத்திருப்பி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் தொழிற்சங்கங்களின் செயற்பாட்டால் மாணவர்களின் 2 கோடியே 58 லட்சம் மணிநேரக் கற்கை நேற்றுப் பாதிப்படைந்தது.
சம்பள முரண்பாடுகளை நீக்கு மாறும் ஆசிரியர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை நீக்கு மாறும் நாடாளாவிய ரீதியில் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், இந்தப் போராட்டத்தைக் கண்டித்து கல்வி அமைச்சு நேற்று அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
சம்பள முரண்பாடுகளை நீக்கு மாறும் ஆசிரியர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை நீக்குமாறும் கோரி வேலைநிறுத்த போராட்டத்தை நடத்தும் தொழிற்சங்கங்களின் சந்தர்ப்பவாத நோக்கங்களை நாட்டு மக்கள் மற்றும் கல்வி கட்டமைப்பில் சேவை புரிவோர் புரிந்துக்கொள்ள வேண்டும்.
ஆசிரியர்களுக்கு சம்பள முரண்பாடு இருப்பதாக 1997ஆம் ஆண்டு பீ.சீ பெரேரா கண்டறிந்ததுடன் இது தொடர்பாக சம்பள ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளை 22 வருடங்களாகியும் நடைமுறைப்படுத்தவில்லை என்ற தர்க்கத்தை முன்னிலைப்படுத்தியே தொழிற்சங்கங்கள் இன்றைய (நேற்றைய) வேலைநிறுத்த போராட்டத்துக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுள்ளன.
எனினும் 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசும் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் அரச நிர்வாக சுற்று நிருப ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக அனைத்து அரச ஊழியர்களின் சம்பள அளவுத்திட்டத்தை திருத்தி அமைத்தது. இதன்பிரகாரம் பட்டதாரி ஆசிரியர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 16 ஆயிரத்து 120 ரூபாவில் இருந்து 33 ஆயிரத்து 330 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு அப்பால் அதிபர்களின் சம்பளமும் இதற்கு சமாந்தரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் கல்வி அமைச்சால் விசேட யோசனைகள் அரச துறை சம்பளக் கலந்தாய்வு ஆணைக்குழுவிடம் முன்வைத்துள்ளதுடன் அதற்கான பரிந்துரைகளை ஆணைக்குழு அரசுக்கு வழங்கிய கையோடு சம்பள முரண்பாட்டு பிரச்சினைக்கு உரிய தீர்வை கல்வி அமைச்சு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும்.
இந்நிலையில் தமது குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே குறித்த வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப் படுவதாக தொழிற்சங்க தலைவர்கள் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கமொன்றின் தலைவருக்கு ஆசிரிய இடமாற்றல் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தனது மதிப்பைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்குடன் வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. மேலும் கல்வி கூட்டுறவு கடன் வழங்கல் சங்கமொன்றில் மோசடிக் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளான தொழிற்சங்கமொன்றின் தலைவரும் அவரது குழுவினரும் சங்கத்தின் அடுத்த தேர்தலில் ஆசிரியர்களின் ஆதரவை பெறும் நோக்கில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
தொழிற்சங்க நடவடிக்கைகளினால் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதுடன் ஒரு மாணவன் நாளொன்றுக்கான ஆறு மணிநேரம் கல்வி பயில்வதாக எடுத்துக்கொண்டால் இன்றைய (நேற்றைய) தொழிற்சங்க நடவடிக்கைளினால் நாடுபூராகவும் உள்ள 43 இலட்சம் மாணவர்களுக்கான இரண்டு கோடியே 58 இலட்சம் (25,800,000) மணிநேர கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே மாணவர்களையும் ஆசிரியர்களையும் பகடையாக பயன்படுத்தி தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் வேலைநிறுத்தம் தொடர்பில் மக்களும் கல்வி கட்டமைப்பில் சேவையில் ஈடுபடுவோரும் புரிந்துக்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (ம)

## இலங்கை...

பெற்ற கலந்துரையாடலின் பின்னரேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவின் தலைமையிலான இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம, வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், அயலுறவுத்துறை அமைச்சின் செயலர் ரவிநாத்த ஆரியசிங்க மற்றும் பிரதி சொலிஷிட்டர் நாயகம் நெரின்பிள்ளை ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை செயற்பாடுகளின் முன்னேற்றம் ஆகியவை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி பேரவையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பான பரிந்துரைத் தீர்மானம் எதிர்வரும் 21ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக, அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## வீதி...

ஒட்டுசுட்டான்கச்சிலை மடு வீதியால் மருத்துவமனையை நோக்கிப் பயணித்துள்ளார். இதன்போது குறித்த பெண் கீழே விழுந்து தலையில் காயமடைந்தார். அவர் உடனடியாக ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மறுநாள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-8)

## கச்சதீவு...

ஆலயத் திருவிழா இந்த வருடம் மார்ச் மாதம் 16ஆம் திகதி நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலயப் பங்குத்தந்தை, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், நெடுந்தீவு பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை கடற்படையினரின் பங்களிப்புடன் திருவிழாவை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வருடம் இலங்கையின் பல பிரதேசங்களில் இருந்தும் மற்றும் இந்தியாவில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 16ஆம் திகதி கச்சதீவில் நடைபெறும் திருவிழாவில் பங்குபற்றச் செல்லும் யாத்திரிகர்கள் திருவிழாவுக்கு முதல் நாள் 15ஆம் திகதி காலை கச்சதீவு சென்று இரவு தங்கியிருந்து மறுநாள் திருப்பலியில் கலந்துகொள்ள ஆவண செய்யப்பட்டுள்ளது. யாத்திரிகர்களுக்கான பேருந்துப் போக்குவரத்து வசதி யாழ் பேருந்து நிலையத்தில் இருந்து குறிக்காட்டுவான் வரை 15ஆம் திகதி காலை 3.30 மணியிலிருந்து செயற்படுத்தப்படும். படகுப்போக்குவரத்து வசதி குறிக்கட்டுவானில் காலை 4.30 மணியிலிருந்து பகல் 10.30 மணிவரை செயற்படுத்தப்படும். யாத்திரிகர்களுக்கான ஒருவழிப் படகுக் கட்டணமாக குறிக்காட்டுவானில் இருந்து கச்சதீவுக்கு 325 ரூபாவும், நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு 225 ரூபாவும் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாத்திரிகர்களுக்கான உணவுவசதி இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியார் கடைகள் ஆகியன இயங்குவதற்கும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. (ம)

(தொடர்புடைய செய்தி பக். 9)

## பல்கலைக்...

கழக மாணவர்களின் போராட்டத்துக்கு பல தரப்பிடம் இருந்தும் ஆதரவுகள் குவிந்து வருகின்றன.

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி இந்தப் போராட்டத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இந்த எழுச்சிப் பேரணிக்கு தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே சக்தியாய் ஐக்கிய நாடு மனித உரிமைப் பேரவையிடம் நீதி கோரிக் குரல் கொடுப்போம். அரசியல் வேறுபாடு இன்றி அனைத்துத் தரப்புக்களும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். போர் முடிந்து பத்து ஆண்டுகள் சென்றும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமலே உள்ளன. காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல் போனவர்களுக்கான தீர்வு மற்றும் பொறுப்புக் கூறலில் இருந்து எல்லாவற்றையும் அரசு தட்டிக் கழித்து வருகின்றது. ஐக்கிய நாடு மனித உரிமைப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் கூட அரசு நடைமுறைப்படுத்தாமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது. எனவே தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் வேறுபாடின்றி ஓரணியில் நின்று எமது உரிமைக்காக குரல் கொடுப்போம் என்றுள்ளது.

**தமிழ் தேசிய மக்கள் முன்னணி**

தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இந்தப் போராட்டத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுக்களால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை என்ன என்பது போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் தெரியாமலுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை ஐ.நா பாகாப்புச் சபை ஊடாக பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் அல்லது சிறப்புக் குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுத்தும் தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படல் வேண்டுமென வலியுத்தி யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) கட்சியினராகிய நாம் பூரண ஆதரவு தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

**தமிழ் மக்கள் கூட்டணி**

பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் கூட்டணியும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கின் சகல பல்கலைக் கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் இருந்து யாழ் முற்றவெளியை நோக்கி நடைபெற இருக்கும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணிக்கும் மட்டக்களப்பில் எதிர்வரும் 19ஆம் திகதி செய்வாய்க்கிழமை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் கதவடைப்பு மற்றும் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணிக்கும் தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ம)

## அரசதலைவர்...

ரிசை உறுப்பினர்கள் தெரிவித்திருந்த நிலையில், நிதியொதுக்கீடு வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை 2019ஆம் ஆண்டின் வர்வு - செலவு திட்டத்தில் அமைச்சரவை நிதி ஒதுக்கீடு தொடர்பில் விவாதம் நடைபெற்றது. ஆரம்பத்தில் இருந்தே ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் அரசதலைவருக்கான செலவீன தலைப்பு மீது வாக்கெடுப்புக் கோரி நிதி ஒதுக்கீட்டை குறைக்க வேண்டும் என்ற கருத்துக்களை முன்வைத்து உரையாற்றியிருந்தனர்.

அரசு அரச தலைவர் செயலகத்துக்கு நிதி ஒதுக்கியும் அரச தலைவரின் செயலகம் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றது. அரசதலைவர் தனது தனிப்பட்ட பழிவாங்கலை முன்னெடுக்கின்றார் என்ற காரணிகளை கூறி ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களான சரத் பொன்சேகா, ஹிருணிக்கா, முஜிபூர் ரஹ்மான், சமிந்த விஜயசிறி உள்ளிட்ட உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியிருந்தனர். எனினும் நேற்றைய வாக்கெடுப்பின் போது தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க வாக்கெடுப்பு அவசியமில்லை. நிறைவேற்றுங்கள் எனக் கூறியதை அடுத்து சபை முதல்வரும் அதனை வலியுறுத்தினர். இதையடுத்து வாக்கெடுப்பு நடத்தப்படாமல் ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டது. (ம)

## வடக்கு...

அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்த குழுநிலை விவாதம் தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தக் குழுநிலை விவாதத்தில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றிய போதே எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கை சார்பில் விளக்கமளிப்பதற்காக குழுவொன்று ஐ.நா செல்லவுள்ளது. அயலுறவுத்துறை அமைச்சரின் தலைமையில் செல்லவுள்ள அந்தக் குழுவில் நானும் உள்ளடக்கப்பட்டிருந்தேன். இதுதொடர்பாக நேற்று (நேற்றுமுன்தினம்) மாலை நாங்கள் அரச தலைவர் தலைமையில் கூடி ஆராய்ந்திருந்தோம். இதன்போது, நான் இம்முறை இந்தக் குழுவுடன் இணைந்து செல்லவில்லையென அரச தலைவரிடம் கூறினேன். கடந்த 10 ஆண்டுகளாக அங்கு சென்று வருகின்றேன். இதன் காரணமாகவே இம்முறை செல்லவில்லை. அத்துடன், கடந்த சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகைகளில் ஒரு செய்தியினைப் பார்த்தேன். அந்தச் செய்தியில் வடக்கு மக்கள் சார்பாக அவர்களினால் கையளிக்கப்படவுள்ள மனுக்களை வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் ஐ.நாவில் சென்று கையளிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. வடக்கு ஆளுநரால் அவ்வாறு ஒன்றும் செய்ய முடியாது. ஐ.நா ஒன்றும் தபால் நிலையம் அல்ல. இதனை புரிந்து கொள்ள வேண்டும்' - என்றார். (ம)

## பன்னாட்டு...

னாட்டுச் சிறப்புக் குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவுதலே போரால் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான ஒரேயொரு வழிமுறையாகும் என்று தெரிவித்தார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நேற்று இடம்பெற்ற பொதுவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து, அதற்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை அரசின் உயர்மட்டத் தலைவர்களான அரச தலைவரும், தலைமை அமைச்சரும் குற்றவியல் நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிராகரித்து வருகிறார்கள். இன அழிப்பால் பாதிக்கப்பட்டவர்களோ குற்றவியல் நீதியையும் பொறுப்புக்கூறலையும் கோரிநிற்க, இந்தக் கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், இன அழிப்பால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மத்தியில் வடக்கில் உரையாற்றிய தலைமை அமைச்சரோ மன்னிப்போம் மறப்போம் என்று வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

குற்றவியல் நீதியையும் பொறுப்புக்கூறலையும் தொடர்ச்சியாக இலங்கை அரசு நிராகரித்து வருகின்ற நிலையில், இது பாதிப்படைந்த மிகப்பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு, குற்றவியல் நீதியை வழங்க முடியாது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

தீர்மானத்தில் கூறப்பட்ட ஏனைய விடயங்களில் பெயரளவுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முன்னேற்றங்களாகக் காண்பிப்பதும், தாம் வழங்கிய உறுதிப்பாட்டை நிறைவேற்றாமல் காலத்தை இழுத்தடிப்பதும் இலங்கை அரசின் நேர்மையற்ற பண்பையும் கபடத்தனத்தையும் வெளிப்படுத்துகிறது. அதனடிப்படையில், இலங்கையை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைத்தல் அல்லது பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவுதலே பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான ஒரேயொரு வழிமுறையாகும் - என்றார். (ம)

## சிங்கங்களின்...

றக்கூடும். ஆனால், சிங்கப்படைக்கு ஒட்டகம் தலைமைத்துவம் வழங்கினால் போரில் வெற்றிபெறமுடியாது. இந்த அரசிலும் சிங்கம்போல் செயற்படக்கூடியவர்கள் இருக்கின்றனர். ஆனால், ஒட்டகமொன்றே தலைமைத்துவம் வழங்குகின்றது என்று அரச தலைவர் மைத்திரியை ஒரு பிடிபிடித்தார் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா.

நாடாளுமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் குழுநிலை விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றிபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களுக்கெல்லாம் அரச தலைவரே முதன்மைக் காரணம். அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு அவர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. எப்போது ஆட்சிகவிழும் என வழி மீது விழிவைத்து காத்திருப்பதுடன், விரைவில் அது நடந்தாக வேண்டும் என பிரார்த்தனையும் செய்கின்றார்.

அதுமட்டுமல்ல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நன்மை செய்தால்கூட தனது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக அதைத் தடுத்து நிறுத்தி, காலைவாரும் செயலில் இறங்கியுள்ளார். வெளிநாடுகளுடனான வர்த்தக உடன்படிக்கை, உயர்தர மாணவர்களுக்கு 'டெப்' வழங்கும் திட்டம் என அனைத்து விடயங்களிலும் எதிர்மறையான பார்வையையே அரசதலைவர் செலுத்தி வருகிறார். திட்டமிட்ட அடிப்படையில் தடைகளை ஏற்படுத்துகிறார். ஆட்சி கவிழவேண்டும், ஐக்கிய தேசியக் கட்சி ஒழிய வேண்டும், அடுத்த அரச தலைவர் தேர்தலில் தனக்கு வேட்புமனு கிடைக்க வேண்டும் என சிந்திக்கும் அரச தலைவர், தான் எதை சொன்னாலும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் செவிமடுப்பதில்லை என எமக்கு எதிராக விரல் நீட்டுகின்றார். அமைச்சர்கள் மட்டுமல்ல, இன்னும் ஐந்து, ஆறு மாதங்களில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கூட அரச தலைவரின் கருத்துக்கு கட்டுப்படமாட்டார்கள். இதுதான் யதார்த்தம்.

அன்று மகிந்த சிந்தனையை முன்னெடுத்த மகிந்த, எமது நெஞ்சில்தான் சுட்டார். அவருக்கு எதிராகப் போராடினோம். ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினோம். இறுதியில் மெதமுலனவில் ஜன்னலில் தொங்கவேண்டியநிலை அவருக்கு ஏற்பட்டது. ஆனால், இன்று மைத்திரி சிந்தனை எம் முதுகில் குத்துகின் றது.

ஒட்டகப் படைக்கு, சிங்கம் தலைமைத்துவம் வழங்கினால் போரில் ஒட்டகப்படை வெற்றி பெறக்கூடும். ஆனால், சிங்கப்படைக்கு, ஒட்டகம் தலைமைத்துவம் வழங்கினால் போரில் வெற்றிபெறமுடியாது. இந்த அரசிலும் சிங்கம்போல் செயற்படக்கூடியவர்கள் இருக்கின்றனர். ஆனால், ஒட்டகமொன்றே தலைமைத்துவம் வழங்குகின்றது. தலைமை அமைச்சரை அல்ல, அரச தலைவரையே நான் இவ்வாறு குறிப்பிடு கின்றேன். - என்றார். (ம)

## ராஜீவ்...

சென்னை, மார்ச் 14

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேர் விடுதலை குறித்து நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார். சென்னையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எனது தந்தை ராஜீவ் காந்தி கொலை என்பது எனது தனிப்பட்ட பிரச்சனையா...? ராஜீவ் காந்தி கொலை வழக்கு சட்ட பிரச்சினை தொடர்பானது. நீதிமன்றம்தான் ராஜீவ் காந்தி கொலையாளிகளை விடுதலை செய்வது குறித்து முடிவெடுக்க வேண்டும். சிறையில் இருக்கும் 7 பேர் மீது எனக்கு தனிப்பட்ட கோபம் எதுவும் இல்லை. 7 பேர் விடுதலை குறித்து உரிய காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க் வேண்டும்' - என்றார். (ம)

## பால்மாவுக்கு...

சந்தையில் நிலவும் விலை தொடர்பான விதிகளை கவனத்தில் கொண்டுநுகர்வோருக்கும் அரசுக்கும் பால்மா தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பெறுபேறு கிடைக்கும் வகையில் இறக்குமதியாகும் பால்மாவுக்கு விலை சூத்திரமொன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த விலைச் சூத்திரத்தை நுகர்வோர் அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய கிராமிய பொருளாதார அலுவல்கள் கால்நடை அபிவிருத்தி நீர்பாசன மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் பி.ஹெரிசன் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம)



புதுவகைத் திருமணம்

## மணமகனுக்கு மாங்கல்யம் சூட்டினார் மணமகள்

பெங்களூரு,மார்ச்.14

கர்நாடக மாநிலம் விஜயபுரா மாவட்டத்தில் பசவண்ணரின் (பழங்காலத்தில் கன்னட மாநிலத்தில் சாளுக்கிய மன்னரிடம் அமைச்சராகப் பணியாற்றியவர். சாதிப்பாகுபாடு, சடங்கு, உருவ வழிபாடு இவற்றைக் களைவதில் பெரிதும் ஈடுபட்டார்.

சமூக சீர்திருத்த வாதியாக விதவை, மறுமணத்தை ஆதரித்தும், குழந்தைத் திருமணத்தை எதிர்த்தும் செயற்பட்டவர்) கொள்கைகளைப் பின்பற்றும் சமூகத்தினர் நடத்திய திருமணத்தில் மணமகனின் கழுத்தில் மணமகள் தாலி கட்டினார்.

விஜயபுரா மாவட்டம் நாலத்த வாடா பட்டணம் கிராமத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தது. பசவண்ணரின் கொள்கைகளைப் பின்பற்றும் சமூகங்களைச் சேர்ந்தவர்களான பிரபுரா அங்கிதா, அமித் பிரியா ஆகிய இரண்டு இணைகளுமே இவ்வாறாகத் திருமணபந்தத்தில் இணைந்தனர். அத்தோடு திருமணத்துக்கு அழைக்கப்பட்ட அனைவருக்கும் பசவண்ணரின் தத்துவங்கள் அடங்கிய புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இவர்கள் திருமணத்தின்போது வேத மந்திரங்கள் ஓதமாட்டார்கள். கன்னிகாதானம், அட்சதை தூவுவது போன்றவற்றைச் செய்ய மாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தேர்தல் களம்

# சபரிமலை விவகாரம்தான் பரப்புரையில் எதிரொலிக்கும்

பா.ஜ.க. தெரிவிப்பு

திருவனந்தபுரம்,மார்ச்.14

இந்திய நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டிய பரப்புரைகளில் அரசியல் கட்சிகள் சபரிமலை விவகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று இந்தியத் தேர்தல் ஆணையகம் எச்சரித்திருந்தது. இந்த எச்சரிப்பை மீறும் வகையில் தேர்தல் பரப்புரையில் சபரிமலை விவகாரம்தான் முக்கிய பங்கு வகிக்கும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் கேரள மாநிலச் செயலர் சுரேந்திரன் கூறினார்.



நடக்கவிருக்கின்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது சபரிமலைப் பிரச்சினை பற்றிப் பரப்புரை செய்கின்ற அரசியல் கட்சிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேரள மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி டிகா ராம் மீனா எச்சரித்து இருந்தார். இதற்குச் சுரேந்திரன் எதிர்ப்புத் தெரிவித்தார். சபரிமலைப் பிரச்சினை தொடர்பாக மாநில அரசு எடுத்த நிலைப்பாடு பற்றியே நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் 100 சதவீதம் விவா திக்கப்படும்.

இதில் எவரும் தலையிட முடியாது. தேர்தல் பரப்புரையில் சபரிமலை விவகாரம்தான் முக்கிய பங்கு வகிக்கும். சபரிமலையில் இளம் பெண்கள் தரிசனம் செய்ய உதவிய ஆளும் கொம்யுனிஸ்ட் அரசின் மக்கள் விரோதச் செயலை எடுத்துக்கூறி பா. ஜ.க. பரப்புரை செய்யும். நாங்கள் அப்படிப் பரப்புரை செய்வதைத் தடுப்பதற்குத் தேர்தல் திணைக்களத்துக்கு அதிகாரம் இல்லை - என்றார்.

**சபரிமலை விவகாரம்**

அனைத்து வயதுப்பெண்களும் சபரிமலைக்குச் சொல்லலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து கடந்த 3 மாத காலமாகக் கேரள மாநிலம் முழுவதும் இந்து அமைப்புகள், பா.ஜ.கா வினர் போராட்டம் நடத்தினர். பிந்து, கனக துர்கா ஆகிய இரண்டு பெண்கள் சபரிமலைக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் சென்று தரிசனம் செய்தனர்.

இந்த விடயம் பரபரப்பை ஏற்படுத்தியது. பா.ஜ.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகள் போராட்டம் நடத்தின. கேரள அரசைக் கண்டித்து நடந்த முழு அடைப்புப் போராட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. சபரிமலையில் மண்டல பூஜை மற்றும் மகர விளக்குத் தரிசன காலம் வரை இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

# 13 பயணிகள் கடத்தல் 11 பொலிஸார் கொலை

ஆப்கானில் இருவேறு சம்பவங்கள்

காபூல்,மார்ச்.14


ஆப்கானிஸ்தானில் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்தவர்கள் 13 பேர் கடத்தப்பட்டனர். பிறிதொரு சம்பவமாகப் பொலிஸ் சோதனைச் சாவடி மீது தலீபான்கள் நடத்திய தாக்குதலில் 11 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் படாக்சான் மாகாணத்தில் இருந்து உடல் நலம் பாதிக்கப்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு பேருந்து ஒன்று தலைநகர் காபூல் நோக்கிப் பயணித்தது. அது பாக்லான் மாகாணத்தில் உள்ள பாக்லான் இ மர்காஷிப் பகுதியில் சென்றபோது இனம் தெரியாத நபர்களால் மறிக்கப்பட்டது. அதன்பிறகு பேருந்துக்குள் ஏறிய ஆயுதாரிகள், பயணிகளில் 13 ஆண்களைத் துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர்.

பாக்லான் மாகாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தலீபான்களின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதால், அவர்கள்தான் பஸ் பயணிகளைக் கடத்தி இருப்பார்கள் என்று இராணுவ அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.

ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த பிறிதொரு சம்பவமாக ஆப்கானிஸ்தானின் குவாலா இ நவ்வில் முகூர் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பதிவாகியிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் 11 பொலிஸார் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்துக்கும் தலிபான்களே காரணம் என்று கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது.



ஐ.எஸ். அமைப்பின் பிடியிலுள்ள சிரியாவின் கிழக்குப் பகுதியில், ஈராக் எல்லைக்கு அருகே அமைந்துள்ள பாகூஸ் நகரில் அந்த அமைப்புக்கும் அமெரிக்க ஆதரவுடன் செயல்படும் சிரியா அரச படைக்கும் இடையில் கடும் போர் நடக்கிறது. இறுதிப் போர் என்று வர்ணிக்கப்படும் இந்தப் பகுதியிலிருந்து சிரிய அரச படை யினர் மக்களை வெளியேற்றுகின்றனர்.

# ‘பிரெக்ஸிட்’ விவகாரம் இழுபறியில்

தீர்மானம் திரும்பவும் தோல்வி

லண்டன்,மார்ச்.14

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவதற்காகத் தயாரிக்கப்பட்ட ‘பிரெக்ஸிட்’ ஒப்பந்த வரைவுத் திட்டத்தைப் பிரிட்டன் நாடாளுமன்றம் இரண்டாவது முறையாகவும் நிராகரித்தது. ‘பிரெக்ஸிட்’ திட்டத்தின்படி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறும் பட்சத்தில் ஐரோப்பிய நாடுகளுடனான அதன் உறவு தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியமும் பிரிட்டனும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிடுகின்றன.

இதற்காகத் தயாரிக்கப்பட்ட முதல் வரைவு ஒப்பந்தத்தைப் பிரிட்டன் நாடாளுமன்றம் கடந்த ஜனவரி மாதம் அதிகபடியான வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தது. இதையடுத்து வரைவு ஒப்பந்தம் புதிதாகத் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக இரண்டாவது முறையாக முன்வைக் கப்பட்டது. இதன் மீது நடந்த வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகமானோர் அதற்கு எதிராக வாக்களித்தனர். பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரேசா மேயால் முன்வைக்கப்பட்ட இந்த ஒப்பந்தங்கள் தொடர் தோல்வியைச் சந்தித்துள்ளன.

இதையடுத்து, ஒப்பந்தம் ஏதும் இல்லாமலேயே ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறலாமா? என்பது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும்.

அதையும் நாடாளுமன்றம் ஏற்காவிட்டால், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பாக மீள ஆராயப்படும் என்று தெரிகிறது.



# பொள்ளாச்சி விவகாரம்; ஆழ விசாரிக்குமாறு உத்தரவு பிறப்பிப்பு

பொள்ளாச்சி,மார்ச்.14

முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்கள் வழியாக நண்பர்கள், சகோதரன் என்ற உறவு முறையோடு பெண்களோடு பழகி, அவர்களைத் தனியிடங்களுக்கு அழைத்துச் சென்று பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு நான்கு ஆண்கள் கைதாகியுள்ள சம்பவம் பொள்ளாச்சியில் பெரும் அதிர்வை ஏற்படுத்தி உள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட நான்கு அலைபேசிகளில், நான்கு பெண்களை இந்தக் குழு பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதைக் காட்டும் காணொலிகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால், இவர்களால் 200க்கும் மேற்பட்ட பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்த வழக்கைக் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு மாற்ற வேண்டும், புலனாய்வில் பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும், அந்தப் பகுதியில் அண்மைக் காலங்களாக தவறான முடிவெடுத்துக் கொண்ட இளம் பெண்களின் வழக்கினை மறு ஆய்வுக்கு உட்படுத்தி, அவர்களின் சாவுக்கும் இந்த நபர்களுக்கும் தொடர்புள்ளதா என விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம்.

இந்த நிலையில் இந்த வழக்கைப் பொலிஸாரிடம் இருந்து, சி.பி. சி.ஐ.டி. பிரிவுக்கு மாற்றுமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## பாலியல் முறைகேடுகளின் எதிரொலி

# போப்பின் நிதி ஆலோசகருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை

மெல்போர்ன்,மார்ச்.14


**போ**ப் ஆண்டவரின் நிதி ஆலோசகரான ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கார்டினல் ஜோர்ஜ் பெல் இழைத்த பாலியல் முறைகேடுகள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



போப் ஆண்டவர் பிரான்சிஸ்சின் நிதி ஆலோசகரான கார்டினல் ஜோர்ஜ் பெல் (வயது 75) ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். போப் ஆண்டவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இவர்மீது, நீச்சல் குளம் ஒன்றில் வைத்துத் தங்களிடம் தவறாக நடந்ததாகவும், முறையற்ற விதத்தில் தொட்டதாகவும் 40 வயதையுடைய ஆண்கள் இருவர் 1970ஆம் ஆண்டில் குற்றம் சுமத்தினர். இதேபோல 3 சிறுவர்கள் முன்பாக ஜோர்ஜ் பெல், தனது உடலை நிர்வாணமாக்கிக் காட்டியவாறு நின்றார் என்று 1980ஆம் ஆண்டுகளில் முறைப்பாடு எழுந்தது.

அத்துடன் மெல்போர்ன் நகரில் பிஷப்பாகப் பணிபுரிந்தபோது, உள்ளூர் மத குருமார் மீது சுமத்தப்பட்ட பாலியல் முறைப்பாடுகளை அவர் சரியான விதத்தில் கையாளவில்லை என்றும் கூறப்பட்டது. இந்த வழக்குக் குறித்த விசாரணை மெல்போர்ன் நீதி மன்றில் நடந்து வந்தது.

தற்போது இந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டுக் கார்டினல் ஜோர்ஜ் பெல்லுக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



**போப் கவனம் செலுத்திய பின்பான தீர்ப்பு**

கடந்த மாதம் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் செய்திருந்த போப் பிரான்சிஸ், கத்தோலிக்கத் திருச்சபைகளில் கன்னியாஸ்திரிகள் பாலியல் அடிமைகளாக நடத்தப்படும் பிரச்சினை இருக்கிறது. அவர்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதை முதன்முறையாக ஏற்றுக்கொண்டிருந்தார்.

சிறுவர்கள் மீதான பாலுணர்வு நாட்டம் எனும் பேசு பொருளில் உரோமன் கத்தோலிக்க தேவாலயங்களை உள்ளடக்கி வத்திக்கானில் நடந்த மாநாட்டில் குழந்தைகள் மீதான பாலியல் வதைகளைத் தடுப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.


பாலியல் முறைகேடுகளில் ஈடுபடும் குற்றவாளிகள் சாத்தானின் கருவிகள். இந்த முறைகேடு சார்ந்த ஒவ்வொரு வழக்கும் அதிக அக்கறையோடு கவனத்தில் கொள்ளப்பட்டு, விசாரிக்கப்படு மென்று அவர் உறுதியளித்திருந்தார். இந்த நிலையிலே மேற்படித் தீர்ப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ‘போயிங் 737 மேக்ஸ்’ பல நாடுகளில் தடை அமெ.வில் தொடர் சேவை




கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இந்தோனேசியாவிலும், அண்மையில் எதியோப்பியாவிலும் விபத்துக்குள்ளாகிய போயிங் 737 மேக்ஸ் 8 ரக வானூர்திகளில் பயணித்த அனைவரும் சாவடைந்தனர். இந்த நிலையில், குறித்த ரக வானூர்திகளை நிறுத்தி வைப்பதற்குச் சீனா உத்தரவிட்டது. இப்போது இந்த வகை வானூர்திகளை இயக்குவதற்கு மலேசியா, பிரிட்டன், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, சீனா, எதியோப்பியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் தற்காலிகத் தடை விதித்துள்ளன. மேலும் சில நாடுகள் குறித்த வானூர்தியின் பாதுகாப்புத் தன்மை குறித்து ஆய்வு செய்து வருகின்றன. எனவே, அமெரிக்க நிறுவனமான போயிங்குக்கும் அமெரிக்க அரசுக்கும் அழுத்தம் அதிகரித்துள்ளது.

ஆனாலும் அமெரிக்காவில் இந்த வானூர்திச் சேவை தொடர்கிறது. குறித்த வானூர்திகளைத் தாம் தரையிறக்குவதற்கு எந்த அடிப்படைக் காரணமும் இல்லை என அமெரிக்க வான் போக்குவரத்துக் கழகம் தெரிவித்தது. பிரச்சினை இருப்பதைக் கண்டறிந்தால், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்கத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளின் வானூர்தி நிறுவனங்கள் இந்த ரக வானூர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக ஏராளமான முற்பதிவுகளைச் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.







அமெரிக்காவின் தலையீட்டாலும், தடைகளாலும் வெனிசுலாவின் அரசியல், பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. வெனிசுலா மக்கள் வறுமையில் வாடுகின்றனர். உணவு, மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. மின் தடை நிலவுகிறது. மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பெரும் சவால்களை எதிர் கொள்கின்றனர். சிகிச்சைகளை மேற்கொள்ள இயலாத நிலையில் அவர்கள் மருத்துவமனைக்கு முன்பாகப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

## இன்றைய நாள்

**மேடம்:** யாரிடமும் பொது விடயம் பேச வேண்டாம். உடல்நலனில் தகுந்த கவனம் கொள்வது நல்லது. தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். அதிக அளவில் பணம் செலவழிப்பதை தவிர்க்கவும்.

**இடபம்:** ஆர்வமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். வியத்தகு அளவில் நன்மை கிடைக்கும். தொழில் வளம் சிறந்து வாழ்க்கைத்தரம் உயரும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** பகைவரிடம் இருந்து விலகுவது நல்லது. முக்கிய பணி நிறைவேற மாற்று உபாயம் தேடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** தாயின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தாமதமான செயல்கள் கூட எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரம் வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். அதிக பணவரவால் சந்தோஷம் கொள்வீர்கள்.

**சிம்மம்:** வெகுநாள் திட்டமிட்ட பணி நிறைவேறும். தொழில் வியாபாரம் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். தாராள அளவில் பணவரவு வந்து சேரும்.

**கன்னி:** செயல் நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும். தொழிலில் உள்ள அனுகூலத்தை தவறாமல் பாதுகாப்பது நல்லது. செலவில் சிக்கனம் பின்பற்றுவது சிரமத்தை தவிர்க்கும்.

**துலாம்:** நண்பரின் செயலை குறைசொல்ல வேண்டாம். அதிக உழைப்பால் தொழில் வியாபார நடைமுறையைசீர்படுத்துவீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உணவுப்பொருள் தரமறிந்து உண்பது நல்லது.

**விருச்சிகம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். அதிக உழைப்பால் தொழில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தினரின் தேவையறிந்து தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** திகைப்பு தந்த பணி எளிதில் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க அனுகூலமான சூழ்நிலை அமையும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மகரம்:** சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். எதிர்பாராத வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**கும்பம்:** முக்கிய செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். தொழில் வியாபத்தில் உள்ள அனுகூலங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம்.

**மீனம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதலாக பணிபுரிவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேரும்.

# தேசிய குத்துச்சண்டைப் போட்டியில் பதக்கங்களை அள்ளிய வவுனியா

வவுனியா, மார்ச் 14

தேசிய ரீதியில் நடைபெற்ற வூசு குத்துச் சண்டைப் போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த வீரர்கள் 15 பதக்கங்களை தமதாக்கிக் கொண்டுள்ளனர். கண்டி மாநகர சபை மண்டபத்தில் கடந்த 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் பாடசாலை மட்ட வூசு குத்துச் சண்டைப் போட்டி நடைபெற்றது. வவுனியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்கள் 9 தங்கப் பதக்கங்களையும், 6 வெள்ளிப் பதக்கங்களையும் கைப்பற்றினார்கள்.

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியைச் சேர்ந்த ச.சஞ்சயன், தி.நாகராஜா, பா.ராகுல், ம.பிரகத்தியன், கோவில்குளம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த க.டிலக்சினி, எம்.கிசாளினி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வி.வசீகரன், காமினி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.கிருபாலினி, நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தைச்சேர்ந்த க.நிரோஜன் ஆகியோர் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்தனர்.

வெள்ளிப் பதக்கங்களை, வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியைச் சேர்ந்த



முகமட் றிஸ்கான், இலங்கை திருச் சபை தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த கெ.கெவின், கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சிறிதர்சன், காமினி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.நவப்பிரியா, எஸ்.துலக்சனபிரியா, கந்தபுரம் வாணி வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.றோகினி ஆகியோர் கைப்பற்றினார்கள். (ஒ.110)

## இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சரஸ்வதி விளையாட்டுக் கழகஅணியைஎதிர்த்துமாவத்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

ççç

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

çççç

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)



## ஐக்கியம் வி.கவை வீழ்த்தி வென்றது பல்கலை அணி

யாழ்ப்பாணம், மார்ச் 14

அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி வெற்றி பெற்றது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி சார்பில் கீர்தனன் மூன்று கோல்களையும், சதுர்சன் ஒரு கோலையும் பதிவு செய்தார். (ஒ.23)

## துடுப்பாட்டத் தொடரில் அசத்தியது பிறைட் வி.க.

யாழ்ப்பாணம், மார்ச் 14

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியில் நடத்தப்படும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் மானிப்பாய் பிறைட் விளையாட்டுக்கழக அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அரியாலை சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் மானிப்பாய் பிறைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி புளூ வோரியஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி புளூ வோரியஸ் விளையாட்டுக்கழக அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களை பெற்றனர். கிரிசாந் 26 ஓட்டங்களையும், மகேஸ் 10 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மானிப்பாய் பிறைட் விளையாட்டுக் கழக அணி சார்பில் செல்வன் 2 இலக்குகளையும், கிரி ஓர் இலக்கினையும் கைப்பற்றினார். 42 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி மானிப்பாய் பிறைட் விளையாட்டுக்கழக அணியினர் 4.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழத்து 42 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றனர். செல்வன் 22 ஓட்டங்களையும், தனுஸ்ரன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அளவெட்டி புளூ வோரியஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் கிரிசாந், மயூரன், வஜிதரன் மூவரும் தலா ஓர் இலக்கினைக் கைப்பற்றினார்கள். (ஒ.23)

## மேசைப்பந்தாட்ட வீரர்களுக்கு காலணிகள்

யாழ்ப்பாணம்.மார்ச் 14

கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் செயற்திட்டங்களில் கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தின் அதிபரால் கழகத்துக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 12 மேசைப்பந்தாட்ட வீரர்கள் 12 பேருக்கான 42ஆயிரம் ரூபா பெறுமதியான காலணிகள் கழகத்தினரால் நேற்று வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியை புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் ஜெயந்திரன் வழங்கிவைத்துள்ளார். (சு-222)

## நிர்வாகத் தெரிவு 17ஆம் திகதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் வை.ஆனந்த ஜெஸ்கரன் தலைமையில் சுன்னாகத்திலுள்ள கண்ணகி மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. (ஒ.5)

## சென்.அன்ரனிஸ் அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி மோதியது. 7:2 கோல்கணக்கில் அபார வெற்றியைப் பெற்றது சென்.அன்ரனிஸ். அரியாலை 100ஆவது சுதேசிய திரு நாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியான கால்பந்தாட்டத் தொடர். அரியாலை கால்பந்தாட்ட பயிற்சிமைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் ஐக்கியம் விளை யாட்டுக்கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் அன்ரனிஸ் அணி 7:2 கோல்கணக்கில் வெற்றி பெற்றது. சென். அன்ரனிஸ் சார்பில், கலிஸ்ரஸ் 5 கோல்களைப் பதிவு செய்தார். (ஒ.23)





## கவாயா இரண்டாவது சதம்

ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் உஸ்மன் கவாயா ஒருநாள் போட்டியில் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்தத் தொடரின் மூன்றாவது போட்டியில் இவர் தனது முதல் சதத்தைப் பதிவு செய்திருந்தார். மீண்டும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று தனது இரண்டாவது சதத்தைப் பதிவு செய்தார். நான்காவது போட்டியிலும் 91 ஓட்டங்களுடன் சதத்தைத் தவறவிட்டு ஆட்டமிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இவர் இந்தத் தொடரில் நான்கு முறை 50 ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையைப் படைத்தார். முதல் போட்டியில் 50 ஓட்டங்கள், இரண்டாவது போட்டியில் 38 ஓட்டங்கள், 3ஆவது போட்டியில் 104 ஓட்டங்கள் 4ஆவது போட்டியில் 91 ஓட்டங்கள், இறுதிப் போட்டியில் 100 ஓட்டங்கள் பெற்றார்.

இவரின் துடுப்பாட்டத் திறன் ஆஸ்திரேலியா உலகக் கிண்ண அணிக்கு பெரும் பக்க பலமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.





### தொடரைக் கைப்பற்றி

# ஆஸ்திரேலியா அபார வெற்றி

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இறுதி ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா அணி 35 ஓட்டங்களால் வெற்றி பெற்று 3:2 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆஸ்திரேலியா அணியின் ஆரம்பத் துடுப்பட்ட வீரர்களாக கவாயா, பின்ஞ் களமிறங்கினர். இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். அணி 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பின்ஞ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் ஹன்ட்ஸ்ஹோம்ப். இருவருக்குமிடையிலான இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான அடித்தளத்தை இட்ட போதும் பின்வரிசை வீரர்கள் சொதப்பியிருந்தனர். அதிகபட்சமாக கவாயா 100 ஓட்டங்களையும், ஹன்ட்ஸ்ஹோம்ப் 52 ஓட்டங்களையும் பெற்றனர். எதிர்பார்த்த மக்ஸ்வெல் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினார். கடந்த போட்டியில் அதிரடி காட்டிய ரேனர் 20 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் புவனேஸ்குமார் 3 இலக்குகளையும், மொகமட் சமி, ஜடேஜா தலா இரண்டு இலக்குகளையும், குல்தீப் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தவான், ரோகித் களமிறங்கினர். அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தவான் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணி 150 ஓட்டங்களை எட்டுவதற்குள் 6 இலக்குகளை இழந்து தடுமாறியது. துடுப்பாட்ட வீரர்களில் ரோகித் சர்மாவைத் தவிர ஏனைய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்கவில்லை. அவர் 56 ஓட்டங்களையும், யாதவ் 44 ஓட்டங்களையும், புவனேஸ்வகுமார் 46 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 237 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் சம்பா 3 இலக்குகளையும், கம்மின்ஸ், றிச்ஹட்சன், ஸ்ரோனிஸ் தலா 2 இலக்குகளையும், லயன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகன், தொடராட்ட நாயகன் விருதுக்காக ஆஸ்திரேலியா அணியின் உஸ்மன் கவாயா தெரிவு செய்யப்பட்டார்.

### இராணுவத் தொப்பி விவகாரம்

## விதிமீறல் அல்ல ஐ.சி.சி. முற்றுப்புள்ளி

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணியினர் புல்வாமா தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும், நாட்டு மக்கள் தேசிய பாதுகாப்புத் துறைக்கு நிதி வழங்குவதை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இராணுவத் தொப்பியை அணிந்து களமிறங்கினர். அந்தப் போட்டியில் இந்திய அணியினர் தோல்வியடைந்திருந்தனர்.

இந்த நிலையில் இராணுவத் தொப்பி அணிந்து களமிறங்கியமைக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது கண்டனத்தை வெளியிட்டதோடு பன்னாட்டுக் கிரிக்கெட் சபை இவ்வாறான செயற்பாடுகளுக்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாகிஸ்தான் அமைச்சர்கள் சிலர் இவ்வாறான செயற்பாடுகளில் இந்திய அணியினர் ஈடுபட்டால் காஷ்மீர் எல்லையில் இந்திய இராணுவத்தினர் செய்யும் அட்டூழியங்களை உலகறியச் செய்வதற்காக உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் அணி கையில் கறுப்புப் பட்டி அணிந்து களமிறங்கும் என்றும் எச்சரித்தனர்.

இதற்கு பன்னாட்டுக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவிக்கையில்;



இராணுவத் தொப்பியை பயன்படுத்துவது தொடர்பில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முன்கூட்டியே எங்களுடன் ஆலோசனை நடத்தியது. இது விதிமீறல் அல்ல என்று உறுதி செய்யப்பட்ட பிறகே அந்த விசேட தொப்பியை இந்திய வீரர்கள் அணிந்தனர். இது நலநிதி திரட்டும் முயற்சியின் ஒரு பகுதியாகும் என்று பன்னாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செய்தித் தொடர்பாளர் விளக்கம் அளித்து பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

## இலங்கை அணியில் மீண்டும் மாற்றம்




இலங்கை அணியின் தலைமைத்துவத்தில் மீண்டும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

லசித் மலிக்க தலைமையிலான இலங்கை அணி தென்னாபிரிக்கவுடன் இடம்பெற்று வரும் ஒருநாள் தொடரில் கடும் பின்னடைவை சந்தித்துள்ளது. அது மாத்திரமின்றி மலிங்க தலைமையின் கீழ் இலங்கை அணி இதுவரை தென்னாபிரிக்க அணியுடன் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடி தோல்வியைச் சந்தித்துள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கை அணிக்கு எதிர் வரும் உலகக் கிண்ணத் தொடரில் புதிய தலைவரை நியமிக்க இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணி தென்னாபிரிக்க அணியை சொந்த மண்ணில் வீழ்த்தி சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

# ரியல் மட்ரிட் அபார வெற்றி

ஸ்பானியக் க்ழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் ரியல் மட்ரிட் அணி 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட் - வள்ளாடாய்டு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற முதலாவது பாதி ஆட்டத்தில் வள்ளாடாய்டு அணி வீரர் மொகமட் சுமாய் 29ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டார். 36ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் ரபேல் வர்னே ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து 51ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை அந்த அணியின் வீரர் பென்ஸிமா கோலாக மாற்றியிருந்தார். மீளவும் அவர் 59ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டார். அந்த அணி 3:1 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது. ஆட்டம் விறுவிறுப்பான போது ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் காஸ்மிரோ 85ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட ரியல் மட்ரிட் அணி 4: 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.





# யாதவுக்கு ஹைடன் புகழாரம்

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் வீசும் பந்துகளை எதிர்கொள்வது கடினம் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மத்யூ ஹைடன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

இந்திய அணியில் தற்போது குல்தீப் யாதவ், யுவேந்திர சாஹல் ஆகிய 2 சிறப்பான சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இருவருமே மிகத் திறமையாக பந்துவீசுகிறார்கள். ஒருநாள் போட்டி, ரி-20 போட்டிகளில் உலகின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்களை தங்களது பந்துவீச்சால் பயமுறுத்தி வருகின்றனர்.

மணிக்கட்டு சுழற்பந்து வீச்சாளர்களின் பந்துகளை எதிர்கொள்வது எப்போதுமே கடினமாக இருக்கும். வழக்கமாக விரல்களைச் சுழற்றி பந்துவீசும் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு தைரியம் சற்று குறைவே. ஆனால் மணிக்கட்டு சுழற்பந்து வீச்சாளர்கள் தைரியமாக பந்துகளை வீசி எதிரணி வீரர்களை மிரட்டுவார்கள்.

அந்த வகையில் குல்தீப் யாதவ் பந்துவீச்சை எதிர்கொள்வது கடினம். அவரது பந்துவீச்சு முறையைப் பார்த்தால், எங்கள் அணியின் முன்னாள் வீரர் ஷேன் வோர்னே பந்துவீச்சைப்போல் உள்ளது. வோர்னே வீசும் பந்து, காற்றிலேயே சுழன்று வரும். அதைப் போலவே குல்தீப் யாதவின் பந்தும் இருக்கின்றது- என்றார்.

# அம்லா திடீர் விலகல்

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கிடையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் இடம்பெற்று வருகின்றது. முதல் மூன்று போட்டிகளிலும் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

இறுதி இரண்டு போட்டிக்கான தென்னாபிரிக்கா அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அதில் காயமடைந்த டுமினி அணியில் இடம்பிடித்தார். அத்தோடு ஹசிம் அம்லாவும் இடம் பிடித்திருந்தார். அவரது தந்தை உடல் நலக் குறைவால் இருப்பதால் இறுதி இரண்டு போட்டிக்கான




அணியில் இருந்து திடீரென விலகினார். அவருக்குப் பதிலாக ரீசா ஹென்ரிக்ஸ் இணைக்கப்பட்டார்.



# ரொனால்டோ ஹட்ரிக் கோல்
# யுவான்டாஸ் காலிறுதிக்கு

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற சம்பியன் லீக் கால்பந்தாட்டத் தொடரில் யுவன்டாஸ் அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

யுவான்டஸ் - அட்லெடிகோ மட்ரிட் அணிகளுக்கு இடையிலான முதல் பாதி ஆட்டத்தில் 27 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ ஒரு கோலைப் போட்டார். மீளவும் ரொனால்டோ 49ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட யுவன்டாஸ் அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் காணப்பட்டது.


இரண்டாவது பாதி ஆட்டத்தில் அட்லெடிகோ மட்ரிட் அணி வீரர்கள் ஆக்ரோசமாக தங்கள் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். எனினும் யுவான்டஸ் அணி சொந்த மைதானத்தில் விளையாடியதால் ரசிகர்கள் அதிக அளவில் ஆதரவு அளித்தனர். இதனால் யுவான்டஸ் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர் 89ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி ரொனால்டோ மீண்டும் ஒரு கோலைப் போட யுவான்டாஸ் அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. இதில் ரொனால்டோ ஹட்ரிக் கோல்களை அடித்து அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

# ரிஷப் பந்துடன் டோனியை ஒப்பிடுவதா

## பரத் அருண் காட்டம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா அணி வெற்றி பெற்றிருந்தது. இந்திய அணியின் தோல்விக்கு ஒரு வகையில் ரிஷப் பந்தும் காரணமாக இருந்தார். இவர் முக்கியமான கட்டத்தில் ஸ்டம்பிங்கை கோட்டை விட்டார். அது தான் ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்திருந்தது. அதைத் தொடர்ந்து டோனியுடன் ஒப்பிட்டு ரிஷப் பந்தை ரசிகர்கள் கடுமையாக விமர்சித்தனர்.

இதுகுறித்து இந்திய பந்து வீச்சு பயிற்சியாளர் பரத் அருண் தெரிவித்ததாவது; ரிஷப் பந்தை டோனியுடன் ஒப்பிட்டு பேசுவது



நியாயமற்றது. டோனி இலக்குக் காப்பாளர் பணியைச் செய்வதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறார். மேலும் அணித் தலைவர் கோலிக்குத் தேவையான நேரத்தில் ஆலோசனைகளை வழங்குகிறார்' - என்றார்.

# 2019 உலகக் கிண்ணம் இங்கிலாந்துக்கு வாய்ப்பு

2019 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் மே மாதம் ஆரம்பமாகின்றது. கடந்த நான்கு வருடங்களாக ஒருநாள் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும்இங்கிலாந்துஅணிமுதன்முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. இந்நிலையில் சொந்த மண்ணில் விளையாடுவது இங்கிலாந்து அணிக்கு கூடுதல் சாதகமாக இருக்கும் என முன்னாள் வீரரும், வர்ணனையாளருமான மைக்கேல் வாகன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்; தற்போது இங்கிலாந்தின் சொந்த மண்ணில் உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பமாகவுள்ளதால் இங்கிலாந்து அணிக்கு சாதகமாக இருக்கும்.

மோர்கன் மிகவும் தலைசிறந்த அணித் தலைவராகத் திகழ்கிறார். அவர் கடந்த நான்கு வருடங்களாக அணியை சிறப்பாக வழி நடத்திச் வருகிறார். அவர்கள் பயமின்றி விளையாடி வருகின்றனர். இதனால் அவர்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். இதைவிட சிறப்பாக விளையாட வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இங்கிலாந்து அணி தற்போது உலகின் சிறந்த அணியாக திகழ்கிறது. இதைக் கடந்த நான்கு வருடங்களாக நிரூபித்துள்ளனர். ஆனால் இன்னும் சில அணிகளுக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆஸ்திரேலியா அணி தற்போது சில வீரர்களை இணைத்து நல்ல நிலமைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் - என்றார்.

# ரசிகர்களுக்கு ஹைதராபாத் சன்ரைசர்ஸ் இன்ப அதிர்ச்சி

ஆரம்பமாகவுள்ள 12 ஆவது ஐ.பி.எல். போட்டியில் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் வகையில் 25 ஆயிரம் ரசிகர்களுக்கு 500 ரூபா டிக்கெட் வழங்கப்போவதாக ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி அறிவித்துள்ளது. இதை அந்த அணியின் வீரர் டேவிட் வோர்னர் பகிர்ந்துள்ளார்.

பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் ஓராண்டு தடை விதிக்கப்பட்ட வோர்னர் கடந்த வருடம் ஐ.பி.எல். போட்டியில் இடம் பெறவில்லை. ஆனால், இந்த ஆண்டு தான் அணிக்குள் இடம் பெறுவதை உறுதிசெய்து அணி நிர்வாகத்தின் இந்தச்செய்தியை ருவிட்டரில் பகிர்ந்து கொண்டார் அவர்.

சொந்த மண்ணில் நடக்கும் முதல் ஆட்டத்தைக் காண வரும் ரசிகர்களில் 25 ஆயிரம் பேருக்கு 500 ரூபா டிக்கெட் வழங்கப்படும் என்று சன்ரைசர்ஸ் நிர்வாகம் அறிவித்துள்ளது. இதற்கான டிக்கெட் விற்பனை 13ம் திகதி ஆரம்பமாகின்றது.

உங்கள் வாழ்வை மேலும் வளப்படுத்த ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள்
திரு.ஷாம்சன் அவர்களின்
3 மாத சனி ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் : 16.03.2019
1. காலை 08-10 2. மாலை 03.05
[illegible]
3 மாத பயிற்சிக்கட்டணம் வெறும் 3000 மட்டுமே
SAMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
077 621 4567
021 222 4282

தேவை
யாழில் இயங்கும் பிரபல IT நிறுவனம் ஒன்றுக்கு A/L தகைமையுள்ள வேலையாள் (பெண்) தேவை.
077 376 7899
(CS 23977) (14.17)

# டோனி இல்லாததால் சிரமப்படுகிறார் கோக்லி

## சாடுகிறார் பிஷன் சிங் பெடி

ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற நான்காவது போட்டியில் இந்திய அணி களத்தடுப்பில் கோட்டை விட்டதனால் தோல்வியைத் தழுவியிருந்தது. இந்த நிலையில் இதற்கு பல்வேறு விமர்சனங்கள் எழுந்திருந்தன. அந்த வகையில், டோனி இல்லாமல் இந்திய அணி இலக்குக் காப்பாளர் பணி யில் திணறியது தெளிவாகத் தெரிந்தது என்றும், முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் பிஷன் சிங் பெடி சாடியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

டோனிக்கு இறுதி இரண்டு போட்டிகளில் ஓய்வு அளிக்கப்பட்டது ஏன்? என்று தெரியவில்லை. இது தொடர்பாக நான் யார் மீதும் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. ஆனால் அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது ஆச்சரியமானது. டோனி இல்லாதது இந்திய அணியில் பாதிப்பை வெளிப்படுத்தியது. அவர் அணிக்கு பாதி அணித் தலைவராகத் திகழ்கிறார்.

டோனி இளம் வீரர் இல்லை. ஆனாலும் அவர் அணிக்கு தேவைப்படுகிறார். அணியை அமைதிப்படுத்தும் தன்மை அவரிடம் உள்ளது. அணித் தலைவர் கோக்லியும் அவரை சார்ந்துள்ளார். டோனி இல்லாததால் அவர் கடினத்தன்மையுடன் இருந்தார். இது இந்திய அணிக்கு நல்லதல்ல. உலகக் கிண்ணத்துக்கு இன்னும் 2 மாதங்களே உள்ளன. கடந்த ஒரு ஆண்டாகவே இந்திய அணி நிர்வாகம் சோதனை செய்து வருகிறது. ரிசப்பந்த்துக்கு பல்வேறு அறிவுரைகள் தேவை. ஏற்க



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.